# சந்திரபதன் கதை


பதிப்பாசிரியர்

வா.நூ. கலீலுல்லா



உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்

- சென்னை - 113

# சந்திர பதன் கதை

(இசுலாமிய இலக்கியம்)


பதிப்பாசிரியர்

**வா. நூ. கலீலுல்லா.** எம்.ஏ.



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

டி. டி. டி. ஐ. தரமணி

சென்னை-600 113

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Cantra Patan Katai |
| Author | : | V. N. Khaleelullah, M.A. |
| Publisher | : | International Institute of Tamil Studies, Madras - 113. |
| Publication Number | : | 227 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | January, 1996 |
| Paper used | : | 16 kg Creamwove |
| Size of the book | : | 1/8 Demmy |
| Printing types used | : | 10 Point |
| Number of copies printed | : | 1,200 |
| Number of Pages | : | XII + 184 |
| Price | : | Rs. 40/- |
| Binding | : | Paper Pack |
| Artist | : | Jegan |
| Subject | : | Folk ballad |


வெள்ளி விழா வெளியீடு

முனைவர் **ச. சு. இராமர் இளங்கோ**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# அணிந்துரை

சந்திரபதன் கதை என்ற இசுலாமியக் கதைச் சுவடி பதிப்பிக்கப்பெற்று, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வெள்ளி விழா வெளியீடாக வருகின்றது.

இச்சுவடி சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலுள்ளது. பழமையான தோற்றமுடைய, சிதைவுக்கு ஆளாகிக் கொண்டிருக்கின்ற இச்சுவடியை, முற்றிலும் சிதையுமுன் விரைவில் நூலாக வெளிக் கொணர்ந்த பதிப்பாசிரியர் வா. நூ. கலீலுல்லா அவர்கள் பெரிதும் பாராட்டுக்குரியவர்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் இசுலாமியர் ஆற்றிய தமிழ்த் தொண்டு மகத்தானதாகும். 'முகம்மது உசைன்' என்ற இசுலாமியத் தமிழ்ப் புலவர் எழுதிய இக்கதைப் பாடல், இசுலாமியர் தமிழன்னைக்கு அணிவித்த ஒரு புத்தம்புது அணிகலனாகும்.

'சந்திரபதன் கதை' என்னும் இக்கதைப்பாடல் காவியச் சிறப்புக்குரிய உயர்ந்த நடையழகும், சொல்லழகும் கொண்டு விளங்குகிறது.

இசுலாமிய மரபுப்படி, அதே நேரத்தில், தமிழ் இலக்கிய மரபையும் மீறாமல் இக்கதைப் பாடல் படைக்கப் பட்டுள்ள நிலை போற்றத்தக்கதாகும். இசுலாமிய மன்னன் ஒருவன் இந்து சமய மன்னன் ரங்குராயன் மகளை விரும்பிப் பெண் கேட்க, அதனால் விளையும் சிக்கல் கதைப்பாடலாக உருவெடுத்துள்ளது. இஸ்லாமிய மன்னன் முகையார் தன்னை விரும்புகிறான் என்றறிந்து மனத்துள் அவன்மேல் விருப்பம் இருப்பினும் வெளிப் படையாக அவ்வுணர்வை வெளிப்படுத்திக் காட்ட

வில்லை சந்திரபதன். இறுதியில் அவள் கூறிய ''மாண்டி லையே'' என்ற சொல்லுக்காகத் தன் உயிரையும் விடுகின் றான் முகையார் மன்னன். கதைத் தலைவன் முகையா ரின் மரணத்தினால் அவள் நிலைகுலைந்து காதலின் வலிமையை உணர்கிறாள். ஓர் இசுலாமிய அரசனின் மரணத்திற்குத் தானே காரணம் என உணர்ந்து அவ னுடைய சமயமான இசுலாமிய சமயத்தை ஏற்றுக் கொள்வதுடன் அவனுடனே ஒரே சவப்பெட்டியில் அடங்குமாறு மரணத்தைத் தழுவுகிறாள் சந்திரபதன்.

'மனம் ஒன்றுபட்ட பிறகு மதம் ஒரு தடையல்ல' என்பது கதையில் வலியுறுத்தப்பட்டுள்ள கருத்தாகும். இந்து-இசுலாம் சமய ஒற்றுமையை வலியுறுத்தப் படைக்கப் பட்ட ஓர் உன்னதக் காவியம் சந்திரபதன் கதை எனலாம்.

கிடைத்தற்கரிய இத்தகைய அரிய நூலை முதன் முதலாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிடு வதில் மகிழ்வடைகின்றது.

நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வியமைச்சர் பேரா சிரியர் க. பொன்னுசாமி அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறைச் செயலாளர் திருமிகு. இரா. கிருத்து தாசு காந்தி இ.ஆ.ப. அவர்களுக்கும் மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் சூ. நிர்மலா தேவி அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்சுவடி தமிழ் வளர்ச்சித் துறையின் நிதியுதவி பெற்று வெளிவருகிறது. இச்சுவடி வெளியீட்டிற்கு நிதியுதவி வழங்கிய திரு. பன்னீர் செல்வம் அவர்களுக்கு நன்றி.

நூலை வனப்புடன் அச்சிட்ட பாவை பிரிண்டர்ஸ்-க்கும் நன்றி.

# முன்னுரை

**திறப்பு:-**

ஒன்றே குலம்
ஒருவனே தேவன்

என்பது தமிழ் சால்பு: காக்கை குருவி எங்கள் ஜாதி என ஒன்றுபட்டு வாழ்ந்தனர்; வாழ்கின்றனர் தமிழர். நினைத் தார் நெஞ்சினிக்கும் தமிழ் நாடி வந்தோரை வாழ வைத்தது; வந்தோரும் அன்னைத் தமிழை வளப்படுத்தினர். என்றும் மாறா சீரிளமை கொண்ட கன்னித்தமிழுக்கு இலக்கிய அணிகலன்களைப் புதிது புதிதாகப் படைத்து அழகு பார்ப்பது இலக்கிய மைந்தர்களின் இனிய பணியாக இருந்தது.

பலருக்கும் ஒளி தந்திடும் விளக்கினை அதனுள்ளே படியும் கரும்புகை மறைத்திடுதல் போல கால நீரோடையின் வேகத்தால் பல படைப்புகள் மக்களை விட்டு மறைந்தன; மறைந்துகொண்டிருக்கின்றன.

கடினமான இரும்பும் காலப்போக்கில் காற்றினால் கரைந்திடுகின்றது. இயற்கையின் நியதி இப்படி இருக்க, சில நூறு ஆண்டுகள் மட்டும் வாழ்வு கொண்ட ஓலைச் சுவடி களில் எழுதப்பட்ட உயிரோவியம்; மனித இனத்திற்கு வழிகாட்டி; முக்காலத்தையும் காட்டவல்ல கண்ணாடி எனப்படும் இலக்கியப் படைப்புகள் நிலைத்திடுமோ? ஒளியை விட வேகமாக இயங்கிவரும் இந்த அறிவியல் உலகினிலே இச் சுவடிகளிலே மட்டும் வாழ்ந்திடும் இலக்கி யங்களைப் பொறுமையுடன் படித்திடுபவர் யார்? அதனால் பயனுறுபவர் யார்?

இந்நிலையில் தாளில் ஜனனம் ஆகாமலே ஓலச் சுவடிக் கருவறையிலேயே மறைந்து போகும் இலக்கியச் சிசுக்கள் பலப்பல.

தமிழுக்குப் பிற நாட்டவர், பிற மதத்தவர் எனப் பல் வேறு நிலையில் இருந்து இலக்கியத் தொண்டாற்றிய மகான் கள் பலர். அவர்களுடைய படைப்புகள்; ஏன் அவர்களின்

பெயர்கள் கூட மறைந்து கொண்டிருக்கின்றன; மறைக்கப் படுகின்றன.

இந்நிலையை மாற்றிட பல அமைப்புகள், பல நிறுவனங் கள் முனைந்திருக்கின்றன. இந்நற் செயலுக்கு உதவியாக, இராமனுக்கு உதவிய அணில் போல, ஓர் சிறுசெயலாக இந்நூல் அமைந்தால் என் உழைப்பு பயனுறும்.

சந்திரபதன் கதை எனும் இந்நூல் தனது ஆயுட்காலத் தின் இறுதி நாட்களை எண்ணிக்கொண்டிருந்த ஓர் ஓலைச் சுவடியில் இருந்து மிகுந்த சிரத்தையுடன் படி எடுக்கப் பட்டது. இதன் அக நிலையை நோக்கும் போது, சிறந்த இலக்கிய நயங்களுடன் பாமர மக்களும் எளிதில் சுவைத் துணரக்கூடிய கதைப்பாடல் வடிவில்; சிறந்த விழுமிய கற்பனைகளைத் தன்னகத்தே இயற்கை கடந்த செயல்கள் மிகைத்து இருந்தாலும் அதன் பின்னணியில் இறைமைக் கருத்துகளை ஒன்றிணைத்து சிறந்த தேனும் பாலும் கலந்த வேர்ப்பலா போல இதனை நுகர்பவருக்குத் தந்திடுகின்றார் படைப்பாசிரியர்.

இக்கதைப்பாடலின் சிறப்பிற்குக் காரணம் இதனூடே பயின்று வரும் இலக்கியக் கூறுகளே எனில் அது மிகை யாகாது.

ஓர் இலக்கியம் சிறப்புற்றிட அதனிடைப் பயின்று நிற்கும் பாத்திரங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. இலக்கியப் படைப்பு எனும் தேரை இயங்கச் செய்திடும் அல்லது இழுத்துச் சென்றிடும் பரிகளுக்கு இணையானது அப் படைப்பின் ஊடே அமைந்திருக்கும் பாத்திரங்கள். இக் கதைப் பாடலின் ஆசிரியர் புலவர் முகம்மது உசைன் இப்பணியைச் செவ்வனே நிறைவேற்றியுள்ளார்.

இக்காவியத்தில் பரவி இருக்கும் பாத்திரங்களை முறையே,

1) மையப் பாத்திரங்கள்

2) துணைப் பாத்திரங்கள்

என இருவகையாகப் பகுத்திடலாம்.

**1) மையப் பாத்திரங்கள்:**

இக்கதைப்பாடலின் மையப் பாத்திரங்களின் எண்ணிக்கை ஆறு ஆகும். அவை முறையே,

| | | |
|---|---|---|
| 1) முகையார் மன்னன் | — | காவியத் தலைவன் |
| 2) சந்திர பதன் | — | காவியத் தலைவி |
| 3) சுலுத்தான் எனும் மகாபுரி அரசன் | — | காவியத் தலைவனின் நண்பன் — தோழன் |
| 4) அமைச்சர் (அ) | — | மகாபுரி அரசன் சுலுத்தானின் அமைச்சர்; |
| (ஆ) | — | ரங்குராயன் அரசவையி லிருந்த அமைச்சர். |
| 5) தோழியர்கள் | — | சந்திர பதனுடன் இருக்கும் தோழியர்கள். |
| 6) ரங்கு ராயன் | — | காவியத் தலைவியின் தந்தை. |

**2. துணைப் பாத்திரங்கள்**

(i) குழுத் தலைவர்
(ii) குழுவினர்
(iii) படைத்தலைவர்
(iv) தொண்டர் படையினர்
(v) தூதுவர்

போன்றவர்கள் துணைப்பாத்திரங்கள் ஆவர்.

கதையோட்டம் சுவையாக அமைந்திட அவற்றின் நிகழ் களங்களை விளக்குதல் அல்லது, விவரித்து உரைத்தல் அவசியம். இதனைப் படைப்பாசிரியர் முகம்மதுஉசைன் புலவர் செவ்வனே நிறைவு செய்துள்ளார். காப்பியத்தில் பயின்று வரும் நிகழ்களங்கள் சிலவற்றை இனி காணலாம்.

i) அத்திமாநகர், அத்திநகர்
ii) அன்னகிரி
iii) கத்திரி மாநாடு
iv) சங்குவள நாடு

v) சுந்திர நகர், சுந்திரபதி நகர்

vi) புரிசை, புரிசை நன்நகர் புரிசை மாநகர்

vii) மகாபுரி

என்பவை இக்காவியத்தின் நிகழ்களங்களாகும். அத்தி நகர், அத்திமாநகர் அஸ்தினாபுரம் (உத்திர பிரதேசம்) எனும் பெயரால் அழைக்கப்பட்டு வருகின்றது (வரைபடம் காண்க)

மற்றுமுள்ள நகரங்கள் மற்றும் நாடுகளைப் பற்றிய விரிவான செய்தி தனி ஆய்வுக்குரிய களமாக அமைகின்றது.

ஓர் இலக்கியம் மக்களின் மனதை எளிதில் கவர்ந்திடவும்; அவர்களின் உள்ளங்களில் நீங்கா இடத்தினைப் பெற்றிடவும் சில் காரணிகள் உதவுகின்றன. அவற்றை ''இலக்கிய உத்திகள்'' என வரையறை செய்தும் கூறுவர். இக்காரணிகளுள் சிறந்த காரணியாக இருப்பது கதையின் அமைப்பு எனும் காரணிதான். இக்காரணியின் சிறப்பை நன்குணர்ந்த இக்காவியப் படைப்பாசிரியர் சிறந்த முறையில் கதையை அமைத்து தனது காவியத்தை உயிரோட்டம் உடையதாக, தனது படைப்பை ஜீவனுள்ளதாகப் படைத்துள்ளதைக் காண முடிகின்றது.

முகம்மது உசைன் புலவர் படைத்த இக்காவியத்தில் படிப்பவரின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் பல நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. படிப்பேரிடையே குழப்பம் தோன்றா வண்ணம் கதையின் போக்கும், நிகழ்ச்சிகளும் தொடர்புடையனவாக அமைந்துள்ளது.

இக்கருத்து, காவியத் தலைவனின் அறிமுகம் (முதல் பாடல்) அவன் ஆட்சி செய்த நாட்டைப் பற்றியும் (நாட்டு வருணனை பாடல் 17-20) அதனைத் தொடர்ந்து நகரைப் பற்றியும் (நகர வருணனை பாடல் 21-29) விவரித்து கூறியபின் தலைவன் வருணனை (30-36) அமைந்த பாங்கினைக் கொண்டு உண்மை என உணரலாம்.

இந்த வகையான தொடர்பும் பிணைப்பும் தலைவன் கனவு காணுதல், தலைவியை நேரில் காணுதல், தலைவியுடனான பிணக்கு, தலைவியின் வருத்தம், தோழனின்

உதவி எனத் தொடர்ந்து அமைக்கப்பட்டு படிப்பவரின் மனதைக் கவரும்படியாக அமைந்துள்ளதைக் காண முடி கின்றது.

காலியத்தின் முதல் படியில், நுழைவாயிலில் நிற்கும் நுகர்பவரின் நலன் கருதி, காப்பு பாடலிலேயே தலைவன் தலைவி அறிமுகம், பெயர் உரைத்தல், கதைக் கரு போன்ற வற்றை உரைத்தல் ஆகியன நாடக வடிவில் அமைந்துள்ளது.

நாடகங்களை அதன் முடிவினைக் கொண்டு இன்பியல் துன்பியல் நாடகம் என இருவகைப்படுத்துவர். இதனுள் இக் காவியம் ஒரு துன்பமான முடிவினைக் கொண்டு உள்ளதால் இது ஒரு துன்பியல் நாடகம் போன்ற அமைப்பிலேயே பாடப்பட்டுள்ளது எனக் கூறலாம்.

இக்காவியப் படைப்பாளன் முகம்மதுஉசைன் புலவர் இசுலாமியரின் உணர்வுகளையும், காதலின் வலிமை மற்றும் அன்பின் ஆழம், இவற்றை விளக்கிட முனைந்துள்ளார். இதனைச் சுவைபட விறுவிறுப்புடன் படித்திடுபவரின் நலம் கருதி இயற்கை கடந்த பல நிகழ்ச்சிகளைத் தனது காவியத்தி னூடே அமைத்துக் காட்டுகின்றார்.

அ) சந்திரபதனைக் கனவில் காணுதல்

ஆ) சந்திரபதன் சுடுமொழி கூறிய உடன் மரணித்தல்

இ) "சந்தக்கு" அரண்மனை வாயிலை அடைதல்; அங்கிருந்து நகர மறுத்தல்

ஈ) சந்திரபதன் போகுமாறு கூறிய உடன் நகர்ந்து போடுதல்

உ) இசுலாத்தை ஏற்று தானும் உயிர்விடுதல்

ஊ) கபனுள் இரண்டு உருவங்கள் ஒன்றாக இருத்தல்

போன்ற செயல்கள் இயற்கை கடந்த நிலையில் பாடப் பட்டுள்ளன.

காவிய நடையில் அமைந்த இக் கதைப்பாடல் மென் மேலும் படிக்கப்படிக்கப் பல்வேறு ஆய்வுக் கருத்துக்களை நல்கும் என்பதில் ஐயமில்லை.

# நன்றியுரை

அகில உலகங்களையும், உயிர்களையும் படைத்து அவற்றைப் பரிபாலித்து கொண்டிருக்கும் வல்ல இறைவனின் பெயரால் தொடங்குகின்றேன். அந்த வளர் முதல் காவலனுக்கே முழு முதல் நன்றிகளைச் சமர்ப்பணம் செய்கின்றேன்.

உரைத்த நாவும் நினைத்த நெஞ்சும் இனித்திட வைக்கும் அன்னைத் தமிழுக்கு இலக்கியப் படைப்புகள் தான் உயிரோட்டம். சிறந்த தமிழ் இலக்கியப் படைப்புகளுக்கு நிதி உதவியளித்து செந்தமிழை வளப்படுத்திக் கொண்டிருக்கும் அமைப்புகளில் தமிழ் வளர்ச்சிக் கழகம் சிறப்பிடத்தை வகிக்கின்றது.

இந்நூல் வெளிவர நிதி உதவி அளித்திட்ட தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கு எனது முதற்கண் நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

சிறந்ததொரு இலக்கியத்தினை நூல் வடிவில் கொண்டு வர வேண்டும்; அதனால் தமிழ் கூறும் நல்லுலகம் பயன் பெற வேண்டும் என்ற தூய எண்ணம் கொண்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தார் அனைவருக்கும் நன்றி! இந்நூல் நிறுவனத்தின் வெள்ளி விழா வெளியீடாக வருகின்றது.

குறிப்பாக தனிமனிதனின் திறனை அம்மனிதனின் படைப்பாற்றலையும் இலக்கிய வளமையையும் மட்டும் மதித்து; தமிழுக்குத் தொண்டாற்றுதலே தலையாய கடமையாகக் கொண்டிருக்கும் உலகத்தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் கண்ணியமிகு டாக்டர் ச. சு. இராமர் இளங்கோ ஐயா அவர்களுக்கும்,

சுவடித்துறையில், குறிப்பாக, தமிழ் இலக்கியச் சுவடித் துறையில் சிறப்பாகச் சேவை செய்து அதனுள் புதைந்துள்ள அரிய இலக்கியங்களை வெளிக் கொணர்வதைத் தமது தலையாய கடமையாகக் கொண்டுள்ள இந்நிறுவன சுவடி

இயல் துறையைச் சார்ந்த டாக்டர் சூ. நிர்மலா தேவி அவர்கள் அச்சுக்கேற்றதாக இந் நூலைச் சீர்மை செய்தார்கள். அவர்களுக்கும், மற்றும் டாக்டர் டி. மகாலட்சுமி அவர்களுக்கும், இந்நூல் புத்தகமாக வெளிவர நேரடியாக, மறைமுகமாக உதவிய அனைத்து அன்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

சிறப்பான முறையில் அச்சிட்டுத்தந்த பாவை பிரிண்டர்ஸ்-க்கு நன்றி. வல்ல இறைவன் இவர்களுடைய பணியில் நிறைவும் வாழ்வில் வளமையும் பரிபூரணமாகத் தந்து அருள் புரிவானாக.

**வா. நூ. கலீலுல்லா**

# உள்ளே


| | | | | |
|---|---|---|---|---|
| I. | 1. | நுழைவாயில் | ... | 1 |
| | 2. | சிற்றிலக்கிய வரலாறு | ... | 12 |
| | 3. | இஸ்லாமிய இலக்கிய வரலாறு | ... | 18 |
| | 4. | கதைப்பாடலின் வரலாறு | ... | 33 |
| | 5. | கிஸ்ஸா எனும் கதைப்பாடல்கள் | ... | 48 |
| II. | | சந்திர பதன் கதை (மூலம்) | ... | 52 |
| III. | 1. | பிழைகளும் திருத்தமும் | ... | 109 |
| | 2. | சந்திர பதன் கதைச் சுருக்கம் | ... | 111 |
| | 3. | சுவடி தரும் சில சுவையான செய்திகள் | ... | 120 |
| | 4. | சந்திர பதன் கதையில் தமிழ் இலக்கிய மரபு | ... | 126 |
| | 5. | சந்திர பதன் கதையில் இலக்கிய நயங்கள் | | 137 |

# நுழைவாயில்

## தமிழின் தொன்மை

கல்தோன்றி மண்தோன்றாக் காலம் எனப்படும், வரலாற்றினுக்கும் எட்டாத தொன்மைக் காலத்தில் தோன்றிய மொழி தமிழ் மொழி. உலக மொழிகள் அனைத்தினும் மூத்த பழமையை உடையது. எண்ணற்ற இலக்கிய வளமும் இலக்கணச் செழுமையும் தன்னகத்தே கொண்ட மொழி தமிழ்மொழி.

தனித்தியங்கும் தன்மை வாய்ந்தது. எம்மொழியிலும் இல்லாத இலக்கண அமைப்பும், சிறப்பாகப் பொருள் இலக்கணப் பகுப்பினைக் கொண்டது. ஒலிப்பதற்கு இனிய எழுத்தொலிகளை உடையது. எளிய சொல்லமைப்பையும் கொண்டது.

காலத்திற்கேற்ப வளைந்து கொடுக்கும் நெகிழ்வு உடையது. பழமையைப் போற்றும் பண்பும், புதுமையை ஏற்கும் இயல்பும் இயல்பாகக் கொண்டது. உலக வழக்கு, செய்யுள் வழக்கு என இருவகை வழக்குகளைக் கொண்டு உயிருள்ள மொழியாய், இன்றும் சீரும் சிறப்பும் கொண்டு மிளிர்ந்து வரும் மொழி தமிழ் மொழியாம். இதனை,

*"இமிழ்குரல் முரசம் மூன்றுடன் ஆளும்*
*தமிழ்கெழு கூடல்" - புறம் - 58.*

*"தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்*
*மகிழ்நனை மறுகின் மதுரை" - சிறுபாணாற் - 66, 67.*

*"எத்திறத்தினும் ஏழுலகும் புகழ்*
*முத்தும் முத்தமிழும் தந்து முற்றலால்" - கம்பர்.*

*"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்*
*இனிதாவது எங்கும் காணோம்" - பாரதியார்.*

என அன்று முதல் இன்றுவரை பலரும் உயர்த்திப் பாடிவருகின்றனர்.

தமிழின் வற்றாத வளமையும், செழிப்பும் அதன் இலக்கியங்களில் இழைந்து உள்ளது. இன்றைய உலகத்தாரும் தமிழ் இலக்கிய வளமையைக் கண்டு வியந்து போற்றுகின்றனர். இவையாவினுக்கும் முழுமுதற் காரணமாய் அமைந்தவை பண்டைய ஓலைச் சுவடிகளே ஆகும். தமிழின் வளமையை ஆற்றின் இருகரைகள் போல அமைந்து காத்து வருவன இவ்வோலைச் சுவடித் தொகுப்புக்களே.

என்றாலும், 'இமையின் அருமை கண்ணறியாது' என்பது போல, இன்று இச்சுவடிகளின் நிலை மிகவும் சோகத்துக்கு உரியதாகக் காட்சி அளிக்கின்றது. இயற்கையாலும், செயற்கையாலும், அறியாமையாலும் எனப்பல வகையிலும் இவை அழிந்து கொண்டுள்ளன. இவற்றைக் காத்தல் தமிழ் உணர்வுடைய நம் அனைவரின் கடமை என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

அவ்வகையில் சென்னைப் பல்கலைக் கழக வளாகத்தில் அமைந்துள்ள அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ள ஒரு சுவடி பதிப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

## சுவடி அறிமுகம்

### சுவடி – பெயர்க் காரணம்

சுவடுகளைத் தன்னகத்தே கொண்டமையால் சுவடி எனப்பட்டது.

சுவடு + இ = சுவடி என்றாயிற்று என்பர் அறிஞர். சுவடுகளைத் தன்னகத்தே கொண்டவை எல்லாம் சுவடிகளே. இச் சுவடிகளில் இன்று நமக்கு மிகுதியாகக் கிடைப்பன ஓலைச் சுவடிகளே ஆகும்.

### ஓலைச் சுவடியின் வகைகள்

ஓலைச் சுவடிகள் எனப்படுபவை 'கீற்று' எனப்படும் பனை ஓலைகளால் செய்யப்படுபவை ஆகும். இதில் பனை ஓலைச் சுவடி இரண்டு வகையினை உடையவை. அவை,

(1) தாளிப்பனை எனும் ஸ்ரீதாளிப்பனை ஓலை,

(2) நுங்குப்பனை எனும் பனை ஓலை.

என்பன.

**பதிப்புச் சுவடி**

1) இடம் : அரசினர் கீழ்த் திசைச் சுவடிகள் நூலகம் – சென்னை.

2) பிரதி : ஒன்று மட்டும்

3) எண் : ஆர் – 1086

4) நூல் பெயர் : சந்திர பதன்கதை

5) ஆசிரியர் பெயர் : முஹம்மத் உசைன்

6) எழுதிய ஆண்டு : ஹிஜ்ரி – 1220

7) பொருள் : காதல்

**புற அமைப்பு**

1) நுங்குப்பனை ஓலையால் செய்யப்பட்டவை.

2) 39 ஏடுகள் உள்ளன.

3) 36, 37 ஆகிய ஏடுகள் பாதியளவு முறிந்து செய்திகள் இல்லை.

4) முதல் ஏடும் இறுதி ஏடும் இரட்டை ஏடுகளாக, நரம்பு நீக்காமல் அமைந்துள்ளன.

5) ஏட்டின் நீளம் :– 33 செ.மீ.

அகலம் :– 3.02 செ.மீ.

6) ஏட்டின் முனைகள் அரைவட்ட வடிவில் வெட்டப்பட்டுள்ளன.

7) ஏட்டின் இடப்பக்க முனையிலிருந்து 8.00 செ.மீ. இடைவெளியில் ஒரு துளையும்,

8) வடப்பக்க முனையிலிருந்து 9.5 செ.மீ இடைவெளியில் ஒரு துளையும் உள்ளது.

9) இவை ஏடுகளை வரிசை மாறாமல் ஒன்றிணைத்துக் கட்டி வைத்திடப் பயன்பட்டன.

10) முதல் ஏட்டின் வெளிப்புறம் மற்றும் இறுதி ஏட்டின் வெளிப் புறத்தில் சில கிரந்த எழுத்துக்களும், பயிற்சி எழுத்துக்களும் காணப்படுகின்றன.

## அகநிலை

1) முதல் ஏட்டில் குறிப்பிடத் தகுந்த செய்திகளில்லை. இஃதோர் காப்பு ஏடாக அமைந்துள்ளது.

2) அடுத்த ஏட்டில் "விசுமில்லா நிற்றகீமா நிற்றகீமா" என்ற வாசகம் கொண்டு தொடங்கப்பட்டுள்ளது. இஃது வலது ஓரத்தில் அமைந்துள்ளது.

3) ஏடுகளின் வலது ஓரத்தில் 2.5 செ.மீ. இடைவெளிவிட்டு, பாடல் ஆரம்பமாகியுள்ளது.

4) இந்த இடைவெளியில் ஏட்டின் வரிசை எண் தமிழ் எழுத்துக்களால் குறிக்கப்பட்டுள்ளது.

5) முதல் ஏட்டில் காப்புப் பாடல் மட்டும் (பார்புகழி ரசூல் வேதம்.. அமைந்துள்ளது.

6) இரண்டாம் ஏட்டின் தொடக்கத்திலும் "விசுமில்லா நிற்றகீமா நிற்றகீம்" என்ற வாசகம் உள்ளது.

7) இதனைத் தொடர்ந்து 'பொன்னுலகு மறுகுறு....' என்ற நூல் செய்தி செய்யுள் நடையில் அமைந்துள்ளது.

8) ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் பாடல்களின் தொடர் எண் தமிழ் எண்களால் சுட்டப்பட்டுள்ளது.

9) முதல் ஏட்டின் உட்புறத்திலும், இறுதி ஏட்டின் உட்புறத்திலும் கிரந்த எழுத்துக்களும், சில தமிழ் எண்களும், இடையே வட்டம் மற்றும் சட்டம் போன்ற வடிவங்களால் ஆன வரை படமும் குதிரை, கை போன்ற வரி ஓவியங்களும் அமைந்துள்ளன.

10) இறுதி ஏட்டில் நூல் செய்திக்குத் தொடர்பு இல்லாத ஓர் விருத்தப்பாடல் அமைந்துள்ளது.

## ஏடுகளின் நிலை

1) ஏடுகள் மிகவும் பழமையாகியுள்ளன.

2) புகை, தூசி போன்றவை படிந்து கருமை நிறத்துடன் காணப்படுகின்றன.

3) மிகையான அளவில் செல்லரித்து, செய்தியின் தொடர்ச்சி விடுபடும் நிலையில் உள்ளது.

4) எழுத்துக்கள் நேரான முறையில் அமைந்துள்ளன.

5) ஒரு ஏட்டில் 7 வரிகளும், ஒரு வரியில் 40 முதல் 45 எழுத்துக்களும் உள்ளன.

இங்ஙனம் அமைந்த சுவடியே பதிப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

## சுவடியின் வேறு மூலவடிவங்கள்

சந்திர பதன் கதை எனும் இச்சுவடியின் கதை வேறு பல நிலையிலிருந்து உருவாகியிருக்க வாய்ப்புள்ளது. இதனைப் பற்றிய வேறு வடிவங்களைக் கொண்டு இதன் மூலத்தினை, பிறப்பிடத்தைக் கணிக்கலாம். இந்நிலையில் கிடைத்த இரண்டு வடிவங்களை இனி காணலாம். அவை,

### (1) இந்துஸ்தானி சுவடிகள் : (HINDUSTHANI - MANUSCRITS)

'இந்துஸ்தானி சுவடிகள்' என்ற பிரிவில் சென்னை, அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் உருது, அரபி, பாரசீக மொழியில் தோன்றிய பல அரிய சுவடிகளைப் பாதுகாத்து வருகின்றனர். இச்சுவடிகளில் 'கிஸ்ஸா – இ – சந்தர்பதன்' என்ற சுவடியில் இதற்கான மூல வடிவினைக் காணமுடிந்தது. அதனைக் காணலாம்,

## இந்துஸ்தானி – சுவடிகள் :

எண் : 127 – கிஸ்ஸா – இ – சந்தர்பதன்.

## பொருள்

தாள் சுவடி, அளவு = $10\frac{1}{2} \times 9\frac{1}{2}$ அங்குலம், எண்ணிக்கை 62 தாள், ஒரு தாளுக்கு 20 வரிகள். நிலை – நன்று, எழுத்து – நல்லநிலை, புதிய நிலை முழுமையாக உள்ளது, பொருள் – காதல், ஆசிரியர் – தெரியவில்லை.

இச்சுவடி, சென்னை ‘முபியிட் – இ – அம்ஹல் – இ – இஸ்லாம்’ என்ற நூலகத்தில் உள்ள சுவடியில் பிரதி எடுத்ததாகும். இச்சுவடியின் ஆசிரியர் பெயர் சுவடிச் செய்தியில் எங்கும் காணப்படவில்லை. இதன் மொழி உயர்நிலையில் அமைந்துள்ளது. நடை செய்யுள் நயத்துடன் இலக்கணக் கட்டுக் கோப்புடன் அமைந்துள்ளது. இச்சுவடியில் உள்ள செய்யுள்களின் மொழி நடையினையும், எடுத்துக் கொள்ளப்பட்ட பொருண்மையையும் ஒப்பிட்டாராயும் போது, ‘மிர்சா முஹம்மத் முகியம் முக்கிமீ’ என்பவரின் படைப்பினைப் போல அமைந்துள்ளது. இவர் ஹிஜிரி 988 முதல் 1037 வரை இந்தியாவை ஆண்ட இரண்டாம், இப்ராஹிம் அதில்ஷா உடைய அரசவையிலும் முஹம்மத் அதில்ஷா மற்றும் இரண்டாம் அலி அதில்ஷா உடைய காலத்திலும் வாழ்ந்தவராவர்.

இச்சுவடியில் பொருண்மையை நோக்கில் இஃதோர் காதல் சுவையை எடுத்தியம்பும் கதையைக் கருவாகக் கொண்டதாகும். ‘மஹாயர்’ என்பவர் ஒரு வணிகரின் மகனாக இருந்து வந்தார். இவர் சுந்தர பட்டிண அரசரின் அழகு மகளாக சந்திர பதன் மீது காதல் கொண்டார். இதனை அவ்வரசன் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களின் திருமணத்திற்கும் அரசன் இணங்கவில்லை. மஹாயர் சந்திர பதனை ஓர் விழாவினில் சந்திக்கின்றார். அங்கு அவள் முன்பாகவே உயிரையும் துறக்கின்றார். அவருடைய ‘கபன்’ எனும் சவப்பெட்டி அரசரின் வாயிலை விட்டு அகலாமல் நிற்கின்றது.

இதில் ஆசிரியர் கூற்றாக, இக்காதலர்களின் நினைவகம் கற்றறிந்த பெரியோர்கள் முன்னால் ஏற்றுக் கொள்கின்றாள்.

இஸ்லாத்தை ஏற்று மனநிம்மதி கொண்ட அவள் தனது உயிரையும் துறக்கின்றாள்.

இறுதியில், நன்காட்டினில் சவப்பெட்டியைத் திறக்கும் போது இருவர் உருவமும் இருப்பதைக் காண்கின்றனர். அவை பிரிக்க இயலாமல் இணைந்திருந்ததைக் கண்டு திகைப்புற்றனர். இருவரையும் இணைத்தே நல்லடக்கம் செய்கின்றனர்.

இதில் ஆசிரியர் கூற்றாக, இக்காதலர்களின் நினைவகம் இன்றும் "கட்ரி" என்ற ஊரில் உள்ளதாகச் சொல்லப்படுகின்றது. (கட்ரி எனும் ஊர் உத்தரபிரதேசம் – அனந்தப்பூர் மாவட்டத்தில் உள்ள ஒரு தாலுக்காவாகும்)

இச்செய்தி, 'A DESCRIPTIVE CATALOGUE OF HINDUSTAN MANUSCRIPTS ' என்ற அட்டவணையின் 753, 754 ஆகிய இரு பக்கங்களில் உள்ள செய்திகளின் மொழி பெயர்ப்பாகும்.

## 2) இந்திய வரலாற்றுச் சிறப்புக்கள் (GLIMPSES INDIAN - HISTORY:-)

இந்நூலை இயற்றியவர் 'பாபானி பட்டாச்சாரி' என்பவராவர். இவர் இந்திய வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளைத் தொகுத்து கட்டுரை வடிவிலும், கதை வடிவிலும் தந்துள்ளார்.

அவைகளுள், இஸ்லாமிய வீரமங்கை (A MUSLIEM HEROINE) என்ற தலைப்பில் பீஜப்பூரைச் சார்ந்த 'சாந்த் பேகம்' என்பவளைப் பற்றிய செய்தியையும் தந்துள்ளார். அதனை இனி காணலாம்.

### இஸ்லாமிய வீரமங்கை

"கி.பி. 15 –ம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் தக்காணத்தின் வட பகுதியில் அமைந்துள்ள பீஜப்பூரைச் சீரும் சிறப்புடனும் ஆண்டு வந்தவன் அலி அதில்ஷா என்ற மன்னன். பீஜப்பூரின் அண்டை நாடு அஹமத் நகர் என்ற பகுதி ஆகும். இந்நாட்டின் இளவரசியின் பெயர்

சாந்த் பேகம் என்பதாகும். சிறந்த அழகும், நிறைந்த அறிவாற்றலும் உடையவள். அலி அதில்ஷா அவளைத் திருமணம் செய்து கொண்டான். சாந்த் பேகம் சிறந்த குணவதி. மக்களின் நலத்தில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தாள். அவள் மீது கொண்ட காதலாலும், அவளுடைய மதி நுட்பம் மற்றும் நிர்வாகத் திறமையை மதித்து அவளுடைய ஆலோசனையைப் பெற்றும், அவளை அரசவையில் கலந்து கொண்டு வழிநடத்திச் செல்ல அனுமதித்தும் இருந்தார் அலி அதில்ஷா. மக்கள் நலமுடன் வாழ்ந்து வந்தனர்.

கி.பி.1579 ஆம் ஆண்டு மன்னர் அலி அதில்ஷா மரணமடைந்தார். அவருக்கு வாரிசு இல்லாத நிலையில் அவருடைய தங்கையின் ஒன்பது வயது மகனை ஆட்சிப் பொறுப்பில் வைத்து சாந்த் பேகம் நாட்டை ஆண்டு வந்தாள். இந்நிலையில், பீஜப்பூரின் அமைச்சரான கிஷ்வர்கான் தனது ஆளுமையின் கீழ் சில பகுதிகளை வைத்துக் கொள்ள முயன்றான். பீஜப்பூரில் கலகம் மூண்டது. எனவே, அஹமத் நகரை ஆண்டு வந்த சாந்த் பேகம் தனது அண்ணனின் உதவியை நாடினாள். அஹமத் நகரை ஆண்ட சுலுத்தானும் படையெடுத்து வந்து, சாந்த் பேகத்தையும் 'சத்தாரா' கோட்டையையும் மீட்டு அளித்தான். அவனுடைய படைகள் கோல்குண்டா, பீரார் முதலிய பகுதிகளையும் வென்றது. அங்கு ; தங்கியிருந்த கிஷ்வர்கான் தப்பி ஓடிவிட்டான்.

எனவே, இளவரசன் தனது அத்தையிடம் பாதுகாப்பாக வளர அனுப்பப்பட்டான்.

மீண்டும், சிக்கலாக புதிய அமைச்சரான இக்லாஸ்கான் என்ற அபினீசியன் அமைந்தான். இவன் அபினீசியருக்கு மிகுந்த சலுகைகளை அளித்து, அதற்காகப் பிறரை மிகவும் கொடுமைப் படுத்தினான். இதனால் தக்காண பூர்வீக வாசிகளிடம் கடும் எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொண்டான். நாட்டில் குழப்பம் நிலவியது. அண்டை நாட்டுப் பகைவர்கள் இதை உன்னிப்பாகக் கவனித்து வந்தனர். இவனையும் வென்று வீரத்தின் விளை நிலமாகிய சாந்த் பேகம் பீஜப்பூரைச் சிறப்புடன் ஆண்டு வந்தாள்.

ஆனால், தன் தாய் நாடான அஹமத் நகரில் அவளுடைய

அண்ணன் நிஜாம் ஷா, 'ப்பூதாஷா' என்ற நாட்டிய மாதிடம் மயங்கி சீர் குலைந்து போனதை அறிந்து துன்பமடைந்தாள். நிஜாம்ஷா அரண்மனைக் கருவூலத்தை எல்லாம் அந்நாட்டிய மங்கைக்கு அளித்து அழிப்பதை நிஜாம்ஷாவின் அமைச்சன் 'சலாபத் கான்' மதி நுட்பத்தால் காத்து வந்தான்.

'மீறா உசைன்' என்ற அந்நாட்டு இளவரசனையும் கொல்ல முயன்று அவனையும் காப்பாற்றினார் அமைச்சர். பின்பு அவரே அரசனாகவும் போற்றப் பெற்றார்.

உடன் பீஜப்பூரையும் தன் ஆளுமையின் கீழ் கொண்டு வந்தார். சாந்த் பீ நாட்டை விட்டு வெளியேறிவிட்டார். உடனே நாட்டில் கலகம் தோன்றியது. இதனால் தக்காணத்தார், அபினீசியர், எதிர்ப்பாளர் என மூன்று அணியினர் ஆட்சிக்குப் போட்டியிட்டுப் போராடினர். இந்நிலையில் சில ஆண்டுகள் கழிந்தன. இப்ராஹீமுடன் பீஜப்பூருக்குத் திரும்பி வந்தார். சாந்த் பேகம் தன் தத்துப்பிள்ளை அரசுப்பொறுப்பை ஏற்று இப்ராஹீமுக்கு மக்கள் நலனில் கவனம் செலுத்தப் பணித்தார். இப்ராஹீமும் அவருடைய ஆலோசனையைப் பெற்று மக்களைக் காத்து வந்தார்.

அஹம்மத் நகரை மொகலாயர் தாக்கியதின் அவலக் குரல் மீண்டும் சாந்த் பேகத்தின் கவனத்தை ஈர்த்து இளவரசன் முராத் தலைமையிலான மொகலாயரின் படையை எதிர்க்க ஐம்பது வயதான தக்காண அரசி முடிவெடுத்தாள்.

கடுமையான போரின் முடிவில் சாந்த் பீயின் வேகத்தையும், விவேகத்தையும் கண்டு முகலாயர் படை ஒரு உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டது.

ஆனால் அந்த உடன்படிக்கை நீண்ட நாள் நீடிக்கவில்லை. அஹமத் நகரப்படை உடன்படிக்கையை மீறியது. இம்முறை யாரும் அஹமத் நகரைக் காத்திட முடியவில்லை.

தோல்வியை நெருங்கிய அஹமத் நகர வீரர்களிடையே சாந்த பீ மீது அவதூறு சுமத்தி வதந்தி பரப்பப்பட்டது. அதனனக் கேட்டுக்

கோபமடைந்த வீரர்கள் அவளுடைய கோட்டையைத் தாக்கி அழித்தனர். இதனை அறிந்த சாந்த் பீ மனம் குழம்பிக் கலங்கினாள். ஒரு வீரன் அவளை வெட்டிக் கொன்றான்.

இவ்வாறு, இந்திய வரலாற்றில் ஓர் வீர அரசியின் பெயர் நிலை கொண்டது என்று 'பாபானி பட்டாச்சாரியா' என்பவர் எழுதிய 'இந்திய வரலாற்றுச் சிறப்புக்கள்" (GLIMPSES INDIAN HISTORY) எனும் நூலில் கூறப்பட்டுள்ளது.

இத்தகு கதைகளை ஒப்பிட்டு நோக்கும் போது ஓர் உண்மை புலப்படும். அதில்ஷா என்ற மன்னரைத் தொடர்ந்து நடந்த இஸ்லாமிய ஆட்சிக் காலத்தில், சாந்த் பேகம் என்ற மங்கை இளவரசியாக இருந்திருக்கின்றாள். அவளுடைய அழகில் விருப்பம் கொண்டு பலர் அவளை மணக்க முயன்றனர். எனினும், அவள் அரசரின் மனைவியானாள். அவளுடைய வீரமும், தீரமும் நாளடைவில் மக்கள் மத்தியில் பரவியன. மக்கள் அவளுடைய நற்குணங்களைக் கண்டு வியந்தனர். இச்செயலே இலக்கியப் படைப்பாளிகளைத் தூண்டியது எனலாம்.

வாழ்ந்த கதாப்பாத்திரத்தை வைத்துக் கொண்டு, கற்பனையில், ஆனால் மக்களுக்கு நன்னெறி காட்டக்கூடிய அறநெறிக் கருத்துக்கள் நிறைந்த இலக்கியமாக, கதையாக புனைந்து பாடியுள்ளனர்.

இச்செயல் முதன்முதலில் 'உருது' மொழியிலேயே தோன்றியிருக்கின்றது. ஒரு உருதுக் கவிஞன் கதைப் பாடலாக முதலில் இச் செய்தியைப் புனைந்து பாடியுள்ளான்.

இக்கதையானது பிற்காலத்தில் தமிழகத்தில் பரவி செல்வாக்குப் பெற்றுள்ளது. உருது அறிந்தவர்கள் மட்டுமே உணரக் கூடியதாக இருந்த நிலையை மாற்றி, இதன் கருத்துக்களைத் தமிழ் அறிந்தவர்களும் சுவைத்துணரக்கூடிய வகையில் இக்கதைப்பாடல் தமிழில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டிருக்கலாம் என்பது கணிப்பு. இது மேலும் சிந்தனைக்குரியது.

## இரு கதைப்பாடலுக்கும் உள்ள வேறுபாடு:

இக்கதைகளில் மிகுந்த அளவில் வேறுபாடு காணப்படவில்லை. எனினும் சிறிய அளவில் மாற்றங்களைக் காணமுடிகின்றது. அவை,

1) கதையில் வரும் கதா நாயகன் உருதுக் கதையில் ஓர் வணிகனின் மகன். தமிழ்க் கதையில் ஓர் அரசன்.

2) உருதுக் கதையில் தலைவனுக்கு நண்பனாக யாரும் வரவில்லை. தமிழ்க் கதையில் தலைவனுக்கு உதவி செய்ய 'மகாபுரி சுலுத்தான்' என்ற அரசன் படைக்கப்பட்டுள்ளான்.

3) படை, போர், தூது போன்றவை உருதுக் கதையில் இல்லை; தமிழில் உள்ளது.

4) விருந்து நிகழ்ச்சி உருதுக் கதையில் உண்டு தமிழில் இல்லை.

5) தமிழ்க் கதையில் சவப்பெட்டி சந்திர பதன் மாளிகை வாயிலை அடைகின்றது. உருதுக் கதையில் சவப்பெட்டி அரசனின் அரண்மனையை அடைகின்றது.

### காரணங்கள்

இத்தகு மாற்றங்களுக்குக் காரணமாக இருந்தவை:

1) நீண்ட கால இடை வெளியாகவும் இருக்கலாம்.

2) தலைவன் பாத்திரம் மாறிட, அரசின் சூழல் காரணமாக அமைந்திருக்கலாம். இஸ்லாமிய ஆட்சியின் கட்டுப்பாடு அரசனை விமர்சிக்கத் தடை விதித்திருக்கலாம். தமிழில் சிற்றரசர்கள் மிகுதியாதலால் தலைவன் சிற்றரசனாக்கப் பட்டான்.

3) இஸ்லாமிய முறைப்படி பெண்களுக்கு பாதுகாப்பு என்ற நிலையில் உருதுக் கதையில், சவப்பெட்டி அரண்மனை யை அடைந்தது. தமிழில் இது இல்லாதிருக்க, தலைவியின் மாடத்தினை அடைந்தது எனத் துணியலாம்.

# சிற்றிலக்கிய வரலாறு

குன்றிலிட்ட விளக்கினைப் போல தமிழ்மொழி தனது இலக்கியச் செல்வங்களைக் கொண்டு, இன்றும் இவ்வுலகிடையே ஒளிர்ந்து கொண்டுள்ள மொழியாகும். இம்மொழியில் அமைந்துள்ள இலக்கியங்களை இரண்டு பெரும் பகுதியாகப் பிரிக்கலாம். அவை,

(1) பேரிலக்கியங்கள்

(2) சிற்றிலக்கியங்கள்

என்பன.

“பெருங்காப்பியம், சிறுகாப்பியம், புராணங்கள் ஆகியவை தொடர் நிலைச் செய்யுள் எனப்படும் பேரிலக்கியங்களாகக் கருதப்படுகின்றன. இவை ஒழிந்தன எல்லாம் சிற்றிலக்கியங்களே”[1] என்ற சண்முகம்பிள்ளை அவர்களின் கூற்று மேற்கண்ட வகைப்பாட்டினை உறுதிப்படுத்தும்.

## சிற்றிலக்கியங்களின் தோற்றம்

சிற்றிலக்கியத்தின் தோற்றம் பற்றிப் பல செய்திகள் கிடைக்கின்றன. தமிழின் தொன்மைக்குத் தக்க சான்று தொல்காப்பியமாகும். இதனுள் உள்ள,

*“விருந்தே தானும்*

*புதுவது கிளந்த யாப்பின் மேற்றே”*[2]

என்ற நூற்பாவினுள் இச்சிற்றிலக்கியம் பற்றிய, மூலவடிவக் கூறுகளைக் காணமுடிகின்றது.

---

*1. சிற்றிலக்கிய வளர்ச்சி, பக்.5.*

*2 தொல்காப்பியம். பொருளதிகாரம். செய்யுளியல் 1495.*

இந்நூற்பாவினுக்கு உரைவகுத்த இளம்பூரணர், "விருந்தாவது, முன்புள்ளார் சொன்ன நெறி போய்ப் புதிதாகச் சொன்ன யாப்பின் மேலது என்றவாறு புதிதாகப் புனைதலாவது, ஒருவன் சொன்ன நிரல்வழியன்றித் தானே தோற்றுவித்தல்" [3] எனவும், பேராசிரியர் அவர்கள் "புதுவது கிளந்த யாப்பின் மேற்று என்ற தென்னையெனின் புதிதாகத் தாம் வேண்டியவற்றாற் பல செய்யுளுந் தொடர்ந்து வரச் செய்வது. இது முத்தொள்ளாயிரமும், பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதிச் செய்யுளுமென உணர்க. கலம்பகம் முதலாயினவுஞ் சொல்லுப" [(4)] எனவும் கூறுவது எண்ணத்தக்கது.

மேற்கண்ட உரைகளின் மூலமாக விருந்து எனப்படுவது புதுவகையான யாப்பினையும், புதுவகையான பா அமைப்பினையும், புதுவகையான பொருளமைதியினையும் அடிப்படையாகக் கொண்டு எழும் இலக்கியமெனச் சுட்டுவதை உணரலாம். பேராசிரியர் அவர்கள் அந்தாதிச் செய்யுள் அமைப்பினையும், கலம்பகம் என்ற வகையினையும் சுட்டிச் சென்றுள்ளதையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, சங்ககாலம் தொட்டே இன்றுவரை பல்வேறு வகையான இலக்கிய வகைகள் காலத்தின் சூழ்நிலைக்கு ஏற்றவாறும், ஆசிரியரின் கற்பனைக்கு ஏற்பவும், வளர்ந்து வந்தவையே சிற்றிலக்கியங்கள் என முடிவு செய்யலாம்.

**சிற்றிலக்கிய காலம்**

சிற்றிலக்கியம் என நாம் இப்பொழுது சுட்டும் இலக்கியங்களைப் 'பிரபந்தம்' எனவும் வழங்குதல் மரபு. இதன் கால எல்லை என்பது ஆய்வு நிலையில் பல்வேறு கருத்துகளைக் கொண்டதாக அமைந்துள்ளது.

"காலத்தினால் முந்திய காரைக்காலம்மையார் பாடிய மூத்த திருபபதிகம், திருவிரட்டை மணி மாலை, அற்புதத் திருவந்தாதி முதலாக இக்காலம் வரை புலவர் பெருமக்கள் பாடிவந்துள்ள சிற்றிலக்கியங்கள்

---

*3. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - இளம்பூரணர் உரை பக். 549.*

*4. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - பேராசிரியர் உரை பக்.429.*

எண்ணற்றவை." [5] என்ற கருத்துப்படி சிற்றிலக்கியங்கள், தொன்மையான சங்ககாலத்தினைத் தொடர்ந்து வந்த கால எல்லையிலிருந்து தொடங்கி, இன்று வரையிலும் வீறு நடை பயின்று வருகின்றன எனலாம்.

"சிற்றிலக்கிய வகைகள் மிகுதியாய்த் தோன்றிய காலம் 15ஆம் நூற்றாண்டு முதற்கொண்டேயாகும்" [6] என்ற செய்தியின்படி சிற்றிலக்கியங்கள் எனப்படும் இவ்விலக்கியங்கள் 15ஆம் நூற்றாண்டு முதற் கொண்டு தான், தன் முழு வளமையைக் காட்டிச் சிறந்து வளர்ந்தோங்கின என்ற முடிவினை எட்டலாம்.

## பிரபந்தங்கள் எனப்பட்ட சிற்றிலக்கியங்கள்

தமிழ்மொழியில் அமைந்துள்ள சிற்றிலக்கியங்களை வடமொழியில் 'பிரபந்தங்கள்' என வழங்குவது மரபு. பிரபந்தம் என்கின்ற வடமொழிச் சொல்லிற்கு நன்கு கட்டப்பட்ட நூல் என்பது பொருளாகும். யாப்பு, செய்யுள் எனும் தமிழ்ச் சொற்களும் இப்பொருளையே தருவனவாகும். எழுத்து முதலான பல்வகை உறுப்புக்களாலும், அகமும் புறமும் ஆகிய பொருளுக்கு இடமாக இயற்றப்பட்டன என்பதால் சிற்றிலக்கியங்களையும் பிரபந்தம் என்ற சொல்லால் சுட்டுவது முறையே.

சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி பிரபந்தம் எனும் சொல்லிற்கு "..... தொன்னூற்றாறு வகைப்பட்ட நூல், இசையுரு, கட்டுரை" [7] எனப் பலபொருள் தருகின்றது.

தமிழ் கலைக்களஞ்சியமும், "பிரபந்தம் என்னும் வடசொல் தமிழில் நூல் என்று பொருள்படும். தமிழில் தொண்ணூற்றாறு பிரபந்தங்கள் உள. இவற்றுள் பெருங்காப்பியம், முதலான நூல்களும், சிறிய நூல்களும் உள்ளன. சிறு நூல்களில் பொருளிலக்கணத்தில்

---

*5. சிற்றிலக்கிய வளர்ச்சி பக். 283.*

*6. சிற்றிலக்கிய வளர்ச்சி பக்.3.*

*7. சென்னைப்பல்கலைக்கழகப் பேரகராதி - தொகுதி 5.பக். 2680.*

உள்ள பல துறைகளையே விரிவாக்கப் பெற்றவைகளும், புதியனவாகச் சேர்ந்தனவும் உள." [8] என வரையறை செய்து கூறுகின்றது.

இந்நிலையில், தமிழில் தோன்றியுள்ள சிற்றிலக்கியங்களை பிரபந்தங்கள் எனச் சுட்டி வந்தது மரபு என அறிகின்றோம். மேலும் அதன் எண்ணிக்கையை 96 என வரையறை செய்துள்ளதும் குறிப்பிடத் தக்கதாகும்.

## எண்ணிக்கையில் வரையறை

பிரபந்தங்கள் இத்தனை வகைப்படும் என எண்ணி வரையறை செய்ய இயலவில்லை. 'தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள்' எனக் கூறி அவை இன்னவை எனவும் கூறுவதுண்டு. ஆனால் இத்தகைய வரையறைகள் சிற்றிலக்கியங்களுக்கு எவ்வகையிலும் பொருந்திவரக் கண்டதில்லை. தொண்ணூற்றாறு எனச் சுட்டும் அவ்வகைகளுக்கு இல்லாத சில சிற்றிலக்கியங்களை இன்றும் காணலாம். அதே சமயம், அவ்வகைகளுள் உள்ள சில இலக்கிய வகைகள் இன்று நமக்குக் கிடைப்பதும் இல்லை.

மேலும், சிற்றிலக்கியங்களைப் பற்றிய இலக்கணங்களை எழுதவந்த பல்வேறு பாட்டியல் நூல்கள் பலவற்றிலும் ஒன்றுபட்ட வரையறையைக் காண முடியவில்லை. எண்ணிக்கையில் வரும் சில வகைகளுக்குச் சில பாட்டியல் நூல்கள் இலக்கணம் கூறுவதில்லை. பன்னிரு பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல் என்பன சிற்றிலக்கியத்திற்கு இலக்கணம் வகுக்க முற்பட்ட சில பாட்டியல் நூல்களாகும். இதில் ஒரு நூலில் கூறும் அனைத்து வகைகளுக்கும் இலக்கணம் அமைவதில்லை. சில நூலில் மற்ற நூல்களும் கூறும் வகைக்கு இலக்கணம் அமைகின்றது.

எனவே, வரையறைக்குட்படாத பல சிற்றிலக்கியங்கள் இன்னும் பல உள்ளன. இந்நிலையில் சிற்றிலக்கியங்கள் 96 என்றோ, 96 வகைப் பிரபந்தங்கள் என்றோ வரையறை செய்வது பொருத்தமின்றி இருப்பதைக் காணலாம்.

---

*8. கலைக்களஞ்சியம் - தொகுதி - 7. பக் 287*

## சிற்றிலக்கிய இலக்கணம்

"புலவர்களால், தாம்தாம் வேண்டியவாறு தனித்தும், பல செய்யுட்கள் தொடர்ந்தும் வரப் புதிதாகப் பாடப்படுவது. இப்பொதுவிதி, சொற்றொடர் நிலையாய் வரும் அந்தாதி, கலம்பகம் முதலான சிற்றிலக்கியங்களுக்கும், அந்தாதியாய் வராத உலா, தூது, பிள்ளைத் தமிழ் முதலான பல இலக்கியங்களுக்கும் இலக்கணமாயிற்று" [9] என இலக்கணம் வகுத்துக் கூறலாம்.

இதனை ஆராயும்போது சில உண்மைகள் வெளிப்படும். புலவர்களுக்கு விதிக்கப்பட்ட சில வரைமுறைகளை மீறிட வேண்டிய நிலைவந்த சமயம், புலவர்கள் அவைகளை அமைதியுடன் நடத்திக் காட்டினார். அவ் வகையில் எழுந்த இலக்கியங்கள் சிற்றிலக்கியம் எனும் பிரிவினைச் சார்ந்தவையாக அமைந்தன. இதனையே இன்றைக்கும் சிற்றிலக்கியம் படைக்க ஏற்றதொரு இலக்கணமாகக் கொள்ளலாம்.

சென்னைப் பேரகராதி சுட்டுவதைப் போல "சிற்றிலக்கியம் = சிறு இலக்கியம்" என அதன் எல்லையினை வரையறை செய்து புனைவதும் இலக்கணமாக உள்ளது. இவ்வகையான இலக்கியத்தின் பொருண்மை என்பது, இதன் இயல்பினுக்கு ஏற்றதாக அமையும் என்பர். அகமும் புறமும் என்ற இரு நிலையினைச் சார்ந்தும், பக்திச் சுவை நிரம்பியும் வருவதும் முறையாகும்.

## சிற்றிலக்கியச் சிறப்பியல்புகள்

சிற்றிலக்கியங்களில் அதனைப் படைத்திடும் நூலாசிரியரின் நூலறிவினையும், உலகியலறிவையும் நிறைவாகக் காணலாம். புலவரின் கற்பனைத் திறனும் அவ்விலக்கியத்தில் இழைந்தோடி இருப்பதை உய்த்துணரலாம். இவைகளில் காவியச் சுவைகள் நடம் புரியும். உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம் போன்ற பலவகையான அணிநலன்கள், கற்பவர் உள்ளத்தைக் கவரும் வண்ணம் அமைந்திருக்கும். இவற்றில் யமகம், மடக்கு, சிலேடை என்பன சிறப்பாக் அமைந்து யாவரையும் திகைத்திட வைக்கும். பல தலங்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக் களையும் இதன்மூலம் எளிதில் அறிந்து கொள்ளமுடியும்.

---

*9. சிற்றிலக்கிய சொற்பொழிவுகள் - முதலாவது மாநாடு - பக்.4.*

இச்சிற்றிலக்கியப் பாடல்கள் கடவுள் நம்பிக்கையை வளர்க்க வல்லமை. சமய உணர்ச்சியைக் காத்திடத் துணைபுரிந்தன. அறத்தின் மேன்மையை எளிதில் விளக்க வல்லன. நெடும்பாட்டுப் போல்வனவாக அமைந்திருக்கும். முற்றவும் முடிந்த ஒரு குறிப்பிட்ட பொருளின் மேல் இயற்றப் பட்டனவாக இருக்கும். பல துறையைக் கூறும் பெருநூல் போலல்லாது குறிப்பிட்ட துறையின் செய்தியை விரிவாகத் தரவல்லன. குறைவான காலத்தில் படிக்கவல்லதாகச் சுருங்கிய அளவில் அமைந்திருக்கும். இவை வட்டாரச் சார்பு மிக்கவையாக அமைந்திருப்பதையும் காணலாம்.

இத்தகு இலக்கண அமைதிகளை நோக்க, சந்திர பதன் கதை சிற்றிலக்கியக் கூறுகளை உள்ளடக்கிய கதை என்பது தெளிவாகின்றது.

# இஸ்லாமிய இலக்கிய வரலாறு

## இஸ்லாம் ஓர் விளக்கம்

இஸ்லாம் என்பது உலகில் உள்ள பெரிய மதங்களுள் ஒன்று. இஸ்லாம் இப்புவியில் வாழும் எல்லா மக்களுக்கும், எல்லா காலத்துக்கும் இறைவனால் தன் தூதுவர்கள் வாயிலாக அவ்வப்போது அறிவிக்கப்பட்டே வந்திருக்கின்றது. இவ்வாறு ஒரு இலட்சத்து இருபத்து நாலாயிரம் நபிமார்கள் அனுப்பப்பட்ட பின், முகம்மது நபி இறுதியாக இறைவனால் அனுப்பப்பட்டார். மதபோதகர்கள் தோன்றிப் போதித்துச் சென்ற மதங்கள் அப்போதகர்களின் பெயராலேயே அழைக்கப்படுகின்றன. அதுபோல, முகம்மது நபி அவர்கள் போதித்துச் சென்ற மதத்தை சிலர் முகம்மதிய மதம் எனத் தவறாகக் கூறுவர். ஆனால், முகம்மது நபி போதித்துச் சென்ற சமயத்திற்கு ‘இஸ்லாம்’ என்று தான் பெயர்.

‘இஸ்லாம்’ என்ற அரபு வார்த்தைக்குச் சாந்தி பெறுவதற்குரிய மார்க்கம் என்பது ஒரு பொருள். சாந்தி என்ற பொருள்படும் ‘ஸ்லாமத்’ என்னும் சொல்லினைச் சார்ந்து ‘இஸ்லாம்’ என்ற சொல் உண்டானது. இச்சாந்தியை இம்மையிலும் மறுமையிலும் பெற்றுக் கொள்ள மனிதன் வல்ல நாயனைப் பணிந்து வணங்கி, அவன் படைப்புக்களைப் பேணி நேரான தீன் மார்க்க வழியில் சீராகச் சென்றிட வேண்டும். இத்தகைய சாத்தியமான இஸ்லாத்தைப் பின்பற்றிக் கடைப்பிடித்தொழுகுகின்றவர் அனைவரும் ‘முஸ்லீம்’ என அழைக்கப்படுகின்றனர்.

## இஸ்லாத்தின் அடிப்படை

இஸ்லாம் எனும் மார்க்கம் இருபெரும் பகுதிகளைக் கொண்டதாக உள்ளது. அதில் ஒன்று அகநிலையில் அமைந்திருக்கும் ‘ஈமான்’ எனும் விசுவாசம் அல்லது நம்பிக்கை என்பதாகும். இதனுள், ஒவ்வொரு முஸ்லீமும் வல்லநாயன் அல்லாஹ் ஒருவனே வணக்கத்திற்கு உரியோன் எனவும், அவனுடைய அமரர்கள் எனப்படும் “மலக்குகள்” மீதும், அவனுடைய திருத்தூதுவர்கள் அளித்த திருவேதங்கள் மீதும், திருத்தூதுவர்கள் மீதும், இறுதியாக உலகம்

காண இருக்கும் தீர்ப்பு நாளின் மீதும், நன்மையும் தீமையும் அவன் அறிபவன், அதற்கு நற்கூலி தர அவனால் மீண்டும் உயிர்ப்பிக்கப் படுவோம் என்பதன் மீதும் முழுமையான மெய் நம்பிக்கையைப் பரிபூரணமாய் உள்ளத்தில் கொள்ளுதல் வேண்டும். மற்றொன்று புறநிலை. ஒருவன் கடைப்பிடிக்க வேண்டிய ஐந்து கடமைகள் பற்றியது. அவை, ஒன்று, வணக்கத்துக்குரிய நாயன் அல்லஹ் ஒருவனைத் தவிர வேறு இல்லை எனவும், இறுதி நபியாக முகம்மது நபி (ஸல்) அவர்கள் இருக்கின்றார் என்ற கொள்கையில் மனம், செயல் ஆகியவற்றால் உறுதிகொள்ளும் ‘ஈமான்’ ஆகும். இரண்டு, கிழக்கு வெளுப்பது முதல்கொண்டு நடுநிசி வரை ஐந்து முறை அல்லாஹ் ஒருவனே என்ற உறுதியுடன் கஃபா நோக்கி முகங்கொண்டு தொழுதிட வேண்டும் என்பதாகும். மூன்று, இஸ்லாமிய மாதங்கள் பன்னிரண்டினுள் ஒன்பதாம் மாதமான ரமலான் மாதத்தில் பிறை கண்டது முதல் மறுபிறை தெரியும்வரை உள்ள நாட்களில் சூரிய உதயம் முன்னால் இருந்து சூரியன் மறைவு வரை உண்ணாமல், பருகாமல், தீயவை செய்யாமல் இருக்கும் நோன்பு என்பதாகும். நான்கு ‘ஜக்காத்’ எனும் ஏழை விகிதத்தை வறியவருக்கு மனமுவந்தளித்தல் என்பதாகும். ஐந்து, ஒவ்வொருவரும் திறமையும், வாய்ப்பும், வசதியும் ஏற்பட்டால் ஒருமுறையாவது ‘கஃபா’ எனும் மக்கமா நகருக்கு புனிதப் பயணம் சென்று வரவேண்டும் என்பதாகும்.

இஸ்லாமியர்களுக்கு திருக்குர் ஆனும், நபிகளின் உபதேச நெறி முறைகளும், வாழக்கை நெறிமுறையை வழிப்படுத்திக் கூறுகின்றன.

## இஸ்லாத்தின் அமைப்பு

“இஸ்லாத்தின் அடிப்படை திருக்குர்ஆனாகவே இருக்கின்றது. அதற்கு அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறிய விளக்கவுரைகளும், அவர்கள் சொன்ன அறவுரைகளும், நடந்து காட்டிய நெறிமுறைகளும் ‘ஹத்து’ எனப் பெயர் பெற்றிருக்கின்றன.

“பொதுவாக, வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சம் பற்றியும் இஸ்லாத்தில் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. நகம் வெட்டுவது முதல்இறைவனில் தன்னை ‘ஃபனா’ வாக்கிக் (அழித்து) கொள்வது வரையில் எந்த விஷயம் பற்றியும் இஸ்லாம் கூறாமல் இருக்கவில்லை.

அவற்றிற்கான விதிமுறைகளை வகுக்காமலும் இருக்க வில்லை. எனவே, மனித வாழ்வு முழுமைக்கும் வழி காட்டிடக் கூடிய ஓர் ஒப்பற்ற உயர்நெறி, செப்பரிய சீர் நெறி இஸ்லாம் ஆகும் என்று துணிந்து கூறமுடியும். [10]

## இஸ்லாமும் தமிழகமும்

இத்தகு, இஸ்லாம் எனும் மார்க்கம் இவ்வுலகில் பரவுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கும் முன்பாகவே அரபு மக்கள் எனப்படும் இஸ்லாமிய மக்களின் மூதாதையர்கள் தமிழகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். தமிழகத்தின் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள கடல் பகுதிகளில் இவ்வரபு மக்கள் வணிக உறவு வைத்திருந்தனர். இதற்கான சான்றுகள் சங்க கால இலக்கியப் பாடல்களில் இருப்பதைக் காணலாம். "யவனர்" என்ற கிளவி இவ்வரபு மக்களைக் காட்டப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

"மத்திய தரைக்கடலுக்கு வட கிழக்கே இரண்டு கடல்கள் உள்ளன. ஒன்று ஏஜியன்கடல், மற்றது ஐயோனியன் கடல். இந்த ஐயோனியன் கடலுக்குக் கரையாக அமைந்துள்ள பிரதேசம் அரபு மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதியாகும். அரபுத் தீபகற்பத்தின் வடமேற்குப் பகுதியும், பாலஸ்தீனம், சிரியா, லெபனான், துருக்கி, சைப்பிரஸ் முதலிய நாடுகளும் இந்த ஐயோனியன் கடலைச் சுற்றிவர உள்ள நாடுகளாகும். இக்கடலைச் சுற்றிவர உள்ள பிரதேசமே ஐயோனியன் கடற்கரைப் பிரதேசமாகக் கணிக்கப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் ஐயோனியர் என்று அழைக்கப்பட்டனர். பின்னர் இவர்களே யவனர் என அழைக்கப்பட்டனர்." [11]

"யவனர் என்னும் சொல் தொடக்கத்தில் மேற்கு நாட்டிலிருந்து வந்த கிரேக்கரைச் சுட்டியது. பின்னர் அவர்களைத் தொடர்ந்து வந்த உரோமானியரைக் குறித்தது. அதற்கப்புறம் உரோமானியரின் பின்னர் வந்த அராபியரைக் குறிக்க வழங்கப்பட்டது". [12]

---

*10. இஸ்லாமிய கலைக்களஞ்சியம் - தொகுதி பக். 281.*

*11. இஸ்லாம் வளர்த்த தமிழ் பக். 1.*

*12. இஸ்லாம் வளர்த்த தமிழ் பக்.5.*

இந்த யவனர்கள் தமிழகத்திற்கு வருகை தந்தது வணிக நோக்குடனேயே என்பதை,

"It seems to me that Arab World-Conquest would have come about even if the prophet had never been born. It's motire was more economic than religious." (13)

என்ற பாபானி பட்டாச்சாரியாவின் கூற்றும்,

*"சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க*
*யவனர் தந்த வினைமா ணன்கலம்*
*பொன்னொடு வந்து கறியொடு பெயரும்"* - 14

என்ற வரிகளும்,

*"யவனத் தச்சரும் அவந்திக் கொல்லரும்"* - 15

என்ற அடியும்,

*"அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்"* - 16

என்ற வரியும் தெளிவாக வலியுறுத்தும்.

"சீனம் சென்றேனும் ஞானம் தேடு" என்ற நபிகள் நாயம் (ஸல்) அவர்களின் பொன்மொழி இஸ்லாமியர்கள் கொண்டிருந்த பன்னாட்டு உறவினுக்குத் தக்க சான்றாக அமையும்.

இஸ்லாம் இவ்வுலகில் பரவத் தொடங்கியபோது இந்திய துணைக் கண்டத்தின் மேற்குக் கடற்கரை மற்றும் கிழக்குக் கடற்கரை ஓரங்களில் மிகுதியான அளவில் இஸ்லாமியர்களின் குடியிருப்புக்கள் தோன்றலாயின. இவர்களுடைய வியாபார நோக்கினையும், பண்புகளையும் நன்குணர்ந்து இப்பகுதிகளின் அரசர்கள் அவர்களின் வர்த்தகம் சிறக்க, அனைத்து உதவிகளையும் மகிழ்வுடன் செய்து தந்தனர்.

---

*13. Glimpses of Indian History.Pa. / 19.*

*14. அகம் - 149.* *15. பெருங்கதை (1.58.49).*

*16. மணிமேகலை (19. 108)*

## இஸ்லாமியர்களும் தமிழர்களும்

அக்காலத்தில் வாழ்ந்த தமிழக இஸ்லாமியர்கள் தமிழைப் பேசக் கற்றிருந்தனர். ஆனால் எழுதுவது அவர்களுக்குச் சிரமமான செயலாக அமைந்திருக்க வேண்டும். இவர்கள் அரபு மொழியில் இருந்து இஸ்லாமியர்களின் புனித வேதமான 'அல்குர்ஆன்'ஐ நன்கு ஓதக் கூடியவர்களாய் இருந்திருக்க வேண்டும். இதன் விளைவாக, அரபு எழுத்துக்களைச் சரியான உச்சரிப்பு முறையுடன் அவர்கள் படிக்கும் ஆற்றல் பெற்றிருந்திருக்க வேண்டும். தமிழ்மொழியை நன்கு பேசவும், அரபு மொழியை நன்கு படிக்கவும் திறம் பெற்றிருந்த அக்காலத் தமிழக இஸ்லாமியர்களுக்கு, அரபு மொழியில் நன்கு திறம் வாய்ந்த மொழி வல்லுநர்கள், நூல்களில் ஒரு புதிய முறையைக் கையாண்டு உள்ளனர். பேச்சு நடைக்கு இணையான ஒரு நடையிலே இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களைப் படைத்தலே அம்முறையாகும். இவ்வகையில் தமிழ் மொழியில் அரபு எழுத்துக்களைக் கொண்ட பல இலக்கியங்கள் வெளிவந்தன. இவ்வகையான இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களே "அரபுத் தமிழ் இலக்கியங்கள்" என்று இன்றும் வழங்கப்படுகின்றன. இவ்வரபுத் தமிழ் நடையில் உரைநடை நூல்கள் மட்டும் இன்றி, சிறந்த பொருளழகுடைய ஒலி அழகுடனான கவிதை நூல்களும் படைக்கப்பட்டன.

காலப்போக்கில் இந்நிலை மாறிவிட்டது. தமிழில் ஆர்வம் பெருகவும், இஸ்லாமியப் புலவர்கள் தமிழில் பெற்ற புலமையும் பெருகப் பெருக இந்நிலை நெகிழ்வு கண்டது. இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் தமிழ் எழுத்துக்களாலேயே எழுதப்பட்டன. இந்நிலையில் தமிழ் இஸ்லாமிய இலக்கியங்கள் தோற்றம் பெற்றன.

## இருண்ட காலம்

"இருள் சூழ்ந்த அக்காலகட்டத்தில் தினசமாறிப் போய்க்கொண்டிருந்த தமிழ் இலக்கியப் போக்கினைக் கட்டுப்படுத்தி, தலை சிறந்த காப்பியங்களையும் ஞான நூல்களையும் சிற்றிலக்கியங் களையும் புதிய இலக்கிய வகைகளையும் ஏராளமாக எழுதித் தமிழின் மறுமலர்ச்சிக்குக் காரணமாய் அமைந்தவர்கள் இஸ்லாமியத் தமிழ்ப்

புலவர்கள் எனலாம்." [17] என சாயபு மரைக்காயர் அவர்கள் இஸ்லாமிய சிற்றிலக்கியத்தின் கொள்கைகளை வகுத்திட முனையும் போது சுட்டிச் சென்றுள்ளது இங்கு எண்ணத்தக்கது.

தமிழ்மொழிக்கெனத் தனி இலக்கிய வரலாறு உண்டு. இது சிறந்த நிலையில் தமிழ் மொழி வளமை பெற்று விளங்கிய காலங்களைச் சுட்டிச் செல்லும். அந்நிலையில் தமிழ் இலக்கிய வரலாற்றில் இரண்டு கால கட்டங்களை "இருண்டகாலம்" என்றே சுட்டலாம். அவை,

(1) நான்காம் நூற்றாண்டு முதற்கொண்டு ஏழாம் நூற்றாண்டு வரையிலான இடைப்பட்ட மூன்று ஆண்டுகள்.

(2) கி.பி. பதினாறாம் நூற்றாண்டு முதற்கொண்டு கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையிலான இடைப்பட்ட காலம்

என்பனவாம்.

## இலக்கியமும் சமுதாயமும்

உலக மனிதன் வாழ்க்கை முறை வேறுபாட்டையும், காலச் சூழ்நிலையில் ஏற்படும் மாற்றங்களையும் பின்னணியாகக் கொண்டு எந்த ஒரு மொழியிலும் படைக்கப்படுகின்ற இலக்கியங்கள் தனது தன்மையிலும் மாறுபடுகின்றன. இலக்கியங்கள் எந்தவொரு காலகட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றுகின்றதோ அக்காலகட்டத்தில் அமைந்திருக்கும் சமூக, சமுதாய சூழ்நிலைக்கு ஏற்பவே தோன்றுமென்பதே இதற்குக் காரணமாகும். ஒரு சமுதாயம் மற்றும் அச்சமுதாயத்தில் வாழும் மனிதரின் மனப்போக்கு அக்காலகட்டத்தில் தோன்றும் இலக்கியங்களில் இழைந்தோடி இருப்பதைக் காணலாம்.

---

*17. தமிழ் இலக்கிய கொள்கை 8, பக் 273.*

## தமிழும் சமயமும்

தமிழ் மொழியின் வளர்ச்சியில் சமயங்களின் பணி தலையான பணி என்பர். இம்மொழியின் சீரிளமைத் திறம் குன்றாமல் உயர்தனிச் செம்மொழியாய், செந்தமிழாய் விளங்கிட, பல சமயங்கள் பெருந் தொண்டு செய்துள்ளன. பல்வேறு சமயங்கள் யாவையும் தமக்குள் ஒற்றுமை கொண்டு, இத்தமிழ் மொழியை வளர்த்துள்ளன. எனவே தான் நாயன்மார் இயற்றிய பதிகங்களும், நல்லாழ்வார் இயற்றிய பாசுரமும், மேயபுகழ் பெற்ற மேகலையும், மேம்பட்ட சிந்தாமணியும், மாமுனி இயற்றிய தேம்பாவணியும், மனமகிழ் சீறாவும் அருந்தமிழை இன்றளவும் அணி செய்கின்றன.

பலநதி நீரைத் தன்னுள் அடக்கி, தண்மையுடன் காட்சி தரும் கடலைப் போல, தமிழும் பல்வேறுபட்ட சமயத்தோரின் தொண்டினை ஏற்று குன்றா வளமை கொண்டு விளங்குகின்றது.

இங்ஙனம் தமிழ்மொழி குறிப்பிட்ட சமயத்தாருக்கு மட்டுமின்றி அனைத்து சமயத்தாருக்குமுரிய மொழியாக அனைவராலும் பேணிக் காக்கப்பட்டு வந்துள்ளது. இதனுள் அமைந்துள்ள சிற்றிலக்கியங்களின் வளர்ச்சியை நோக்குவோமானால் தமிழ் மொழிக்கு சமயங்கள் ஆற்றியுள்ள பெரும்பணி தெரியவரும். சமயங்களுக்கும் தமிழ்மொழிக்கு மிடையே இருந்த தொடர்பை 'உள்ளங்கை நெல்லி' என நமக்கு விளக்கவல்ல காலகட்டம் தமிழ் இலக்கிய வரலாற்றின் இடைக்காலப் பகுதியாகும்.

சமயங்கள் தங்கள் தங்கள் வழிபாட்டுக் கொள்கைகளையும், தத்துவ விளக்கமுறைகளையும் எடுத்துரைப்பதற்குத் தமிழ்மொழியை ஒரு கருத்துப் பரிமாற்ற சாதனமாகப் பயன்படுத்திக் கொண்டன எனலாம்.

"அயல் நாடுகளில் இருந்து இங்கு வந்து பரவிய இஸ்லாமிய கிருத்துவ சமயங்களும் தமிழ் மொழியை நிலையாகக் கொண்டு தங்கள் சமயக் கோட்பாடுகளை எடுத்துரைத்தன. எனவே, பக்தி மார்க்கம் என்ற பின்புலத்தின் அடிப்படையில் தோன்றிப் பெருகியுள்ள தமிழ்ச்

சிற்றிலக்கியங்களுள் இஸ்லாமும் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது. [18]

## தமிழும் இஸ்லாமும்

இவ்வழியில் தான் தமிழகத்திலும் இஸ்லாமிய மார்க்கப் போதனைகளை முஸ்லீம்கள் அறிந்து கொள்வதற்கும், அதன் கொள்கைகளைப் பரப்புவதற்கும் இஸ்லாம் தொடர்பான தமிழ் நூல்கள் தேவையாயிற்று. இத்தகு தேவையின் பயனாகவே இஸ்லாம் பற்றிய செய்திகளைத் தாங்கிய தமிழ் நூல்கள் தமிழகத்தில் தோன்றின.

“தமிழ் இலக்கியமும் இரண்டாயிரம் ஆண்டு காலப் பரப்பும், பல்வேறு இலக்கிய காலப் பகுதிகளும் கொண்டது. ஒவ்வொரு காலப்பகுதியும் பழைய வகைகளை வளர்த்திருக்கிறது, மரபு அடிப்படையிலான புதிய வகைகளையும் தோற்றுவித்திருக்கிறது, பிறமொழி இலக்கியங்களின் தாக்கத்தினால் மாற்றமும் வளர்ச்சியும் பெற்றிருக்கிறது”, [19] என்ற டாக்டர் இராம. பெரிய கருப்பன் அவர்கள் கூறிய கருத்தும்,

“சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடியே இலக்கியம். கால ஓட்டத்தில் மக்களின் வாழ்க்கையே மாறுபடும்போது இலக்கியங்களும் மாறுபடுகின்றன.” [20] என்கின்ற முத்துராசன் அவர்களின் கருத்தும், மேற்கண்ட இஸ்லாமிய இலக்கியத் தோற்றம் பற்றிய கருத்தினை வலியுறுத்தும்.

*“பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்*
*தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்*
*இறவாத புகழுடைய புதுநூல்கள்*
*தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்.”* [21]

என்ற பாரதியின் கனவினை இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் செவ்வனே நிறைவேற்றினர் என்றால் அது மிகையன்று.

---

*18. இஸ்லாமியத் தமிழ் சிற்றிலக்கியங்கள் பக். 8.*
*19. இஸ்லாமியச் சிற்றிலக்கியங்கள் பக்.19.*
*20. சிற்றிலக்கியச் சிந்தனைகள் பக். 3.*
*21. பாரதியார் கவிதைகள் பக். 12.*

## இஸ்லாமியத் தமிழ்ப்புலவர்களின் காலம்

இக்காலகட்டங்கள், களப்பிரர்களாலும், மராத்தியர்களாலும், தெலுங்கர்களாலும், கன்னடியர்களாலும் சிறு சிறு பகுதிகளாய் இத்தூய தமிழகத்தை ஆண்ட காலம். தமிழின் வளமையைக் குறைத்திட அனைத்து முறையிலும் முனைந்து செயல்பட்ட காலமது. இந்த இக்கட்டான கால கட்டங்களில் தமிழன்னையின் தாகம் தீர்த்த பெருமை இஸ்லாமியத் தமிழ் புலவர்களையே சாரும்.

எனவே, பதினைந்தாம் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி எல்லை வரையிலான காலகட்டத்தினை, 'இஸ்லாமியத் தமிழ் புலவர்கள் காலம்'

எனவே சுட்டிட வேண்டும்.

இம்முறைப்பாட்டினை, "இலக்கிய வரலாற்றாசிரியர்கள் பல்லவர்கள் காலம் சோழர்காலம், நாயக்கர் காலம் என்ற காலமாக வரலாறு எழுதுவதைப் போன்று , 16ம் நூற்றாண்டிற்கும், 17ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தை 'இஸ்லாமியர் காலம்' என்று குறிப்பிட்டெழுதினால் அது பொருத்தமுடையதாகவே விளங்கும்." (22) என்ற கூற்று உறுதிப்படுத்துவதைக் காணலாம்.

## இஸ்லாமியரின் தமிழ்த்தொண்டு

"எண்ணிறந்த இஸ்லாமியப் புலவர்கள் மிகச் சிறந்த நூல்கள் பலவற்றைத் தமிழிலே படைத்திருக்கின்றார்கள். ஆனால், இவ்விலக் கியங்களைப் பற்றிப் பலருக்குத் தெரியாது. சீறாப்புராணம் போன்ற சில நூல்கள் தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றனவே யொழிய, தமிழ்த் தொண்டிலே ஊறித் திளைத்த நூற்றுக்கணக்கான முஸ்லீம் புலவர்களின் படைப்புகள் அறிமுகப் படுத்தப்படவில்லை" 23 என்ற ஈழத்து பேராசிரியரான சு.வித்தியானந்தன் அவர்களின் கூற்று இங்கு ஆராயத்தக்கது.

---

*22. இஸ்லாமியச் சிற்றிலக்கியங்கள் - பக். 11.*

*23. இஸ்லாமியச் சிற்றிலக்கியங்கள் - பக். 10.*

இன்றும் இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்களால் தமிழன்னைக்கு அணிகளாய்ப் படைத்திட்ட பல நூல்கள், அரிய படைப்புகள் தமிழுலகத் திற்கு அறிமுகப்படுத்தப்படாமலே உள்ளன. இந்த அவல நிலை நீங்க வேண்டும். இந்நிலையில் மேற்சொன்னது உண்மை என்பது தெளிவுபடும். இந் நிலையிலே, இஸ்லாமியத் தமிழிலக்கிய ஆய்வு தீவிரப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை நன்கு உணரலாம்.

## இஸ்லாமியச் சிற்றிலக்கியப் பொருள்பாகுபாடு

எந்த ஒரு படைப்பாளனும் படைத்திடும் இலக்கியத்தில் முறையே, வடிவம், பொருள், வெளியீட்டுமுறை எனும் மூன்று இன்றியமையாக் கூறுகளை அமைத்திருப்பது இயல்பு. இவைகளுள் முதலில் அமைந்திருக்கும் வடிவம், பொருள் ஆகிய இரண்டு இலக்கியக் கூறுகளைப் பொதுவான நிலையில் சுட்டுவர். வெளியீட்டு முறையினைத் தனிநிலையில் தெளிவுபடுத்துவர்.

இஸ்லாமியச் சிற்றிலக்கியங்கள் அவற்றின் யாப்பமைதியில் பெரும்பாலும் மரபினை ஒட்டியே அமைந்திருக்கும். ஆனால் மொழி நடையில் ஒருகுறிப்பிட்ட தனிநிலை பெற்று விளங்கும்.

இஸ்லாமியச் சிற்றிலக்கியங்களின் பாடு பொருளை 12 வகையாகப் பகுத்திடலாம். அவை முறையே,

(1) நபிகள் நாயகத்தைத் தலைவராக உருவகித்துப் பாடப்பட்டவை.

(2) இறை நேசர்களைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டவை.

(3) இஸ்லாமியச் சமயக் கருத்துகளை வலியுறுத்தி இயற்றப் பட்டவை.

(4) இஸ்லாமிய வரலாற்று நிகழ்வுகளை வருணித்துப் படைக்கப் பட்டவை.

(5) இஸ்லாமியப் புண்ணிய தலப்பகுதிகளை விளக்கிடப் படைக்கப்பட்டவை.

(6) இஸ்லாமிய விழாக்களில் படிப்பதற்காகவே படைக்கப்படும் இலக்கியங்கள்.

(7) குறிப்பிட்ட சில நிகழ்ச்சிகளில் மட்டும் கடைபிடிக்க வேண்டிய நியதிகளை விளக்கும் வண்ணம் படைக்கப்பட்டவை.

(8) புலமைசால் புலவர் பெருந்தகைகளைத் தலைவர்களாகக் கொண்டு பாடப்பட்டவை.

(9) அகத்திணை ஒழுக்கங்களைச் சார்ந்த இலக்கியங்கள்.

(10) உருது, அரபி, பாரசீகம் போன்ற மொழிகளில் அமைந்த இலக்கியங்களின் மொழிபெயர்ப்பாகப் படைக்கப்பட்டவை.

(11) இஸ்லாமியர் வாழ்க்கை நெறிமுறைகளை விளக்கிடப் படைத்திடப்பட்டவை.

(12) இவை ஒழிந்த பிற வகையினைச் சார்ந்த இலக்கியங்கள் என்பவை.

இவ்வகையில் இஸ்லாமியத் தமிழ் புலவர்கள் தங்கள் தனித்திறமையை வெளிப்படுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**பண்பாட்டின் கலப்பு தந்த பரிசு**

பண்பாடுகளின் கலப்பும், ஒருமொழியில் தோன்றும் இலக்கியங்களில் ஒளிவீசும் இஸ்லாமியப் பண்பாடு தமிழ்மொழியுடன் கலந்தபோது பல புதிய இலக்கிய வகைகள் தோன்றின. தமிழ் இலக்கியக் கோட்பாடுகளுடன் இணைந்தும், சிலவற்றினை மாற்றியும் மாற்றம் கொண்ட புதிய இலக்கியக் கொள்கையினைச் சார்ந்து இவ்வகையான இலக்கியங்கள் உருப்பெற்றன.

“அரேபியர்களுக்கும் தமிழர்களுக்கும் ஏற்பட்டிருந்த கலாச்சார வணிகக் கலப்பால், மொழி நிலையிலும் இலக்கிய நிலையிலும் தமிழ்ச் சமுதாயம் பல புதிய கலாச்சாரக் கூறுகளைத் தன்னுள் ஐக்கியப்படுத்திக் கொண்டது”.

“இஸ்லாமியக் கலாச்சாரத்தின் பதிப்பாலும், தமிழ் இஸ்லாமியப் பண்பாட்டின் ஒருங்கிணைப்பாலும் பல இஸ்லாமியத் தமிழ் நூல்கள்

மண்ணில் பிறப்பெடுக்கத் தொடங்கின"[24] என்ற கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது. மேற்கூறிய செய்திகளை இக்கூற்று உறுதிப் படுத்துவதைக் காணலாம். இஸ்லாமியப் பண்பாடு தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆழமான முத்திரையைப் பதித்துவிட்டது என்று உறுதியாகக் கூறலாம்.

## இயக்க இலக்கியமா?

இஸ்லாமிய இலக்கியங்களை 'இயக்க இலக்கியம்' என்ற வரையறையினுள் கட்டுப்படுத்திட முயல்வது ஏற்புடையது அன்று. ஏனெனில்,

"ஒரு குறிப்பிட்ட இயக்கம் அல்லது பிரிவின் இலட்சியங்கள், தத்ததுவங்கள் ஆகியவற்றைப் பரப்பும் குறிக்கோளுடன் இவை அமைகின்றன" (25) என்ற இயக்க இலக்கியத்திற்கான கொள்கை இஸ்லாமிய இலக்கியங்களுக்குப் பொருந்திவராமல் இருப்பதைக் காணலாம்.

முதற்கண் இவை குறிப்பிட்ட இயக்கத்தினருக்காகப் படைக்கப்பட்டவை அல்ல. இஸ்லாமியர்களுக்காக மட்டும் படைக்கப் பட்டிருந்தால் அவை இன்றளவும் 'அரபு' மொழியிலேயே அமைந்திருக்க வேண்டும். தமிழ் மொழியினை உணர்ந்த அனைவரும் படித்து, அதன் பயனை நுகரும் வண்ணம் அமைந்த இலக்கியங்கள் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் என்பதை உணரவேண்டும். எனினும் ஒருசில கூறுகள் மேற்கூறிய இயக்க இலக்கியம் என்ற வரையறையினைச் சார்ந்து வருவதைக் காணலாம்.

"சாதாரண மக்களை மனதில்கொண்டு, அவர்களைக் கவர்ந்து தன் வயப்படுத்தும் குறிக்கோளுடன் இப்படைப்புக்கள் அமைகின்றன. இதனால் சாதாரண மக்களிடையே பெரு வழக்கில் நின்று நிலவும் நாட்டுப்புற இலக்கியக் கூறுகளை இவை இயன்ற அளவிற்குப் பயன்படுத்த முயல்வதைக் காண்கின்றோம்." (26)

---

*24. முனைவர் ஜான் சாமுவேல். பண்பாட்டுக் கலப்பும் இலக்கிய ஒருமையும் - பக். 104*

*25. பண்பாட்டுக் கலப்பும் இலக்கிய ஒருமையும் - பக். 73.*

*26 பண்பாட்டுக் கலப்பும் இலக்கிய ஒருமையும் - பக் 73*

என்ற கூற்று இஸ்லாமிய இலக்கிய வகையின் ஒரு சில கூறுகளுடன் பொருந்தி வருவதையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

## இஸ்லாமிய இலக்கியத்தின் சிறப்பு

"சைவம், வைணவம், சமணம் முதலிய சமயங்களுக்கு என்னென்ன வகையான இலக்கியங்கள் உண்டோ அத்தனையும் இஸ்லாமிய சமயத்திற்கும் ஏற்பட்டன. தாயுமானவரைப் பின்பற்றி அழகான தத்துவக் கருத்துக்களை உடைய பாடல்கள் பாடப்பட்டன. அருணகிரி நாதரைப் போல் அழகான் சந்தம் உடைய திருப்புகழ் பாடல்களும் இயற்றப்பட்டன "சமயச் சார்பான நூல்களில் அரபுச் சொற்கள் பல கலந்து உள்ளன. சமயக் கருத்துக்களை விளக்குவதற்கு அவை தேவைப்படுகின்றன. "உணர்ச்சியும் ஓட்டமும் அழகும் நிறைந்த நடையில் இயற்றப்பட்ட நூல்கள் பல உள்ளன". [27] என்ற மு. வரதராசன் அவர்களின் இஸ்லாமிய இலக்கியங்கள் பற்றிய கருத்து இங்கு எண்ணத்தக்கதாக அமைந்துள்ளது.

மேற்கண்ட கூற்று இஸ்லாமிய இலக்கியங்களின் தனித் தன்மைகளை மேற்போக்காகக் காட்டிச் சென்றுள்ளது.

சில இடங்களில் சமயக் கருத்துகளை விளக்கிடவே 'அரபு' போன்ற பிற மொழிச் சொற்கள் கையாளப்பட்டன. இஸ்லாமிய இலக்கியங்கள் உயிரோட்டம் உள்ளவை. உணர்ச்சிபூர்வமான அமைப்பினைக் கொண்டவை.

## அரபுத் தமிழ் எனும் புதிய முறை

இஸ்லாமியர்களின் கோட்பாடுகள், கொள்கைகள், தத்துவ விளக்கங்கள், வாழ்க்கை வழிமுறைகள் உள்ளிட்ட அனைத்துச் செய்திகளும் முதலில் அரபு மொழியில்தான் இருந்து வந்துள்ளன. அரபு

27. *தமிழ் இலக்கிய வரலாறு பக். 235.*

முதல் நூல்களிலேயே இவை வாசம் செய்துள்ளன. எனவே, அரபு மொழியை முற்றிலும் உணராதவர் இஸ்லாமிய மார்க்கச் சட்டதிட்டங்கள் (ஷரியத்) போன்றவற்றை எளிதில் உணர்ந்து கொள்ள இயலவில்லை. இதனாலேயே அரபு மொழியினை நன்கு பயிற்சி உடைய அறிஞர்கள் (ஆலிம்) பொதுமக்களிடையே சமயப் பற்றினையும், மார்க்க சட்டதிட்டங்களை நிலைநிறுத்திடும் நோக்குடன் அரபு மொழியில் அமைந்திருந்த இசுலாமிய மத நூல்களைத் தமிழ் மொழியில் மொழி பெயர்த்திட முன்வந்தனர். இங்ஙனம் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்ட இஸ்லாமிய மத நூல்களைத் தமிழ் மொழியினை மட்டும் உணர்ந்த, தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருந்த இஸ்லாமியர்கள் தங்களுடைய மத நூல்களாக மதித்தனர்.

"இந்நூல்கள் யாவும் இஸ்லாமியக் கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. பல அரபுச் சொற்கள் இந்நூல்களில் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்மொழியிலே எழுந்துள்ள பௌத்த நூல்களில் பாலிச் சொற்களும் சமண நூல்களில் பாகதச் சொற்களும் வைணவ நூல்களில் சங்கேதச் சொற்களும் எவ்வாறு இடம் பெற்றிருக்கின் றனவோ அவ்வாறே இஸ்லாமியத் தமிழ் நூல்களில் அரபுச் சொற்கள் ஆளப்பட்டுள்ளன."[28] என்ற உவைஸ் அவர்களின் கூற்று இஸ்லாமியத் தமிழிலக்கியங்களில் அரபுச் சொற்கள் கலந்திருக்கும் நிலையினை நியாயப்படுத்துவதைக் காணலாம்.

இஸ்லாமியர்களின் புனித மொழியாக அரபு மொழி விளங்குகின்றது. இஸ்லாமியர்களின் புனித வேதமான 'குர்ஆனு'ம் அரபு மொழியில் தான் அமைந்துள்ளது. இஸ்லாமியர் தங்களின் மதத் தொடர்பான நூல்களை அரபு மொழியில்தான் படித்திட வேண்டும் என்ற நம்பிக்கை முன்பு நிலவி வந்தது. எனவே, அரபு லிபியைக் கொண்டு தமிழ் மொழியின் உச்சரிப்புகளைக் கொண்ட புதிய எழுத்துக்களாலான 'அரபுத்தமிழ்' என்றதொரு மொழியினைக் கையாண்டனர். இங்ஙனம் பல்வேறு நிலையில் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு நீண்டு காணப்படுகின்றது.

---

*28. இஸ்லாமும் இன்பத் தமிழும் - பக். 13.*

## இஸ்லாமியத் தமிழ் இலக்கியத் தனித்தன்மை

"இஸ்லாமியக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட தமிழ் நூல்கள் தமிழ்நாட்டு முஸ்லீம்களுக்கு பயன்படக்கூடிய முறையில் இயற்றப்பட்டன. இந்நூல்கள் பெரும்பாலும் அரபுமொழியிலுள்ள முதல் நூல்களையே பின்பற்றி இயற்றப்பட்டன."[29] என்ற உவைஸ் அவர்களின் கூற்று இஸ்லாமிய இலக்கியத்தின் தனித்தன்மைகளையும் அதன் தோற்றுவாய் எது எனும் நிலையினையும் சிறப்பாகச் சுட்டுவதைக் காணலாம்.

"இவர்களுடைய படைப்புக்களின் தனித்தன்மை என்ன வென்றால் அமைப்பினாலும், மரபினாலும் முழுக்க முழுக்க பிற சமயத்தார் தமிழில் இயற்றியிருக்கும் இலக்கியங்களுக்குச் சற்றும் மாறுபடாமலும், அதே சமயத்தில் தங்களுடைய சமயத்தின் அடிப்படைக்கொள்கைகளினின்றும், நெறியினின்றும், மரபினின்றும் சற்றும் பிறழாமலும் நின்றது தான். இதனுடைய பலன் என்னவென்றால் அற்புதமான இலக்கியக் கருவூலம்."[30] என்ற மு.மு. இஸ்மாயில் அவர்கள் கருத்து இஸ்லாமிய இலக்கியத் தனித்தன்மை குறித்த மிகுந்த ஆழமான கருத்தாக அமைந்துள்ளது.

இஸ்லாமியத்தமிழ்ப் புலவர்கள் தங்கள் திறமைகளை வெளிக்காட்டிய விதத்தினையும், இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களின் தனித்தன்மையுடன் அதன் அமைப்பினையும் நன்கு விளக்க இக்கூற்று பயன்படுகின்றது.

"மதத்தால் வேறுபட்டாலும் மொழியாலும் வழியாலும் தமிழராகவே தமிழ்நாட்டு முஸ்லீம்கள் திகழ்ந்தனர். எனவே, தமிழ்த்தாய்க்குத் தொண்டாற்றச் சைவரைப்போல, வைணவரைப் போல முனைந்து நின்றனர். தமிழ்த்தாய்க்கு இஸ்லாம் மத நூல்களைத் தமிழாக்கிச் சமர்ப்பித்தனர். ஏராளமான அரபுச் சொற்களையும் தமிழ்சொற்களைப் போல, தமிழ்க் கவிஞரும் பயன்படுத்தும் அளவுக்குப் பழக்கத்தில் கொணர்ந்தனர்" என்ற பூவண்ணன் அவர்களின் கூற்று இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்களின் தனித்தன்மைக்குத் தக்க சான்றாகும்.

---

*29. இஸ்லாமும் இன்பத் தமிழும் - பக்.20.*

*30. இஸ்லாமும் தமிழும் - பக். 11.*

## கதைப்பாடலின் வரலாறு

கதை எனும் சொல்லைக் கேட்கின்ற பொழுது மனத்தில் இனம் புரியாத ஓர் ஆர்வம் தோன்றுவதை உணரலாம். இந்த இன்பகரமான உணர்வுக்கு ஆட்படாதவர்களே இல்லை எனலாம். சிறுபிள்ளைகள் முதல் வயதான முதியோர் வரை உள்ள பல வயதினரும் கதையைக் கேட்கவும், கூறவும் மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கின்றார்கள் என்பது உண்மையாகும்.

கதை என்பது பெரும்பாலும் கற்பனைகள் கலந்தும், உண்மைச் சம்பவங்களைத் தழுவியும், வரலாற்று நிகழ்ச்சிகளை விவரித்துக் கொண்டும் செல்லுகின்ற அமைப்பை உடையது. அவைகளில் அறநெறிகளும், தத்துவ உண்மைகளும் வலியுறுத்திக் கூறப்படுகின்றன. இத்தகு தன்மைகளால் கதைகளின் சிறப்பான தொண்டினை உணரமுடிகின்றது.

### கதை – பெயர் விளக்கம்

'கதை' எனும் சொல்லுக்கு சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி, "பெரிய சரிதம்; இதிகாச புராணங்கள்; பெருங்கதை; பொய் வார்த்தை; விசித்திரக் கதை; கட்டுக் கதை; சொல்; விதம்; சம்பாஷணை" [31] எனப் பல பொருள்களைத் தந்துள்ளது. மேலும், கலைக்களஞ்சியத்தில், "கதைகள் முதன்முதலில் எப்பொழுது தோன்றின என்று கூறுவது கடினம். ஆதிமனிதன் காட்டில் வேட்டையாடச் சென்று திரும்பியவுடன் தன் அனுபவங்களை மற்றவர்களுக்குச் சொன்னதிலேயே கதையின் தொடக்கத்தைக் காணலாம் என்று ஆராய்ச்சியாளர் கூறுவார்கள்.

"உலகம் முழுவதும் கதைகள் பரவியிருப்பதையும், அவற்றை மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள் என்பதையும் நாம் காண்கின்றோம். . ."[32] எனக்கூறி இருப்பதைக் கொண்டு கதை என்பது கற்பனைக் கலவை கொண்டு வரலாற்று உண்மைச் செய்திகளான கற்களால் கட்டப்பட்ட அழியாத தொன்மைக் காலக் கட்டிடம் என்பதை உணரலாம்.

---

*31. சென்னைப் பலகலைக் கழகப் பேரகராதி - தொகுதி. பக். 714.*

*32 கலைக் களஞ்சியம் - தொகுதி மூன்று - பக். 184*

## கதைப்பாடல்களின் தோற்றப்பின்னணி

ஆதிகால மனிதன் நாகரீகமின்றி வாழ்ந்தான். அவனுடைய வாழ்க்கை ஒரு வரையறைக்குட்பட்டதாக அமையவில்லை. தனது விருப்பத்திற்கிணங்க அவனுடைய நடைமுறைகள், அணுகுமுறைகள், வாழ்க்கையின் வழிமுறைகளும் அமைந்திருந்தன. இவை பரிமாண வளர்ச்சியின் மாற்றத்தால் சீரடைந்தன. தனது எண்ணங்கள், உணர்ச்சிகளை வெளிப்படுத்த மொழி எனும் கருவியைக் கையாண்டான்.

கதையின் அடுத்தபடியாகக் கலைகள் அமைந்தன. "மக்கள் உணர்வை வெளிப்படுத்துவனவாக நாட்டுப்புறக் கலைகளும் நாட்டுப்புற இலக்கியங்களும் அமைந்தன." என்ற கூற்றும், "[33] படைப்பாற்றல் மிக்க மனிதன் படைத்த அருங்கலைகளுள் தலைமை சான்ற கலை மொழிக்கலையே. எண்ணத்தின் வடிவாகவும், நாகரீகத்தின் சின்னமாகவும் திகழும் இக்கருத்துப் பரிமாற்றக் கலை, மனித சமுதாய வளர்ச்சிக்கும், இணைப்பிற்கும் பெரிதும் துணையாக நிற்கின்றது"[34] என்ற கூற்றும் மேற்கண்ட கருத்தினையே வலியுறுத்துவதைக் காணலாம். இத்தகைய கலைகள் தோன்ற ஏற்ற வளமையான பின்னணியே கதைப்பாடல்கள் எனும் கலையும் தோன்றக் காரணமாயிருந்த பின்னணி எனலாம்.

## கதைப்பாடல்களின் தோற்றம்

வேட்டையாடச் சென்ற மனிதன் பலவித உணர்வுகளுக்கு ஆட்பட்டான். அவன் தான் சென்ற வழியின் நிலையினையும், தான் சந்தித்த உணர்ச்சிகரமான செய்திகளையும், நிகழ்ச்சிகளையும் மற்றவர்களுடன் பகிர்ந்திட முனைந்தான். இச்செயல் தொடர்ந்து நடைபெற்றது. இச்செயலால் மொழி பிறந்து, கலைகளாய் வளர்ந்தது. இசை, நாட்டியம், நாடகம் என்பன இதில் சில. இதே நிலையில் தான்

---

*33. கதைப்பாடல்கள் - சில அணுகுமுறைகள் - கருத்தரங்கக் கட்டுரை பக். 1.*

*34. திராவிட மொழிகளின் ஒப்பாய்வு பக். 1.*

கதைப்பாடல்களும் தோன்றின. இசையுடன் தனது கருத்தினை வெளிப்படுத்தும் போது அதன் பயன்பாடு மிகுதியாவதை மனிதன் உணர்ந்தான். தான் செய்யும் தொழில்களுடன் இசையையும் இணைத்துக் கொண்டான்.

நாளடைவில் இவை தொழில் சார்ந்த பாடல்களாய் உருவம் கொண்டன. இவை மிகவும் இனிமையாகவும் கருத்தாழம் கொண்டனவாகவும் அமைந்தன. இதனையே,

*"நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும்*
*பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன்"* [35]

என மகாகவி பாரதியார் பாடியுள்ளார்.

கதைகள் மனித வாழ்க்கையின் ஓர் அங்கமாக மாறிவிட்டன. இந்நிலையிலேதான், தலைமுறை தலைமுறையாக வழங்கப்பட்டு, வாய்மொழி இலக்கியம் எனப் பெயர்பெற்ற தாலாட்டு, ஒப்பாரி, அம்பாப்பாடல், கதைப்பாடல் போன்றவை தோன்றியிருக்கின்றன.

## கதைப்பாடல்களின் வளர்ச்சி

கதைப்பாடல்களின் தோற்றம் சர்ச்சைக்குரியதாயினும், அதன் வளர்ச்சிப் பாதையின் சுவடுகள் தெளிவாகக் கிடைக்கின்றன. கதைப் பாடல்களை இடம்விட்டு இடம் பெயர்ந்து வாழ்ந்திடும் நாடோடிகளின் இலக்கிய வகையினுள் ஒன்று எனலாம். தான் விரும்பும் அல்லது தன்னைக் கவர்ந்த ஒரு செய்தியினைக் கொண்டு புனையப்பட்ட கதையினைப் பாடலாக இசையுடன் பாட, அது தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து பாடப்பட்டு வந்துள்ளது. மனித வாழ்க்கையில் நிகழும் எந்த ஒரு செயலும் அவன் படைக்கும் இலக்கியத்திற்குக் கருவாக அமைந்து விடுகின்றது. அடுக்கு மொழிச் சொற்களாகவும், மிடுக்கு நடையுடனும், படிப்பதற்குச் சுவையூட்டும் தன்மையுடையவையாகவும் உள்ளவை இக்கதைப் பாடல்களாகும். இவ்வகையிலேயே கதைப்பாடல்கள் தமது வளர்ச்சிப் பாதையை அமைத்துக் கொண்டன எனலாம்.

---

*35. குயில்பாட்டு அடி 43-44.*

## தொல்காப்பியத்தில் கதைப்பாடல் செய்தி

தமிழரின் தொன்மைக்குத் தக்க சான்று தொல்காப்பியமாகும். தமிழில் இன்றுள்ள பலவகையான இலக்கியங்கள் தோன்றிடவும், அதன் ஊற்றுக் கண்களெனத் தக்கதான மூல வடிவங்களையும் தன்னகத்தே கொண்ட காப்பியம் தொல்காப்பியமாகும்.

> *"தொன்மை தானே சொல்லுங் காலை*
> *உரையொடு புணர்ந்த பழமை மேற்றே"* [36]

எனும் நூற்பா கதைப்பாடலின் தொன்மை வடிவினையும், இலக்கணத்தையும் வகுத்துள்ளதைக் காணலாம்.

மேற்கண்ட நூற்பாவிற்கு "தொன்மையாவது உரையோடு பொருந்தப் பெற்ற பழமைத்தாகிய பொருள் மேல் வருவன. அவை இராமசரிதம், பாண்டவ சரிதம் முதலியவற்றின் மேல்வருஞ் செய்யுள்"[37] என உரை எழுதிய இளம்பூரணர் "உரை" என்ற சொல்லிற்குக் "கதை" என்ற பொருளைத் தருவதைக் காணலாம்.

> *"தொன்மையென்பது உரைவிரா அய்ப் பழமையவாகிய*
> *கதைப் பொருளாகச் செய்யப்படுவது"* [38]

என்று பேராசிரியரும் சுட்டுவது எண்ணத்தக்கது.

மேற்கண்ட சான்றுகளால் தொல்காப்பியர் காலத்திய கதைப் பாடல்களின் உண்மை நிலையினை நன்கு உணரமுடிகின்றது.

## இலக்கியங்களில் கதைக்கரு

உலக மொழிகளில் தொன்மையும் வளமையும் உடைய மொழிகளில் ஒன்றாகத் தமிழ் கருதப்படுகின்றது. தமிழ்மொழியில் அமைந்துள்ள தொன்மைவாய்ந்த தொல்காப்பியம் போன்ற இலக்கணங்களும், சங்கப் பாடல்கள் போன்ற இலக்கியங்களுமே இதற்குக் காரணமாகும். இத்தகு இலக்கியங்களில் கதைப்பாடல்கள் பற்றிய செய்திகள் இழைந்தோடி இருப்பதைக் காணலாம்.

---

*36. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - செய்யுளியல். 1493*

*37. தொலகாப்பியம் - பொருளதிகாரம் - இளம்பூரணர் உரை பக். 548.*

*38. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - பேராசிரியம் பக். 428.*

சங்க இலக்கியப் பாடல்களில் சமுதாயக் கற்பனைகளும், சடங்கு சார்ந்த நம்பிக்கைகளும், வரலாற்று அற்புதங்களும் விரவி வருவதைக் காணலாம். இவையாவற்றையும் "புராண மரபின் வாயில்கள்" எனக் கூறுவர்.

கிரேக்கமொழி இலக்கியங்களிலும் சரி, வடமொழி இலக்கியங்களிலும் சரி, வரலாறு மற்றும் புராணம் என்பதைத் தனித்தனியாகப் பாகுபடுத்திக் காண்பது கடினம். தமிழிலும் இத்தகு வளர்ச்சிப் போக்கினைச் சுட்டத்தக்கதாய் சில மரபுகள் சங்கக்காலப் பாடல்களில் இழைந்தோடி இருப்பதைக் காணலாம். இதைப்போலவே சில நாட்டுப்புறக் கதைகளும் பல பாடல்களில் விரவி வருவதைக் காணலாம்.

'நற்றிணை' என்பது எட்டுத் தொகை நூல்களில் ஒன்று. இந்நூலில் வரும் கொல்லிப் பாவை, தாக்கணங்கு போன்ற தெய்வங்களைப் பற்றிய கதைகள் சிந்தனைக்குட்பட்டவை.

*"செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லித்*
*தெய்வம் காக்கும் தீதுதீர் நெடுங்கோட்*
*டவ்வேள் அருவி குடவரை யகத்துக்*
*கால் பொரு திடிப்பினும் கதழுறை கடுகினும்*
*உருவமுடன் நெறியினும் ஊனுபவ தோன்றினும்*
*பெருநிலங் கிளரினும் திருநில வுருவின்*
*மாயா வியற்கைப் பாவை"* [39]

என்ற பரணரின் பாடலில் தலைவனின் கூற்றாக,

"கொல்லி வரையின் கண் நிற்கும் பொற்பாவை, பெருங்காற்று, பெருமழை, பெருவெயில் முதலியவற்றால் சிறிதும் அசையாமல் பொலிந்து விளங்குதல் போன்று, எனது நெஞ்சின் கண் நிலை பெற்று விட்டாள். இனி அவள் அதனின் நீங்காள்" என வரும் செய்தியில் எத்துணை துன்பம் வரினும் தன் இடம் விட்டு அகலாத கொல்லித்

---

*39. நற்றிணை - பாடல் - 201.*

தெய்வத்துக்கு நிகரானவள் தன் தலைவி' எனக் கூறுமிடத்தே இடம் விட்டு அகலாத தெய்வத்தை உவமை காட்டுவது எண்ணத்தக்கது.

இதைப்போலவே,

*"எரிமருள் வேங்கை கடவுள் காக்கும்*
*குருகார் கழனி இதனைத் தாங்கண்*
*ஏதி லாளன் கவலை கவற்ற*
*ஒருமுலை யறுத்த திருமா வுண்ணி"* [40]

என்ற மருதனிள நாகனாரின் பாடலில் ஏதிலாளன் ஒருவன் செய்த துன்பத்திற்காகத் தனது மார்பின் ஒருமுலை அறுத்து எறிந்து, தன் கற்பினை நிலை நாட்டிய 'திருமாவுண்ணி' யைப்பற்றிய கதைகள் நமக்குக் கிடைக்கின்றன.

மேலும்,

*"மாசில் கற்பின் மடவோன் குழவி*
*போய் வாங்கக் கைவிட் டாங்கு"* [41]

என்ற பாடலில் தன் குழந்தையை இழந்து தவிக்கின்ற தாயின் நிலையினை விவரிக்கும் செய்தி, கதை வடிவில் உள்ளதை உணரலாம்.

குறுந்தொகையிலும் இத்தகு செய்திகள் விரவி வருவதைக் காணலாம். நற்றிணையிலுள்ள 201 ஆம் பாடலில் சுட்டப்பட்டுள்ள கொல்லித் தெய்வத்தைப் பற்றிய செய்தி,

*"பெரும்பூட் பொறையன் பேஎழுதிர் கொல்லிக்*
*கருங்கட் தெய்வங் குடவரை எழுதிய*
*நல்லியற் பாவை"* [42]

என்ற குறுந்தொகையின் வரிகளில் மீண்டும் வருதல் எண்ணத்தக்கது.

---

*40. நற்றிணை - பாடல். 216.*

*41. நற்றிணை - பாடல். 15.*

*42. குறுந்தொகை பாடல் - 8.*

## காப்பியங்களில் கதைகள்

காப்பியங்கள் தன்னகத்தே பல கதாபாத்திரங்களைக் கொண்டதாக அமையும். அவைகளுள் தலைமைப்பாத்திரம் சிறப்புத் தன்மை கொண்டது. இப்பாத்திரப் படைப்பின் குணநலன்களை விளக்கிடவும், காப்பியத்தின் நடை ஓட்டம் தடைப்படாமல் ஆற்றொழுக் காகச் செல்லவும், சில சமயம் அற நெறியை வலியுறுத்தவும், காப்பியப் படைப்பாசிரியர் சில கிளைக் கதைகளை உட்புகுத்திச் செல்வார். இக்கிளைக் கதைகளே வளர் நிலையில் பின்னர் நாடோடிக் கலைஞர் களின், நாடோடிப் பாடல்களால் இசையுடன் கலந்து, இனிமையான எளியநடையில் கதை பொதி பாடல்களாக மாற்றம் பெற்றன எனலாம். சான்றாகக் கோவலனின் தன்மைகளை விவரிக்கும் சிலப்பதிகாரத் தினின்று, பின்பு வந்த 'கோவலன் கதை' யைச் சுட்டலாம்.

மேலும் இயல்பான மாந்தர்களுடன் விலங்குகள், தேவர்கள், பற்றிய கதைகளும் காப்பிய நீரோட்டத்திற்கு இணையாகச் செல்வதைக் காணலாம்.

## சிலப்பதிகாரம்

இளங்கோவடிகளால் படைக்கப்பட்ட சிலப்பதிகாரத்தில் கிளைக் கதைகள் மிகுதி. அவைகளுள் இன்று மக்களால் போற்றப்படுபவை ஒரு சிலவே ஆகும்.

(1) மனுநீதிச் சோழன் கதை (என்ற) தேரூர்ந்த கதை

(2) சிபிச் சக்கரவர்த்தி கதை

(3) பொற்கைப் பாண்டியன் கதை

(4) சதுக்கப் பூதத்தின் கதை

(5) கோவலன் கதை

(6) இளங்கோ துறவு பூண்ட கதை

என்பன இவ்வகையில் சார்ந்தவை

## மணிமேகலை

மணிமேகலை துறவு பூண்டதை விவரிப்பது மணிமேகலை இலக்கியமாகும். இதனுள் பதினைந்திற்கும் மேற்பட்ட கிளைக் கதைகள் உண்டு. அதனுள் கதைப்பாடல்களாக வளர்ந்தவை சிலவே ஆகும். அவை,

(1) சுதமதி கதை

(2) மணிமேகலை முற்பிறப்புக் கதை

(3) விசுவாமித்திரன் கதை

(4) ஆபுத்திரன் கதை

(5) ஆதிரை கதை

(6) காய சண்டிகை கதை

என்பனவாகும்.

## சீவக சிந்தாமணி

படிக்கப் படிக்கச் சுவை தரும் சமணக்காப்பியம் சீவக சிந்தாமணியாகும். இதனை 'மண நூல்' எனவும் சான்றோர் கூறுவர். இக்காப்பியத்தில் வரும் தலைமைப் பாத்திரம் 'சீவகன்' ஆவான். இவன் எட்டுப் பெண்களை மணம் செய்கின்றான். இதிலும் பல துணைக் கதைகள் வழக்கிலுள்ளன. அவை,

(1) சச்சந்தன் கதை

(2) சீவகனின் முற்பிறப்புக் கதை

(3) நான்முகனுக்கு நான்முகம் தோன்றிய கதை

(4) சிவன் மாதொரு பாகம் கொண்ட கதை

(5) கண்ணன் துகில் கவர்ந்து குருந்தொசித்த கதை

(6) புத்தர் அருள் காரணமாகப் பெண் கழுதையான கதை

(7) பாஞ்சாலி ஐவர் மனைவியான கதை

என்பனவாகும்.

## இதிகாசங்களில் கிளைக் கதை

இதிகாசங்கள் என்பவை பக்திச் சுவை மிக்கவை. மக்களால் பெரிதும் விரும்பப்படுபவை. சான்றாக மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்களான புராணச் செய்திகளில் நிறைந்த அளவில் கதைகள் சொல்லப்படுவதைக் காணலாம். இக்கிளைக்கதைகளைத் தழுவிப் பல கதைப் பாடல்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் சிலவற்றைக் காணலாம்.

### இராமாயணம்

(1) குசலவன் கதை

(2) இராமன் கதை

(3) மயிராவணன் கதை

(4) தாடகை கதை

(5)அகலிகை கதை

(6) அரிச்சந்திரன் கதை

(7) இரணியன் கதை

### மகாபாரதம்

(1) தருமர் கதை

(2) அல்லியரசாணி கதை

(3) புலந்திரன் தூது

(4) கிருட்டிணன் தூது சென்ற கதை

என்பனவாகும்.

## கதைப்பாடல்களின் அமைப்பு

கதைப்பாடல்கள் அமைப்பு முறையில் மிகவும் எளிய வடிவம் கொண்டவை. இப்பாடல்கள் பெருமளவில் தொடர்நிலைச்

செய்யுள்களாகவே அமைந்திருக்கும். இவை படிப்பதற்கு மிகவும் இனிமையாக அமைந்திருக்கும். தக்க ஏற்றயிறக்கத்துடன் படித்திடவும், பாமரரும் எளிதில் புரிந்துக் கொள்ளத் தக்க வகையில் எளிய பகுதிகளுடனும் அமைந்திருக்கும். ஒவ்வொரு கதைப்பாடலின் முதலில் இறைவணக்கமும், காப்புப்பாடலும் அமைந்திருக்கும்.

இப்பாடல்களை எளிதான முறையில் மனனம் செய்து கொள்ள முடியும். இதற்கு இப்பாடல்களில் அமைந்திருக்கும் எதுகை, மோனை, இயைபு, அடுக்குத் தொடர், மீண்டுவருதல், போன்ற இலக்கணக் கருவிகள் துணைநிற்கின்றன. இப்பாடல்களில் வரும் நாட்டு வருணணை, காப்பிய புலவர்கள் புனைந்ததை நிகர்த்து அமைந்திருப் பதையும் காணலாம்.

## கதைப்பாடல்களின் நோக்கம்

கதைப்பாடல்கள் உலகம் முழுவதும் வழங்கப்பட்டு வருகின்றன. மொழிகள் வேறுவேறாக இருப்பினும் இப்பாடல்களிடையே ஒரு பண்பொற்றுமையைக் காணமுடிகிறது. கதைப்பாடல்கள் என்பன பெரும் பகுதியாக அறநெறிக் கொள்கைகளையும், உண்மை நெறிகளையும் வாழ்க்கைக்குத் தேவையான நீதிநெறிகளையும் எடுத்தியம்புவதை உள்நோக்காகக் கொண்டு படைக்கப்பட்டு வந்துள்ளன.

இதனைப் படைப்பவனுக்கு இவை பிழைப்புக் கருவியாக இருந்திருப்பதால், இலக்கண நெறிகளைவிட உணர்ச்சியின் வடிவாகப் படைக்கப்பட்டவை மிகுதி. இவை பாமரர்களும் எளிதில் உணர்ந்திட, வழக்கு மொழியிலும் கொச்சை மொழியிலும் படைக்கப்பட்டன. இசையுடன் கூடிய நாட்டுப்புறப் பாணியே இதன் முக்கிய வடிவமாக அமைந்திருந்தது.

## கதைப்பாடல்களின் வகைகள்

கதைப்பாடல்கள் பலவகைப்பட்டன. அதன் பொருளமைதியைக் கொண்டு இப்பாடல்களை வகைப்படுத்தலாம். இம்முறையில் கதைப்பாடல்களை வகைப்படுத்துவதில் பலவித கருத்துக்கள் இருந்து வந்துள்ளன. இதனை,

(1) வீரகாவியக் கதைப்பாடல்கள்,

(2) வரலாற்றுக் கதைப்பாடல்கள்,

(3) புராணக் கதைப்பாடல்கள்,

(4) சமுதாயக் கதைப்பாடல்கள்,

(5) பிறவகைக் கதைப்பாடல்கள் – [43]

என ஐந்து வகையாகவும்,

(1) புராணக் கதைகள்

(2) புராணப் புனைவுக் கதைகள்

(3) நாட்டுப்புறக் கதைகள்

(4) வீரவுணர்வுக் கதைகள்

(5) வரலாற்றுக் கதைகள்

(6) சமூக உணர்வுக் கதைகள்

(7) அறவுணர்வுக் கதைகள் – [44]

என ஏழு வகையாகவும்,

(1) தெய்வீகக் கதைப்பாடல்கள்

(2) புராணக் கதைப்பாடல்கள்

(3) சமூகக் கதைப்பாடல்கள்

(4) வரலாற்றுக் கதைப்பாடல்கள் – [45]

எனவும், மேலும் மற்றொரு நிலையில்,

(1) இதிகாசத் துணுக்குகள்

(2) சமூகக் கதைப்பாடல்கள்

(3) வரலாற்றுக் கதைப்பாடல்கள்

(4) கிராம தேவதைகளின் கதைப்பாடல்கள் – [46]

எனவும், சோமலெ அவர்கள்,

---

*43. கதைப்பாடல்கள் - சில அணுகுமுறைகள் டாக்டர். பூ. சுப்பிரமணியம். கருத்தரங்குக்கட்டுரை - பக் 3. 44. நாட்டுப்புறவியல் சிந்தனைகள் டாக்டர். ஏ.என். பெருமாள் பக். 20-24. 45. நாட்டுப்புற இயல் ஆய்வு பக் 65. 46. தமிழர் நாடடுப் பாடல்கள் பக்.5.*

(1) சமூகக் கதைப்பாடல்கள்

(2) புராணக் கதைப்பாடல்கள்

(3) வரலாற்றுக் கதைப்பாடல்கள் – [47]

என மூன்று வகையாகவும், மு.அருணாசலம் அவர்கள்,

(1) காதல் கதைப்பாடல்

(2) புராணக் கதைப்பாடல்

(3) வரலாற்றுக் கதைப்பாடல்

(4) சமூகக் கதைப்பாடல் – [48]

என நான்கு வகையாகவும், பெலிக்ஸ் ஜே. ஓய்னாஸ் என்பவர்,

(1) மந்திரக் கதைப்பாடல்,

(2) வீரர் கதைப்பாடல்,

(3) காதல் கதைப்பாடல்

(4) வரலாற்றுக் கதைப்பாடல், – [49]

என நான்கு வகையாகவும், சு. சண்முக சுந்தரம் அவர்கள்,

(1) புராணம் தொடர்பானவை,

(2) வரலாறு தொடர்பானவை,

(3) சமூகம் தொடர்பானவை [50]

என மூன்று வகையாகவும் பாகுபடுத்தி வகைப்படுத்துவர். இவையாவற்றையும் நோக்குகையில்,

(1) வரலாற்றுக் கதைப்பாடல்கள்

(2) புராணக் கதைப்பாடல்கள்

---

47. தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்

48. நாட்டுப்புற இயல் ஆய்வு - சு. சக்திவேல் பக்.66.

49. நாட்டுப்புற இயல் ஆய்வு பக். 66

50. நாட்டுப்புற இயல் - ஓர் அறிமுகம் பக். 142.

(3) காதல் கதைப்பாடல்கள்

என்ற பொருளின் அடிப்படையில் அமைந்த வகையினை அனைவரும் சுட்டியுள்ளதைக் காணலாம். எனவே மேற்கண்ட பொருளின் அடிப்படையிலான மூவகைப் பெரும் பிரிவுகளாகக் கதைப்பாடல்களை வகைப்படுத்தலாம்.

**கதைப்பாடல்களும் அம்மானைப் பாடல்களும்**

அம்மானை என்பது தமிழரின் ஒருவகையான விளையாட்டு, இவ்விளையாட்டில் பாடல்கள் முக்கிய இடம் வகிக்கும். பிற்காலத்தில் இப்பாடல்களின் அமைப்பினையே அம்மானை இலக்கியம் என்றனர். இஃதோர் நாட்டுப்புற இலக்கிய வகையினைச் சார்ந்தது.

எனினும், அம்மானை என்ற இலக்கிய வடிவம் சிலப்பதிகாரத் திற்கு முன்பாகவே வழக்கில் இருந்து வந்துள்ளதை,

*"வீங்குநீர் வேலி உலகாண்டு விண்ணவர்கோன்*
*ஓங்கரண் காத்த உரவோன்யார் அம்மானை?*
*தூங்கெயின் மூன்றெறிந்த சோழன்கா ணம்மானை*
*சோழன் புகார் நகரம் பாடலோரம்மானை." 51*

என்ற சிலப்பதிகார வரிகள் சான்று கூறி வலியுறுத்தும்.

"கதைப்பாடல் என்ற பெயர் சுவடிகளில் இல்லை. கதைப்பாடலாக அமைந்த நாட்டுப்புற இலக்கியங்களுக்குப் பெரும்பான்மையாக அம்மானை என்ற பெயரே காணப்பெறுகிறது" [52] என்ற கருத்து இங்கு எண்ணத்தக்கது.

மேற்கண்டக் கருத்துச் சான்றாக,

(1) மூவரம்மானை

(2) இராப்பய்யன் அம்மானை

---

*51. சிலப்பதிகாரம் - 29ம் காதை - 16ம் பாடல்.*

*52. கதைப்பாடல்கள் - சில அணுகுமுறைகள் - Op. Cit., பக் 1.*

(3) குசலவர் அம்மானை

(4) மதுரை வீரன் அம்மானை

போன்ற அம்மானைக் கதைப்பாடல்களைச் சான்று காட்டலாம்.

"பாரதவம்மானை" - [53] என்ற மற்றொரு சுவடியும் இவ்வகையினைச் சார்ந்தது எனக் கொள்ளலாம்.

மேற்கூறிய செய்திகளை ஆராயும்போது தொடக்க காலத்தில் 'அம்மானை' என்ற வடிவில் இருந்த வினாவிடை அமைப்பைக் கொண்ட இசையுடன் கூடிய பாடல் இலக்கியம் வளர்நிலையில் கலம்பகம், பிள்ளைத்தமிழ் போன்ற இலக்கியங்களுள் ஓர் உறுப்பாக மாறி, பின்னர் தனி ஒரு இலக்கியமாக வடிவம் கொண்டது எனலாம். இதன் பரிணாம வளர்ச்சியின் ஒரு கூறாக கதைப் பாடல்களையும் கொள்ளலாம்.

## கதைப்பாடலின் தன்மைகள்

கதைப்பாடலின் தன்மைகளாக, "கதைப்பாட்டு நாடோடி இலக்கியப் பரம்பரையைச் சேர்ந்த கவிதை வகை. எளிய கதையைப் பொருளாகக் கொண்ட இது, தலைமுறை தலைமுறையாகப் பாமர மக்களால் பாடப் பெற்று வழங்கிவரும். இது அன்றாட வாழ்க்கையில் நிகழும் சாதாராண சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு எளிய நடையில் அமைந்திருக்கும். இதன் பாத்திரங்கள் சாதாரண மக்களாகவே இருப்பர். அம்மானை போல் இதில் ஓர் அடியோ, சொல்லோ, சொற்றொடரோ திரும்பத் திரும்பப் பாடப் பெற்றுக் கதையின் கருத்தை வற்புறுத்துவது போல் இருக்கும். எளிய வடிவமான எதுகையும் இப்பாட்டில் காணப்படுவதுண்டு. இதன் அமைப்பு இதை எளிதில் பாட, கற்க ஏற்றதாக இருக்கும். கதைப்பாட்டு என்ற இலக்கிய வகை மக்களது வாயில் வாழ்கிறது என்று கூறுவதுண்டு. வாயின் வாயிலாகவே பரவும் இதை இயற்றியவர் யாராயினும், இதைப் பாடுபவரது உடமையாகவே இது மாறிவிடுகிறது. இதற்கு முன்னுரையும், பின்னுரையும், விளக்கவுரையும் தேவையில்லை. பாடும்போதே இதன் கதையும் இதிலுள்ள கருத்தும் அனைவரும் அறியும் வகையில் இது

53. *உலகத்தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி*

அமைந்திருக்கும். ஒரு கதைப்பாட்டை ஒவ்வொருவர் பாடும் போதும் இதன் பாடம் வேறாக ஆகிவிடுவது உண்டு." [54] என்று கலைக் கலஞ்சியம் கூறுகின்றது.

இதுவரை கூறிய கதைப்பாடல் இலக்கணங்களை வைத்து நோக்கினால், இந்த சந்திர பதன் கதை, கதையைப் பாடல் வடிவில் கூறும் ஒரு கதைப் பாடல் என்பது தெளிவாகும்.

---

*54. கலைக்களஞ்சியம் தொகுதி - 3, பக். 187*

## கிஸ்ஸா – எனும் கதைப் பாடல்கள்

### கிஸ்ஸா – ஓர் விளக்கம்

உலக மனிதர் அனைவருக்கும் ஓய்வு நேரம் மிகவும் இன்றியமையாததாகும். அவர்கள் தங்களுடைய ஓய்வு நேரங்களைப் பல வழிகளில் கழித்திடுவர். சிலர் பொழுது போக்கினைச் சார்ந்த நிகழ்ச்சிகளிலும், பொழுது போக்கும் இடங்களையும் கண்டு களித்திடுவர். வேறு சிலர் வேறு வழி முறையிலும் தங்களது ஓய்வு நேரத்தினைக் கழிப்பர். தங்கள் ஓய்வு நேரத்தில் அரபு மக்கள் ஒன்று கூடி உரையாடி மகிழ்வர். அவர்களுள் பலர் கல்வியறிவிற் சிறந்தோராக இருந்துள்ளனர். அவர்கள் மற்றவர்களுக்குக் கதைகளைக் கூறி மகிழ்விப்பர். இக்கதைகளில் நல்ல கருத்துக்களுடன், இஸ்லாமியப் போதனைகளையும் இணைத்துக் கூறுவர். இத்தகு கதைகள் பொழுதுபோக்கிட மட்டும் இன்றி, சிறந்த போதனைகளையும் தன்னகத்தே கொண்டிலங்கின.

“அரபு மொழியில் கிஸ்ஸா என்ற சொல் கதையைக் குறிப்பிடுகின்றது. எனவே, இக்கதைகள். கிஸ்ஸாக்கள் என அழைக்கப்பட்டன. முஸ்லீம் மக்களிடையே வழங்கும் அரபுக் கதைகள் ‘கிஸ்ஸா’ என்ற பெயரைப் பெற்றன." [55]

கிஸ்ஸா என்பதற்குக் கதை எனவும், கதையைக் கூறுதல் எனவும் பொருள் தரும். கரைத்தல் என்பதும் இதனையே சுட்டும்.

இத்தகைய கிஸ்ஸாக்களில் குறிப்பிட்டுள்ள பெரியவர்களின் வாழ்க்கை தெள்ளிதின் நமக்கு விளங்கும். பலருக்குத் தெரியாமல் இருக்க கூடிய இஸ்லாமிய மார்க்கம் பற்றிய போதனைகளையும் அறநெறிச் செய்திகளையும் எடுத்தியம்பிடும் திறம் கொண்டவை கிஸ்ஸாக்கள். இஸ்லாமிய மார்க்கம் வலுவடையவும், மக்கள் மனதில் ஆழப்பதிந்திடவும் இத்தகைய கிஸ்ஸாக்கள் மிகவும் பயன்பட்டன.

---

*55. இஸ்லாமும் இன்பத் தமிழும் பக். 246*

“இவை அழிந்து விடும். இத்தகைய நூல்களைப் போற்றிக் காப்பாற்றுவோமாக"[56] என்ற கூற்று இத்தகு கிஸ்ஸா இலக்கியங்களின் நிலை விளக்கவல்லது.

## இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் தரும் செய்தி

“இஸ்லாம் மார்க்கம் பற்றிய கதைகளுக்கு இப்பெயர் வழங்கப்படுகின்றது. இச்சொல் குர்ஆனில் காணப்படாவிடினும் இதன் மற்றொரு வடிவமான கஸஸ்என்னும் சொல் 3.55, 7.175, 12.3, 28.25, 28 ஆவது அத்தியாயத்தின் தலைப்பு ஆகியவற்றில் காணப்படுகிறது. கிஸ்ஸா என்னும் சொல் ‘ஸஹீஹ் புகாரி’யில் செய்தி என்ற பொருளில் பல இடங்களில் காணப்படுகின்றது. கிஸஸ், கிஸ்ஸா ஆகியவற்றின் மூலம் ஒன்றேயாயினும் சொல்லுதல், எடுத்துரைத்தல் என்ற பொருளிலேயே இச்சொல் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது."

“துவக்கத்தில் கிஸ்ஸா என்னும் சொல் புழக்கத்தில் இருக்கவில்லை. தாரீஹ், ஹபர், ஹதீது, சீறா, ஸமர், குராஃபா ஆகிய சொற்களே வழங்கப்பெற்று வந்தன. பின்னர் அல்கிஸாயீயும் அல்தஅலபியும் ‘கஸஸீல் அன்பியா’ என்னும் பெயருடன் தனித்தனியாக இருநூல்கள் எழுதிய பிறகுதான் இச்சொல் பெரிதும் வழக்காற்றில் வரலாயிற்று. அல்ஜெளஸியும், ‘கிதாபுல் குஸ்ஸால்’ என்று ஒரு நூல் எழுதியுள்ளார்."

“குஸ்ஸாக்கள், உதுமான் (ரலி) , அலி (ரலி) ஆகியோரின் கிலாஃபத்தின் போதுதான் தோன்றினர். ஆனால் இவர்கள் கிஸ்ஸாக்களைப் பல பொய்களையும், புனைந்துரைகளையும் கூறியதன் காரணமாகப் பல சச்சரவுகள் ஏற்படக் காரணமாதலால் அலீ (ரலி) அவர்கள் இந்த குஸ்ஸாக்கள் பள்ளி வாயில்களில் தங்களின் கிஸ்ஸாக்களை அவிழ்க்கக் கூடாது என்று தடை விதித்தார். ஆனால் இறைமொழியையும், நபி மொழியையும் ஆதாரமாகக் கொண்டு பேசிய ‘ஹஸனுல்’ பஸரீ (ரஹ்) அவர்களுக்கு மட்டும் விதிவிலக்கு வழங்கப்பட்டது.”

---

*56. இஸ்லாமும் இன்பத்தமிழும் Op. Cit., பக். 250.*

"இந்தக் கிஸ்ஸாக்கள் தாம் பின்னர் முற்றிலும் கற்பனையாலான அரபிக் கதைகளுக்கு வழிகோலியன. அரபிகள் கதை கேட்பதில் பெரிதும் இன்பம் கொண்டனர்" [57] என்ற இஸ்லாமியக் கலைக் களஞ்சியத்தின் வரையறை இக்கிஸ்ஸா எனும் கதைப்பாடல்களின் தன்மைகளை மேலும் விளக்கவல்லது.

"முஸ்லீம் புலவர்கள் அரபு மொழி இலக்கியங்களைப் பின்பற்றிப் புதுவகைப் பிரபந்தங்களைத் தமிழில் படைத்துள்ளனர். அவைகளாவன: கிஸ்ஸா, முனாஜாத்து, மஸ்அலா, படைப்போர் முதலான நான்கு இலக்கியப் பிரிவுகளாகும்." [58] என்ற கூற்று இங்கு எண்ணத்தக்தாகும்.

அரபு மொழியில் தோன்றிய கிஸ்ஸா இலக்கியங்கள் தமிழகச் சூழலுடன், வரலாற்று அடிப்படையில் இஸ்லாமியப் பெரியோர்களின் வரலாறுகளையும், இஸ்லாமிய மார்க்கக் கருத்துக்களையும் தமது உள்ளடக்கமாகக் கொண்டு அமைந்தன. அரபு மொழியில் தோன்றிய கிஸ்ஸாக்களில் பெரும்பகுதி பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) காலத்தில் தோன்றிப் புகழ்பெற்ற, மார்க்கப் பெரியோர்களான ஷம்ஷீன் றலியல்லா, தமீமுன் அன்ஸாரி ஆகியோரின் வரலாற்று நிகழ்வுகளையும், சைத்துன் பீபீ, அபூஷகுமா போன்றோரின் வாழ்க்கையில் நடந்த சரித்திர நிகழ்வுகளையும் கருப்பொருளாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளதைக் காணலாம்.

தமிழக இஸ்லாமியத்தமிழ் புலவர்கள்,.. இத்தகு அரபு கிஸ்ஸாக்களை தங்களுக்கு முன்னோடியாக மூல நூலாகக் கொண்டனர்.

இதனால்,

(1) சைத்துன் கிஸ்ஸா
(2) அன்சாரி கிஸ்ஸா
(3) யூசுப்நபி கிஸ்ஸா
(4) அய்யூப் நபி கிஸ்ஸா
(5) கபன்கள்ளன் கிஸ்ஸா

---

*57. இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் பக். 689, 690*

*58. தமிழியல் ஆய்வுக்கட்டுரைகள் பீ.மு. அஜ்மல்கான்.*

(6) விறகுவெட்டி கிஸ்ஸா
(7) காலிகோரி கிஸ்ஸா
(8) இசுவத்து நாச்சியார் கிஸ்ஸா
(9) காளியார் கள்ளன் கிஸ்ஸா

என்ற பல கிஸ்ஸாக்கள் தோன்றின.

இசுலாமியர்களுக்கு மத்தியில் இதற்குக் காணப்பட்ட செல்வாக்கு இதன் எண்ணிக்கையால் தெளிவு பெறும். இத்தகு 'கிஸ்ஸா' என்ற கதைப்பாடல் வகையினது இந்தச் சந்திரபதன் கதை எனக் கூறலாம்.

## பிசுமில்லா நிற்றமிகா நிற்றகீம்

## சந்திர பதன் கதை

(காப்பு பாடல்)

பார்புக ழீரசூல் வேதம்
பகர்குரு முகையார் மன்னன்
கார்குழல் மடவாள் சந்திர
பதன்தனை கனவி லுற்று
பேர்பெற ஆஷிக் கான்
பெருங்கதை தன்னைப் பாட
வாரிசூ ழுலகம் போற்ற
வல்லவன் காப்ப தாமே.

## பிசுமில்லா நிற்றமிகா நிற்றகீம்

(இறைவாழ்த்து)

பொன்னுலகு மறுகுறு செழுவானும்
புவிமுழுதும் புகுந்து வாழும்
மன்னுயிரும் பறவையினம் விலங்கினம்
முழுதும் வகுத்து நீதி
அன்னஞ் சிவன் மருளும்
அரியதொரு பெரியவனை ஆதியோனை
என்னுருவி னிருதயத்தில் அனுதினமும்
புகழ்ந்துமகிழ்ந் தேத்து வோமே. (1)

**வேறு**

பொல்லாத பாவினை எல்லா மகத்தினிலே
பொய்யே புகுந்த பொலிவாய்

நல்லான நேர்குமுறை சொல்லாது சொல்லிமிகு
நல்லா தகத்து மடியே
இல்லாண்மை நீக்கியருஞ் சொல்லாண்மை யாக்கிவிடு
வல்லாண்மை யான பொருளே
அல்லாகு வென்றமொழி பொல்லாத நாவுதனில்
அல்லாகு நீய ருளுவாய். (2)

**வேறு**

கர்த்த னொத்தமெய் சுற்ற மான
கண்ணு வாயு மில்லாதவன்
சர்த்த ருத்தசெவி யொத்த நற்சிரசு
சடலந் ததுமுருப் பற்றவன்
வெத்தி யுற்றனென் நத்து மாயொருவர்
விள்ளில் முன்னின் வறாந்தவ
னித்த தத்துவரி சுற்று மிப்புவி
நிறைந்த சோதியை வணங்குவோம். (3)

(இறைத்தூதுவர் வாழ்த்து)

தக்க தானமறை காலி னுக்குமொரு
தவள மானமணி சுடருமாய்
கக்க னானதிருத் தூத னாகிகதிர்
காயு மிப்புவியும் காழ்ந்திட
மக்க நற்பதியு சொற்க பொற்பதியு
மரசு முடையவர் மூத்தவர்
மிக்க பொற்கமல முற்ற பாதமல
ரேற்றி யேமனத்துள் வாழ்த்துவாம். (4)

**வேறு**

(நான்கு கலிபாக்களுக்கு வாழ்த்து)

*செங்க தாமரை கய்யி னாரொகு*
*தீமை தன்மொழி பேசியும்*
*சங்கை யாகிய வாயி னாற்சிலை*
*தன்னை வைத்து மொழிந்தவர்*
*பொங்க மாகநல் லரவுசீ றாகவே*
*பூட்டு வைத்து வழங்கினோர்*
*அங்க முத்துற சூல்தன் மாம*
*னபுபக் கர்பதம் போற்றுவாம்.* (5)

*பானு மேனி கலங்கி யோடவே*
*பார்வை (எவிருஞ்) விழியினார்*
*மானின மாது கவுழ்த்த எண்ணையை*
*வாங்கி ஈந்தவர் மைந்தனை*
*வானு லோகமும் மண்ணு லோகமும்*
*வாட வேவதை செய்தவர்*
*தீணை நீதிய தான டத்தியே*
*சேயு மார்ப்பதம் வாழ்த்துவாம்.* (6)

**வேறு**

*விண்ணினி லமந்தி ருந்த*
*வெழிப்பல கையின் வரியை*
*மண்ணினி லிருந்து நோக்கி*
*யாவர்க்கும் வகுக்க வல்லார்*
*கண்ணினின் மணிய தான*
*முகம்மது கவலு வேதம்*

*அண்ணுரை தீட்டு துமானின்*
*மலரடி யகத்தில் வைப்பாய். (7)*

**வேறு**

*மட்டலர் புயத்திலணி முத்துநபி யுத்த*
*மருகேச னெனவந்த வரசர்*
*துட்டலரை வெட்டிமடி யப்பொருது யெத்திசையும்*
*சுத்த வீரத்தை யுடையார்*
*கட்டழகை யுற்றசுப கீல்துணையே வெற்றிசெய்வ*
*கன்னி மணவாள ரெனவே*
*வட்டமிடு துல்துலென வப்புரவி ஏறிவரும்*
*வள்ளலலி தாளை மறவாம். (8)*

**வேறு**

(நபிபேரருக்கு வாழ்த்து)

*மருமலர் புயத்தின் வேந்தர்*
*மகிழ்நபி தவத்தில் வந்த*
*நறுமணங் கமழுங் கூந்தல்*
*நங்கையர்க் கரசி யென்ன*
*இருவுல கணைத்து மாதர்*
*ஈன்றெடுத் தமிர்த மூட்டி*
*வருதிரு வசனம் சனூர்*
*மலர்ப்பதம் வாழ்த்து வோமே. (9)*

(முகையத்தீன் வாழ்த்து)

*பாரினிற் கீர்த்தி பெற்ற*
*பலர்புக ழொலிமார்க் கெல்லாம்*
*வீரிய விலாயத் தோங்கி*

வெங்கணுஞ் சிறப்பத் தானேர்
வாரியி லிறந்து போன
வாலிபன் வரவ ழைத்தோர்
சீருரு முகய்ய தீன்தன்
றிருவடி சிரசில் வைப்பாம். (10)

(நூலின் பெயர்)

ஆதிதன் னருளைத் தாங்கி
அகிலமீ திருந்து வாழும்
தீதரு பார்வை யேயத்
தீனவர் தன்னை வாழ்த்தி
மூதுரை பெரியோர் சொல்லி
முறையுரை தன்னைத் தேர்ந்து
கோதரு மாது சந்திர
பதன்கதை கூற லுற்றேன். (11)

(கேட்டு ஆதரித்தோர்)

இக்கதை பாடச் சொல்லி
இருதயம் மகிழ்ந்து கேட்டு
தக்கதோர் பொருளு மாடை
பணிகளு மகிழத் தந்தோன்
திக்கெலாங் கீர்த்தி யோங்குஞ்
செழுமக மதுமீ ராதன்
மிக்கதோர் கிளைய தெல்லாம்
எழிலுடன் வாழ்வர் தாமே. (12)

(அவையடக்கம்)

துடித்ததிரப் பாய்கின்ற வரிப்புலிமுன்
மய்யறையுந் துள்ளும் போலுடன்

அடித்தஇடி முழக்கமுட னின்றதிர்த்துக்
கரிக்குடவ னிறைத்தல் போலும்
அடித்துயரப் பறக்கின்ற கருடன்முன்
தும்பிபறந் தாற்றல் போலும்
வடித்ததமிழ்க் கவிவாணர் முன்பாக
இன்னூலை வகுக்கும் வாறே. (13)

(நூலாசிரியர்)

இன்னிலங்கள் மகிழெழவருந் திருநகரு
தீனவர்க ளெழிலோர் முன்னே
பொன்னதியும் பொன்னிறக்காவும் புடைசூழும்
அரசூரில் புகழு மோங்கி
மன்னவன்தன் சம்பாயி வருமவுதல்
காதர்பெரு மைந்த னானோன்
பன்னுதமிழ்க் கவிவகுத்து மகம்மதுசனிக்
கதையைக் பகர்கின் றேனே. (14)

சூட்டிய நன்னூல் சின்னூல்
காரிகை தொன்னூ லோடு
பாட்டிய லறிந்த வாணர்
அடுகினில் பயந்தொ துங்கி
கேட்டுமப் பொருள றியான்
கிளர்த்திய கதை தன்னைக்
கூட்டியிப் புகழ்கள் தீர்த்துக்
கொள்ளுவீர் பெரியோர் கண்டே. (15)

திருநபி கிசறத் தாகி
ஆயிரத் திருநூற் றின்மேல்
அரில்வே யிருபத் தாண்டில்

அஷேஷயா வருஷத் தின்முன்
சூரியுடன் வருகு கின்ற
குரோதனா வருஷந் தையில்
திருவல்லி தீனோர் முன்னே
திங்கள்நா ளரங்கஞ் செய்தான். (16)

(நாட்டு வருணணை)

மறைபொரு ளாக நின்ற
வல்லவ னருளை மேவி
பிறைகடல் புவன மெங்கு
மியலுறு சிறப்பின் வாய்த்த
பொறைவளர் திருவுங் கற்பும்
பூமக ளிருந்து வாழும்
குறைவிலா முகையார் மன்னர்
நாட்டியல் கூறு வாமே. (17)

முகிலினம் படர்ந்து சென்று
முக்கடல் நீரை யுண்டு
ககனிடைப் பரந்து மின்னி
கதித்திடி முழக்கங் கொண்டு
புகரிடம் பறவை யோடு
விலங்கினம் பயந்திங் கேக
செகவுயி ரனைத்தும் வாழ்க
திங்கள்மும் மாரி பெய்யும். (18)

தேன்கனிந் துதிர்ந்து வாழைக்
கனியினை சிதறிச் சேர்முட்
டாங்கனி போழ்ந்து வாழைத்
தருக்கினீ ருழக்கும் மண்ணை

நீங்கருங் கூலம் வீழ
நிவந்தவா னிடித்த தென்ன
தாங்கரும் புலியைத் தாங்கும்
வாளரத் தவிக்கு மன்றே. (19)

கோழுறைக் கதலி யீண்ட
கொழுங்கனி யிழிந்த தேனும்
காழுடை மாமழை யீண்ட
கனியினின் றிழிந்த தேனும்
வீழ்சுளை வேற் பலாவின்
வியனரி யு று தேனும்
சூழ்வயல் வளரப் பாய்ந்து
துலங்குகத் திரிமா நாடே. (20)

காடெல்லாம் மலர்கள் தூவும்
கழனியில் வளைமுத் தீனும்
கோடெல்லாம் பசும்பென் கோடு
குவடெல்லா மணிக ளார்க்கும்
பூடெல்லாம் கனியின் பூடு
பொழிரெல்லாங் கனிகள் சிந்தும்
நாடெல்லாங் கன்னல் சென்னெல்
நலப்பட்டே விளையு மாதோ. (21)

பூவெல்லாம் வண்டுந் தேனும்
பொரிவரிச் சுரும்பி னோசை
காவெல்லாம் மயில்க ளாடும்
கருங்குயில் கரங்கு மோசை
மாவெல்லாங் கவிகள் பாயும்
வாவிகள் தோறு மாதர்

காவெல்லாஞ் சிலம்பி னோசை
சங்கீத வோசை தானே. (22)

சுரும்பணி கூந்தல் மின்னார்
கொழுனரை துவண்டு நல்கி
அரும்பவிழ் வாவி தோறும்
ஆடிய வருவை யோசை
கரும்பினு மினிய சொல்லார்
காட்டிய குரவை யோசை
விரும்பிய சியருத் துமரும்
வயினச வெளிய டோறும். (23)

**வேறு**

இன்ன தன்மைய நாடுசூ ழின்னகர்
பொன்னி லங்கும் புரிசையி னுட்புறம்
மன்னு மாமணி யால்செய்த மாடமும்
வண்ண கூடமு மின்னல் வயங்குமால். (24)

கொற்ற வர்க்கிதங் கொட்டு முரசொலி
மத்த கம்பரி வாயடு மோதையும்
தத்தா மாமறை பேசு முழக்கமும்
சத்த வாரியி னோசையைச் சாருமால். (25)

இலங்கு மேடையில் மங்கை யெய்தியே
துலங்கு சந்திர வதனமென.... தோகையர்
அலுங்கு பந்து கார்வெங் கனே
குலுங்குங் கொங்கை கொழுனர் மயங்கவே. (26)

பன்னு சித்திர பன்மணி மாடமேல்
கன்ன மதறெங் கனிமொழி நங்கையர்
பின்ன லாற்ற குழற்கூட் டகிற்புகை
அன்ன கர்த்த டந்தது கமழுமே. (27)

வல்லி மாமயில் சுந்திர வதனமும்
முல்லை வெங்கதிர் முத்து நகையையும்
வில்லு வேலின விழியையுங் கண்டிடில்
கல்லு நெஞ்சினி னைங்க நகரமங்கு. (28)

அஞ்சு மாறையு மன்புற வெண்ணியே
நெஞ்சு வல்லவன் றன்னை நிதந்தொழு
தஞ்ச மென்று யிரங்குமந் தவத்தாவள்
கஞ்ச வாவிசூழ் கத்திரி மாநகர். (29)

(முகையார் மன்னன் வருணணை)

இன்னகருக் கரச னியலு...ம்
மன்னர் வேந்தன் சுவுதா பதிமகிழ்ந்து
உன்னியீன் றசு. . .ள்ம முகைய வர்திரு
பொன்னு நன்மணி பூண்ட முடியினான். (30)

பருப தத்தைப் பகைக்கும் புயத்து
வகுத்த செங் கஞ்ச மலர்கணை
அருண னொத்த அருங்கதிர் மேனியும்
சரவ குத்தமுத் தாரெனு மார்பினான். (31)

சென்னிற வல்லியை நகைக்குஞ் சேவடி
கன்னவிர் மதனையும் கடிந்த றுந்ததன்
பொன்னுரு வதனமும் புவனத் தோர்புகழ்
மன்னவ ரிறஞ்சிய வீர வாகினான். (32)

இஞ்சொல் மாமறை பகற்றிலி னின்பமுக்
கஞ்சடக் கூர்விழி முகையரைக் கண்டுள
வஞ்சியாம் பலபெரி தாகி வாடியே
மிஞ்சிய துயருடன் மெலிந்து நிற்பரே. (33)

சிலைநுத ரரிவையர் மருளுஞ் செவ்வியான்
மலையனதிர் மன்னவர் வதைக்கும் வாளினான்
கலையினில் வல்லமை கழறுங் கற்பினான்
இலையென ஏற்பவர்க் கீயுஞ்செங் கையான். (34)

(முகையாரின் பிரார்த்தனை)

நீதியிவ் வகைமுகை யாரு நேமியா
யோதியே பொருளெல்லா யுகந்து நாளுமே
ஆதியை யிறைவனை அரிய தேவனை
நாதனைப் புகழ்பெற நயந்து சொல்லுவார். (35)

மெல்லியி னிளமதி மேயு நன்னுதற்
செல்லிருள் குழலியை சேர்ந்து டெவ்வெயி
இல்லைஎன் மனத்தினுக் கிசைந்த மகதன்
வல்லவ னிடத்தினி லுரைத்து வாடினார். (36)

(முகையார் கண்ட கனவு)

இங்கிவர் மயலினா லிளகுங் காலையில்
ரங்குரா யரசனன் நகரில் வாழ்பவர்
அங்கேவந் திவர்வடி வழகை நோக்கியே
பொங்கிய மகிழ்ச்சியாய் புகல்வ தாகினார். (37)

**வேறு**

(சந்திர பதனின் வடிவழகு)

*மஞ்சுயலர்ப் பொழில் சுந்தர மாநகர் மன்னன்*
*நெஞ்சுயர்ந்துநற் றவத்தினால் நிலமிசை யுதித்த*
*வஞ்சி நற்கொடி மடமயி லனங்குயிற் கிள்ளை*
*கொஞ்சு நன்மொழிச் சந்திர பதனெனுங் கோதை. (38)*

*பூவுள மாதர்க ளெல்லாந் திரண்டொரு பொருளவாக*
*தேவ லோகத்தி னரம்பையர் வடிவமுந் திரண்டு*
*மேவி யோருரு வாயிட மேதினி தன்னில்*
*தாவி யேவரும் சந்திர பதனுந் தானே. (39)*

**வேறு**

*கார்க டுக்கை யறலங் கருங்குழல்*
*நேர்கு னித்த இளம்பிறை நெற்றியும்*
*போர்வளைச் சிலை என்னப் புருவமும்*
*மார்ப கழியை யொத்த வடுக்கண்ணாள். (40)*

*இலகு ரத்தின மிட்டிளைத் துச்சித*
*குலவுநத் தணியுங் குமிழ் நாசியும்*
*துலவும் வம்பணி தூணியும் வள்ளையும்*
*அலவி தெண்டு அருஞ்செவி பரத்தினாள். (41)*

*முத்து மாமணி முல்லை முருந்தையை*
*வெத்த காட்டுதீ என்றொளி வெண்ணகை*
*தத்துங் கோவையை யிந்திர சாபமும்*
*நத்துஞ் செவ்விதழ் நல்லமு தத்தினாள். (42)*

கிஞ்சுந் தரும்பூ விதழ்கொள் வார்கோல
நெஞ்ச மாமயற் கொண்டயற் கோலமென்
அஞ்சு கம்பயி லங்கண் பகர்தலாம்
கொஞ்சு மாமொழி கோதை சிகாமணி. (43)

வட்ட மாமதி என்ன வதனம்
முட்ட மாங்கமு கென்னவுங் கந்தரம்
தெட்ட வேயம் பசியமென் டோள்மிகு
மிட்ட காந்தள மென்னுங் கரத்தினாள். (44)

கும்ப கிம்புரி வாரிசங் கோங்கொடு
பம்ப ரந்திரு வட்டுப் பருபதம்
வம்பு சக்கர வாளுமி னயிலர்
தம்பொற் சித்திர மேந்துந் தனத்தினாள். (45)

வடவ யந்தளி ரென்னு வயறினி
துடியும் வல்லிக் கொடியையும் சுந்தரம்
படரு மின்னையும் நூலையும் பார்ப்பதற்
கிடமு மய்யம தாகு மிடையினாள். (46)

கரிய நாகம் வரைச்சுழி காட்டிய
வரிய நாக படத்தட வல்குலும்
தெரியுஞ் செங்கத லித்துடை சேர்வையும்
தரிய கூர்மமெ னுமுழந் தாளினாள். (47)

இளவி றாற்கிணை என்னும் பறண்டையும்
நளின மாந்தளிர் போற்றுகை நற்பதம்
ஒளிரு மாரதி செந்திரு யொப்பிதம்
வளமை கூறரி தாகுமிவ் வஞ்சிக்கே. (48)

இந்திர தோரண மெங்கு மிலங்கிய
சுந்திர மாநகர் தொண்டல் தவத்துரு
தந்திர யூகின தார்மங்கை நாயகம்
சந்திர மாமுகச் சந்திர பதனென்பாள். (49)

**வேறு**

இன்ன தன்மைய னென்றெழி லியம்பொணா மடமான்
பன்னு வர்சக மானுரு மமைச்சரும் பரிவாய்
மன்னுயிர் களுமங் கெழுக்கிலோ மயக்குற முயங்கி
என்ன மாதவர் செய்திடும் யாங்க ளெணடி யமரபும். (50)

அருவ நாயகம் சந்திர பதனுரு வழகும்
திருவி ளங்கிய பன்னிரு வடிவமுந் திரள்
ஒருவ நனவ னிருவரு மொருஉரு வாக
கருவ மைத்திரு வுருவமு மனமக்கன்னங் காணோ. (51)

மகுண நற்குணத் தியலுரு மட்டயி னரிது
சுகுண மங்கைக் கியலுருந் தோள்பத யரிது
பகரும் நின்குணம் மரகதம் பதித்திட வாய்ந்
தகலுல கேகுமம் மாதுயர் நயகுணத் தங்கம். (52)

(முகையார் கானகத்திற்குத் தேடிச் செல்லுதல்)

என்று வாலிப னுரைத்தசொல் லமுதினு மினிதாய்
நன்று வைம்புல வழிபுகுந் துள்ளமி னாட்டிச்
சென்று நல்லுடற் களிப்புற தெரிவைமே லன்பு
அன்று காட்டுற வானந்த வாரிதியி லமுந்தார். (53)

மல்ல லம்புயன் சயனகத் துறுமல ரணைமேல்
வல்ல வன்றனைப் புகழுற வணங்கியே சாய்ந்து
மெல்லி தன்னுரு வினைமனத் தகத்திடை விரும்பி
பல்லி யத்தொடு கண்வளர் காலையில் பரிவாய். (54)

மனநினைத் திடுமக் காலையில் மாதவர் தமக்கு
இனந்தொரு வன்னருள் உதவி யெய்வது போல்
கனவிற் சந்திர பதனுரு முழுதுங் கண்டு
தனது கைவச மாக்கவு மெழுந்தவச் சமையம். (55)

கண்விழித் தனன் மாடமுங் கபாடமு மண்டு
பண்கொ முந்தினைக் கண்டிலேன் பேதமுற் றயர்ந்து
மண்மு கந்தனன் வானினை நோக்கினன் மதியோ
வெண்க திரொளித் தாரகை மின்னலோ வென்னொ. (56)

சொர்க ரம்பையோ மாகையோ தோகையோ குயிலோ
வர்க்க மேவிய வண்ணமோசொர்ணமோ மானோ
நற்க லன்பெரும் சித்திரமோ ரத்தினமோ நளின
பொற்கு முதமோ பாவையோ பூவையோ வறியேன். (57)

மன்னுயி ரெல்லாம் மயக்குற வந்தமா வடிவோ
தன்னு யிர்க்குறும் பெருமையைக் காட்டிய சடமோ
பன்னு மந்திரத் தாலுரு வுருவமோ பசாசோ
என்னு யிர்கொடு போகவந் தேகின வெமனோ. (58)

கத்தை சொல்லினன் காரிகை காமமோ கத்தின்
பித்தை கொண்டனன் பேச்சி ழந்தனன் பேணி
அத்தை தந்தையும் அன்னையும் யாவையும் நீக்கித்
தத்து கானகம் புக்கினன் தவம்புரி பவர்போல். (59)

காடு மாமலை யருவிகள் நதிகளுங் கடந்து
தோடு தாமரை வாவியுங் கழனியுந் துலைத்து
நாடு மாநகர் வீதியுஞ் சோலையும் நடந்து
தேடி மாதினை வருகிற காலையில் செம்மல். (60)

**வேறு**

சித்திர மிரத்தின மிழைத்த மகுடற்
பணிதிருத் தியசிரத் தாசரார்
நித்தமு நினைத்துதிறை கப்பமிடஞ் பஞ்....
நிற்கனக பொற் புயவனான்
முத்த மதில்வெற்றி முரசக்குனில் சத்தவளர்
முற்ப்பர வுபேதத் திறலோன்
அத்திபரிமிக்கரத மொக்கமனு சுத்த
படைப் புனித கொற்ற வனுமாம். (61)

மந்தர முயர்ந்த மதிளும் புரிசையுந்
திகழுமன்ற கமழந் தெருவளர்
சுந்தர மெம்பதி யிலங்கர சுறங்கு
மன்ன தேர்ந்த தவம்வந் தமகவாம்
இந்து ஒளிவும் பருதியஞ்சு பருமிஞ்சுனே
மிங்கிரத முயந்த மடமான்
அந்த முருச்சந்திர பதனம் புவியிலெங்
கெழிலும் புகழியம்ப வரிதே. (62)

**வேறு**

அரிவை சிகாமணி யருகுரு
மொழியா அவருட னோதுவள்சீந்
தரகு விலாசமு மருள்புரி
தேவனை தனிதொழ வேணுமினாள்
மருவளர் மாமலர் புனுகுசவ்வாதொடு
வயநிரி வாலுருமால்
பெருகயிந் நேரமே நிரைதர வாரினி
பிறபல மேவிடவே. (63)

(சந்திரபதன் கானகம் வருதல்)

இரவலர் மனமது களிபெற உதவிட
யிருநிதி குணர்மினென
தெரிவையர் நலதென துகைபல கலநிதி
புகழ்பெற எதிரிடவும்
அருகினில் மறையவரவர் படைகளு
மதிருடன் வரவு மென
பருவம் நடமிடும் மடமயில் குழுவினர்
பரிவிலும் வரவினவும். (64)

**வேறு**

பூண்பர் சிலபூம் பணியா பரணம்
காண்ப ருருகாண் பன்கறு வரிணதி
நாண்பார் மடமா மயில்நா கரிக
ஊண்பால் நிறவார் மொழிக்கிள்ளை (65)

மையா டியவேல் விழிமங் கையர்கள்
கையால்வெகுசித் திரகற் பனைகள்
செய்யாள் செயல செய்வது செப்பமற
வய்யா வணிஎன்ன வகுத்தன னால். (66)

தங்கப் பணிபூட் டிதா - (முரா) லார்
திங்கள் கதிர்காட் டிமைத்திலத
கெங்கைக் கிறுகச்சி குதைத்து மயில்
நங்கைக் கிதணிந் தனர்நா ரியரே. (67)

செம்பொற் கலைகட் டினர்சிற் றிடையில்
கும்பத் தனமீ தினில்குங் குமமும்
அம்பொற் பலவா சமணிந் துகதிர்
அம்பொற் சிவிகே றினாள்சந் திரபதன். (68)

**வேறு**

*விருதுற்ற ரங்குரா சனருதிர்ப்ப...*
*மாலை வெழில்துத்த மாதர் சூழவே*
*திருவுற்றி லங்கு நாகமணியிற் றுலங்கு*
*பாலவெழி லால வெட்டு மங்கு வீசவே*
*அருகுற்ற னங்கள் சூழ்ந்து வருகுற்ற*
*தென்ன மங்கையிருபக் கங்கவரீ யாரவே*
*விரிவுற்ற திங்கள் மங்கை யழகுக்*
*குடைந்து வந்துவெழி முத்தும் கவிகைபத்தவே. (69)*

*துடிவட்ட பேரிபம்பை யடிபட்ட தாரை கொம்பு*
*துகளிட்ட யோசை எங்கணும்*
*இடிவிட்ட தாமுழங்க ப... யுட்ட*
*இருயிட் டுண்டுமலை .. பன்*
*முடிகட்டு ரா.. ரசம்பம் படைவெட்டு*
*வீரர் சிங்கம் முறைவட்ட பரிகள் சூழவே*
*கொடிவிட்ட நாகமெங்கு லடிமட்டு சூடவங்கு*
*குமுறிட்ட ... ரிக றேங்குமே. (70)*

*மதியொளி மாமுகத்து வனுந்த யார்க முத்து*
*மகிழுற வாடி சுத்தவே*
*கதிரொளி வாள்பிடித்து குதிரை மேலேறி சுத்தி*
*கலைவிடு வீரர் நிற்கவே*
*துதியொடு கீதமொத் துகலைகவி வாணர் மெத்த*
*சுகதமிழ் பாட மதத்தோர்*
*பதியவட்ட காற்று விட்டுயிவள் படிமொகமுத்த*
*பலபல ராச ருத்ததே. (71)*

## வேறு

சேனையுந் தளமுந் தேச
சிறப்புறு மரசு விட்டு
மானெனு விழியாள் சந்திர
பதனவள் மயக்கங் கொண்டு
யீனமுற் றுருகி நெஞ்ச
மிவளெழில் காண வெண்ணி
தேனினை வரிகள் சூழ்ந்த
தகைமைபோல் செழிக்க நின்றார். (72)

தந்தியும் பரியுந் தேரும்
சேனையுந் தாதி மாரும்
மந்திரி மகளிர் சூழ
மதிமுக ராச கன்னி
சுந்தர மிலங்கு மாடம்
தோரண வீதி நீங்கி
கந்தரங் காவல் கோட்டை
வாயிலைக் கடந்து சென்றாள். (73)

(முகையாரின் துயரம்)

செல்லணி கூந்தல் நெற்றித்
திலதமு மிலங்கச் சேந்த
வில்லெனும் புருவ வேலின்
சேனயும் வெருட்டுங் கண்ணும்
முல்லைவெண் ணகையுங் கண்டு
முடிகவுழ்த் தரச சொல்லா
வல்லிதன் மயலுள் சிக்கி
வாடியே மருண்டா ரன்றே. (74)

ஏக்கமும் மயக்க மாகி
இருவிழி சுழன்று மன்னர்
தேக்கமுந் திகைப்புங் கொண்டு
திகைப்பெரு மூச்சை வாங்கி
நாக்குநீ ருலந்து நெஞ்சில்
நாட்டிய உரையு மாறி
தாக்குமன் மதன்வே ளெய்த
கணையினால் தவிக்கின் றாரே. (75)

இந்தவா றுதவிக் கின்ற
வாலிப ரெவருஞ் சொல்வார்
அந்தவா னுலகில் வாழும்
ஆரிழை மயிலோ வென்ன
இந்தமா னிலத்தி னன்று
விரைவர னெய்த வெண்ணி
வந்தமா வடிவே பொன்னின்
மணியுகிர்க் கொம்போ வென்பார். (76)

அன்னையுந் தந்தை தேவி
யரசுநன் பதியும் தேவி
மன்னவன் ரங்கு ராயன்
மகவையின் வடிவைக் காண
இன்னக ரடைந்து ஆவி
யிழந்திட வந்தோ மென்று
கன்னியின் றுயரி னாலே
இப்படிக் கவலு வாரும். (77)

அரிவையர்க் கரசி யென்னும்
அனங்கையை மணமு டிக்க

வருபவ ரிலையோ அந்த

மன்னவ னவனோ வென்ன

இருநிலத் திருந்த மாத

ரெழிலெலா நகைக்க வந்த

மருமல ரணையுங் கூந்தல்

வாடுதே வதன மென்பார். (78)

**வேறு**

அம்பெனும் விழியும் பவளமென் வாயி

லஞ்சுகங் கெஞ்சிய மொழியும்

செம்பொனின் குலிந்த செப்பெனு முலையும்

சிறுத்தசித் திடைஇவள் வடிவும்

உம்பரி னுலகத் தமைத்தவ ரெவரோ

ஓராயிர மாத்துரு ஒளிவோ

அம்பொனின் முடிய னரசர்க ளெவரு

மவரவ ரிப்படி யறைந்தார். (79)

மன்னுயி ரெவரு மினும்பல மொழியை

வகுத்திட வனிதைய ரரசி

கன்னியர் கவியப் படையுட னனைத்துங்

கடுகியங் கேகுமந் நேரம்

பொன்னணி சிகரக் கொடியையுங் கண்டு

பூவையாள் சிவிகைவிட் டிறங்கி

அன்னமென் னடையைப் பழித்தினி துசந்து

அன்புடன் வருகுமக் காலை. (80)

கன்னியின் வடிவை கனவுகண் டெழுந்து

கருத்தினில் துயரமுங் கதித்து

அன்னைதன் தந்தை அரசையும் நீக்கி

அரிவையைத் தேடியே அலைந்து
மன்னவன் முகையார் வரும்வழிக் கெதிரே
மங்கையாள் வருவதைக் கேட்டு
தன்னுயிர் தவித்து மழைகண்ட பயிர்போல்
சதிரங்க ளாடி ஓடியதே. (81)

பூட்டிய சிலைபூங் கணையிலுங் கடிதாய்
போந்தனர் புரவிதே ரடர்ந்த
கூட்டியே விலக்கி அரிவையர் நரப்பெண்
கொடிமட மயிலெனுங் குயிலை
நீட்டிரு கரத்தா லிடைதனைப் பிடிக்க
நேரிழை யனைவருந் திகைத்து
சூட்டுபொன் முடியி ராச குமாரி
துணுக்கமுற் றுடம்பெல்லாந் துடிக்க. (82)

சேலிரு விழியுங் கனற் பொறிகதுவ
செவ்விதழ் கருநிற மோடி
நூலிடை யிணைத்த இளவல்மன் னவனை
நுண்கொடி சினந்தவள் நோக்கி
ஆலெனு விழியாள் தேனெனு மொழியாள்
அடருதன் கோபமுள் ளடக்கி
வாலிபன் முகையார் வதனமு நோக்கி
மாதுளனா ளிதழ்திறந் துரைப்பாள். (83)

**வேறு**

மனதினி லயர்வில் லாமல்
வந்தெனை யணைத்தா யுந்தன்
நினைவறி வழிந்தா யிந்த
நெடும்புவி நகைக்கு மென்ன

உனதுதன் மயலை நீக்கி
உண்மையை மனதில் கொண்டு
எனதிடை விடுநீ என்ன
ஏந்தலு மேது சொல்வார். (84)

(முகையாரின் வேண்டுதல்)

வண்டணி சூந்த லாளே
மாமதி வதன மின்னே
கண்டெனு மொழியி னாளே
கற்பகக் குயிலே கண்ணே
முண்டகக் கரத்தி னாளே
முகிழ்முலைக் கனியே முத்தே
ஒண்டொடி மயிலே பொன்னே
ஒருமொழி யுரைக்கக் கேளாய் (85)

என்னுரு வமாஷக் கான
எழில்மணி எழும்பி எங்கு
உன்னுரு மாஷக் கான
வலையினி லுழன்று நிற்க
முன்னைஎன் தலையி லாகு
எழுத்தினை முடிவ தல்லால்
அன்னமே உன்னை விட்டு
அகலவே போவ தில்லை. (86)

அன்னமே யணங் கேயுந்தன்
அரு விழிச் சேல்கள்
ரெண்டுட னிருத யவாவிக் குள்ளே
எழில்விளை யாடு தென்ன
ஒருவனே யிருவர் நாட்ட

மொன்றுசெய் பவனே மாது
தெரிவையே பிரிக்கா தென்னை
என்னவே செப்ப லுற்றாள். (87)

(சந்திரபதனின் மறுமொழி)

பூரண மதியின் முன்னே
புகைச்சுட ரெதிரி யாமோ
காரண மீதுதா னென்ன
கருத்தினில் வேக முற்று
ஆரணஞ் சூட்டுங் கையை
அடவியே யத(ற்)றி வைதாள்
வீரமு மொடுங்கி மண்ணில்
விழுந்தனர் மயக்க முற்றே. (88)

வருபவ ரெவரு மீது
புதுமையா மனதில் கொள்ள
அரிவையுஞ் சேனை யாவு
மாலைய மதனில் போந்து
மருமல ரணிந்து தெய்வ
மலரடி யிறைஞ்சி மாது
பொருளினை இரப்போர்க் கெல்லாம்
பொன்மழை பொழிந்தா ளன்றே. (89)

அரும்பவிழ் வாவி சூழும்
அத்திமா நகர்க்கு வேந்தன்
பெரும்புகழ் பீர்மு கம்மத்
பேணிய தவத்தி னாலே
வருமகம் மதுமீ றாபொன்
வாணருக் களிப்ப தேபோல்

பொருளெளி யோர்கட் கீந்து
தய்யலும் போக லுற்றாள். (90)

அத்தியும் பரியுஞ் சேனை
யரசருந் தாதி மாரும்
கொற்றவன் மகளு மைய
லாசையின் கொடுமை எண்ணி
சித்திர மனையிற் சார்ந்து
செல்விவீற் றிருந்தா ளிப்பால்
உத்தமன் முகையர் மன்னன்
கதைதனை எடுத்து ரைப்பாம். (91)

**வேறு**

தையலர் தனக்கே மையல் (மி)குத்திடு
தன்னி... வதனத் தான்
மெய்யு... மன்மதன் விட்ட
விற்கணை பட்டே நீள
கையெ நெளித்தே பய்ய மு..
...தறாத காத்துண வ...தேயோ
வையக மத் தோணுக மொத்தே
வாடுத லுற்றானே (92)

முகையாரின் (தவிப்பு)

புத்தி மறுத்தே பித்த மிகுத்தே
புணலுண்வ .... கை வி
ரித்தே முத்தொளி வுற்ற
...காம வனல்தான்
பத்தலை சத்தே சுத்தியெடுத்தே

....பாணி மிகத்தேடி
அத்த வனத்தே யெத்திசை யுத்தே
யாவிதுடித் தானே. (93)

பலகலை யுற்ற நினைவு களைத்தே
பாவை தனைத்தேடி
கலவைக ளூற்றவே யரவுகள் மெத்த
கனத்துட லித்தோடி
சலில மனைத்து கலைகள் நனைத்து
தன்பொரு ளைத்தேடி
யிலை எனவைத்தே ... யென விட்ட
எளியவ ரொத்தானே. (94)

தத்து விழிக்கு முத்து நகைக்கும்
தடமுலை தளர்வதும்
சித்து மிடைக்குந் தேனின் மொழிக்கும்
திங்களது தலக்குழையும்
கொத்தவ னுற்றே வெற்றி முலைபபொன்
கோடுகள் பட்டேமா
மத்தட முற்றே மாமயி லுக்கே
வாடுத லுற்றானே. (95)

திங்களை யொத்த மங்கை தனக்கே
சிந்தை களைத்தோடி
சங்கைக ளூற்ற அய்ய ரவத்தே
தன்வேறா மெற்றாகி
அங்கவ ளைத்தே கணகள் சிவத் ...
அம்புவி விண்ணொத்தே
பொங்கு மதத்தை யும்பவ ரொத்தே
புலம்பு தலுற்றானே. (96)

**வேறு**

மந்தர நெடும்புரிசை யுங்கனக மங்கையரு
மன்றி லுளதோ
சிந்துநிடை புந்திவரு செந்திரு வெனும்புனித
திங்க ளிதுவோ
அந்தியக லுந்திகழும் சுந்தர மயங்கவரும்
வம்ப வளமோ
எந்தவகை என்றறிது எந்தன்மதி யுஞ்சுழலு
மிந்த வடிவே. (97)

தோதக மெடுத்துனை வாடவே விடுப்பதென
தொல்பு வியிலே
காதலை விடுத்துபழி யாகவே தொடுக்கவரு
கன்னி யர்களோ
பாதகமீ தெந்தலையி லன்றெழுதி வைத்திடுமுன்
பாவ வினையோ
மாதுமய லாலேமன வாடிமெலி வாகியருள்
மாறி வெறிகொண் டன்னரோ (98)

திங்களு மனல்சுடரு மிங்கிணையோ என்றுமவள்
செப்பு மொழியை
அங்கவர் புலமாலிது வாகவே எடுத்துயிரு
அம்பு வியிலே
சங்குவள நாடுபுரி மாநகர் தடந்தெருவுந்
தய்ய லுரையை
எங்கணு முரைத்துமனு தற்காறி னோக்கினவ
ரேதுரை செய்வார். (99)

கஞ்சமல ரொத்தவத னத்துடை மேனியு
மகத்திறொ ளிவினால்
மஞ்சிடை கடக்குமதி ளம்புரிசை நன்னகரில்
வாழு மரசன்
தஞ்சமென வந்தமக னாகுமிவ னாமெனவே
தய்யல் .....லே
வஞ்சனையோ சூனியமோ வல்லவனோ முதலாதி
வந்த படியோ (100)

இன்னவுரை தன்னறைவ ரிவ்வுலகி லுள்ளமனு
யாவ ரெனிலும்
மன்னன்மகள் விள்ளுமுரை சொல்வ தலால்
வேறுமொழி வாரதிலேயே
சென்னல்வள நாடுதிரு மாமலையி னோடைகள்
செறிந்த விடமும்
அன்னிலை வளந்ததரு காயிலை யருந்தித
வம்புரிபவர் போல (101)

**வேறு**

ஊரிழந்து மரகிழந்து உற்ற
வரையிழந்து நெஞ்சு முருகிதந்தன்
பேரிழந்து நினைந்துவந்த பெண்ணிழந்து தல்லாமல்
பித்து மீறி
வார்முந்து முலைமாதர் வகுத்தமொழி யுபதேச
மனதி லெண்ணி
பாரெழுந்த மலைவனமும் இம் மொழியை யிடமுழுதும்
பகர்கின் றாரே. (102)

விண்முழுது மச்சியடுவும் வெளிமுழுதும் கதிரவனும்
விழிக்கும் நித்த
மண்முழுதுங் கடல்முழுது மரமுழுதும்
மலைவனமுந் திரள்கள் சூழ்ந்த
நண்பதியும் நன்நாடும் நறுமலர்கள் பொழிகாவும்
நாடிப் பார்க்கு
கண்முழுதுஞ் சந்திர பதனவாட்கு
தோற்றுதவர் கருத்தினுக்கே. (103)

(மகாபுரி அரசன் வேட்டைக்கு வருதல்)

சினத்ததிரும் வரிப்புலியும் குஞ்சரமும் பரந்தநடை
செறிந்த மேரும்
தனித்தசிம் மக்கரடி குடியிருக்கு வனங்களும் கரடிக்காடத்
தல முஞ்சுத்தி
முனைத்தவெறி பைத்தியத்தின் முகையார் கலைந்தலைந்து
முருகுங் காலம்
கனத்தமகா புரியரசன் படையுடனே வேட்டையெனக்
கருதி வந்தான். (104)

வலையுடனே கயிறுகளை எடுத்துசில வேடருமவ்
வனத்தைச் சுற்றி
கிலையெடுத்துச் சரமாரி பொழிந்தார்கள் மிருகமெல்லா
திசைக டோறும்
கலைகரடி குதிபாய்ந்து பருபதத்தைப் படருவதைக்
கண்டு ராசன்
மலையருகில் பரியைவிட்டு துரத்திவருங் காலையினில்
வகுக்கக் கேண்மோ (105)

(முகையாரைக் காணுதல்)

காந்தள்வத னத்துடைய கனிமடவா ளாசைஎனுங்
கடலில் மூழ்கி
சோர்ந்துமனந் தளர்ந்திருக்கு முகையாரைக் கண்டரசன்
கருதில் வந்து
எந்தலையுன் னகர்ப்பெயரு முன்பெயரு மெந்தனுக்கு
யியம்பா யென்ன
வேந்தனுரை கேட்டுதிரு வஞ்சிசொன்ன மொழியதனை
விள்கின் றாரால். (106)

சித்திரசெம் மணினுகுற்ற முடிவேந்த னிவர்மொழியைத்
தெளிந்து நோக்கி
உத்திரங்க ளிதுவேயல்லால் நமதுரைக்கு மறுமொழிக
ளுரைப்ப தில்லை
குற்றமிது வருவமென்னோ பெண்ணின்மய லாகுமெனக்
குறித்து வேந்த வேந்தன்
பெற்றமைந்த னாமெனவே வல்லவன்தன் விதிப்படியைப்
பேச லாமோ. (107)

(முகையாரை மகாபுரிக்கு அழைத்து செல்லுதல்)

இன்னமிவர் வரலாற்றை நமதூரில் சென்றறிவோ
மெனவே யெண்ணி
தன்னுடைய படையுடனே முகையாரு மற்றுமுள்ள
தடங்கள் நீங்கி
மன்னரை சளிக்கும் மகாபுரியில் சென்று அவரவரை
மனையி லேவி
பொன்னிலங்கு மாளிகையில் மன்னவனு முகையாரும்
புக்கி னாரால். (108)

(மனைவியருக்கு அறிமுகம் செய்தல்)

மணிதொடுத்த முடிவேந்தன் மனைவியர்க ளிருக்குந்திரு
மனையில் சார்ந்து
கணைதொடுத்த விழிமடவார் தேவியர்கள் நால்வரையங்
கருகே வைத்து
பிணிபிடித்தது முகையர்தன் வளப்பமெல்லா அவர்களுக்குப்
பேசி ராசன்
பணிதொடுத்து அலங்கரித்துப் பாவையிவர் முன்பாகப்
பார்க்க வைத்தான். (109)

அரசனளி மனைவியர்கள் நாலுவரு மயிலனம்போ
லசைந்து நிற்கச்
சிரசெடுத்துப் பார்த்ததில்லை சந்திரன்முன் விளக்கொளி
வலிவோ வென்றந்
தரசன்மக ளுரைத்தமொழி யறைவதல்லால் வேறுரைக
ளறைவ தில்லை
கரியவிழி யரிவையர்க ளிதுபுதுமை எனநகைத்தங்
கவர்கள் போனார். (110)

**வேறு**

இந்தவகை செய்திவர்தன் வந்தவினை தீர்வதில்லை
என்ன விதமோ
எந்தவகை யாலுமிவ ராசைநிறை வாகவென
வெண்ணி யரசன்
மந்திரிக ளீண்டதிரு மங்கையரை யங்குவிட
மன்னன் மகள்சொ
லந்தஉரை யேமொழிய மாதர்நகை கொண்டுவக
லாகின் றாரே. (111)

பொங்குகட லிப்புவியில் கண்டதில்லை யிவ்விதி
புழுங்கி நிருப
னெங்கனும் நிறைந்தபொரு ளாதியிறை வல்லவனே
எண்ணி மெலிவாய்
பங்கவிழ் பைத்திய மகத்தவு முனக்குவெகு
பார மிதுவே
சங்கையே எவர்க்கரிய நாதனை நினைந்துமனந்
தானு ருகினார். (112)

(மந்திரியின் ஆலோசனை)

எத்தனை விதத்திலிவர் பித்தது தணிப்பமென
வெண்ணி மனதுள்
புத்தியை மிகுத்தறி வமைச்சரை யழைத்திவர்
புலம்பு வகையும்
சுத்திய பைத்தியந் தொடுத்த வகையுமறிய
சொல்லு மெனவே
கொற்றவ னுரைத்தமொழி உற்றுஒரு மந்தரி
குறித்து மொழிவான். (113)

**வேறு**

இந்தமா நிலங்கள் போற்று
மெங்களுக் கரசே கேளாய்
சுந்திர நகர மென்னும்
தோன்றல் தன்தவத்தி லீண்ட
சந்திர பதனா ளும்பர்
தலத்துறு மயிலோ வென்ன
இந்த நீளுவரி சூழ்ந்த
புவிதன்னி லில்லை என்று. (114)

மாசிலா மணியா மாது
வடிவினைப் பார்க்க வென்று
ஆசையால் வருகும் மன்னர்
அணங்கைமா வழகை நோக்கி
காசினி யிளையோ ரெல்லாங்
கலங்கியே மலங்கி வாடி
பாசமா வலையுள் சிக்கி
பித்தனாய்ப் படுவா மென்று. (115)

(அரசனின் பதிலுரை)

ஈதுறு கதைகள் போல
இப்படி யுலகோர் சொல்ல
காதினால் கேட்ட தல்லால்
கண்ணினாற் கண்ட தில்லை
மாதுனா ளவள்தன் மாய்கை
யிவரையும் வாட்டு தென்ன
மூதுரை யமைச்சன் கூற
உண்மைஎன் றரசன் சொல்வான். (116)

பெரியவன் தூதன் முன்னாள்
பேசின விசனங் கேளீர்
அரியதோ ராண்பெண் ணென்றும்
ஆஷிக்கு மாஷிக் காகும்
உரியதோ மைந்தா னிந்த
உயிர்ப்பிரா ணிகளை யெல்லா
பிரியதோ ராசை கண்டு
ஒழிவது பெரிதே என்றும். (117)

ஒருவர்தன் னாசை மற்று
　　மொருவர்கள் கெடுப்ப தெல்லா
பெரும்பாவ மடைவ ரென்று
　　பேசினா ரீரசூல் முன்னாள்
அரிவைய ரெனக்கு நால்வ
　　ரன்புறு தேவி மாரை
உருதியா யிவர்முன் விட்டு
　　மொருவரை யுகந்தா ரில்லை. (118)

(அரசனின் உறுதிமொழி)

மங்கையைக் கேட்பா ராகில்
　　மணமது முடிப்போ மென்று
உங்கள்தன் னிடத்திற் சார்ந்த
　　ஒண்டொடி தன்னை விட்டும்
அங்கவ ருரைத்த மாற்ற
　　மதுவல்லால் நீங்கள் சொன்ன
நங்கையை யிவர்க்கு யாகஞ்
　　செய்வதே நன்மை யென்றார். (119)

(போர்முரசு அறைதல்)

இம்மொழி யமைச்சர்க் கெல்லாம்
　　மன்னவ ரியம்பிப் பின்னும்
கொம்மையின் முலையின் மாது
　　கொழுநகர்க் கேட்க வென்றே
மும்மத யானை மீதில்
　　முரசது வன்றன் றோத
அம்மொழி கேட்டு வீரர்
　　அணிமுர சறைந்தா ரன்றே. (120)

(வீரர்கள் ஒன்று சேருதல்)

பேரியி னோசை கேட்டு
பெரும்படைத் தலைவ ரெல்லாம்
கூரிய வாளும் வில்லும்
கொடுங்கசை யிடையில் சேர்த்து
வீரிய பரிக ளானை
சிவிகையின் மீதி லேறி
வாரிடு வெள்ள மென்ன
வந்தனர் வீரர் கூட்டம். (121)

தொடுத்திடுங் கலையின் மன்னர்
சூரர்க ளீட்டங் கையில்
பிடித்த தண்டா யுதத்தின்
பெருங்குழு தலைவ ரீட்டம்
அடுத்தவா ளெடுத்து வீச
அமைச்சர்க ளடரு மீட்ட
துடித்தவெம் பரியின் மீது
துரைமக்க ளீட்ட மெங்கும். (122)

பேரிகை நவுரி சின்னம்
பெருமுர சதிரு மோசை
பூரிகை மணியுங் கொம்பும்
புடைதவி லடிவி னோசை
பாரிடை யதிரும் பூமி
பரிதியி னொளியை மாற்றி
வாரியி னதியைத் தூற்றி
மாசிபோ லதிரு மன்றோ. (123)

கருமலை நிகரெரப் பன்ன
கடகரிக் கவலு மோசை
பெருங்குழு மாலி னோசை
பேசிய வீர ரோசை
வரும்பெரும் படையி னோசை
வலைகட லோசை மாற்றி
கருமுகி லிடிக ளென்ன
பாரிடை கரங்கிற் றன்றே. (124)

(முகையாரும் படையுடன் வருதல்)

பொன்னிலங்கு முடியரசர் பணிந்துதிரை
யளக்கும..ர புரியின் மன்னன்
இன்னிலங்க ளெளியோர்க்குக் கேட்ப
திவை கொடுக்கமன மிறக்க முள்ளான்
துன்னிலங்குங் கொலுவதனி லொருவமைச்சன்
தனையரசாய் துலங்க வைத்து
மின்னிலங்க முகையாரை முழுக்காட்டி
யலங்கரித்து வெளியில் வந்தார். (125)

முத்துமணிச் சிவிகைதனில் முகையாரு
மன்னவனு மீதி லேக
சித்திடையின் தெரிவையர்கள் நடம்புரியக்
கவிவாணர் செயங்கள் கூறத்
தத்துபரி நடனமிடு மகம்மதுமீ
றாகுலங்கள் தழைத்த வாறாய்
கொற்றவனு மமைச்சர்களும் பெரும்படையுங்
கடலதுபோற் கூடிச் சென்றார். (126)

## வேறு

(படை வருணணை)

மஞ்சு மேவு மகரக் கொடிகளும்
பஞ்ச வர்ணம் பகருங் கவிகையால்
கஞ்சங் காந்தள் கணவனைக் காண்கிலா
எஞ்செய் வேனென எண்ணிக் குமிழுமால். (127)

பொன்னின் மாமுடி பூண்ட வரசர்கள்
துன்னும் வேலைத் துலக்கிப் பிடிப்பதும்
வன்ன மேனி வடிவையு முத்துவின்
மின்ன வோடி வெருவி மறையுமே. (128)

இடிக லங்கிய வேழ மிரைச்சலும்
துடிமு ழங்கிய சூரர்க ளோசையும்
வெடிவி லங்கிய வெம்பரி யோசையும்
கடல்ம லங்கின கலங்கித் தவிக்குமாம். (129)

அத்தி எங்கு மதிர நடப்பதும்
தத்துவெம்பரி தாள்க ளடிப்பதும்
சத்து வெம்படை சூழ நடப்பதும்
முத்துஞ் செந்தூள் முகிலெனச் சூழுமே. (130)

(படைசென்ற பாதை)

வல்ல மைப்பய மன்ன னமைச்சரு
முல்லைக் காடு முழுநெய்தல் நீங்கியே
கல்லை யுற்ற குறிஞ்சி கடந்துநீள்
சொல்லொண் ணாப்படை சூழ நடந்தனர். (131)

**வேறு**

நாடுதிரு மானகரு வீதிமலர் வாவியொளிர்
நாலு திசையும்
தேடிவர மாதுநகர் தானரியா தென்னவகை
செம்ம லரசன்
வாடிமன ஓடிமெலி வாகிஅரு ளெப்பொருளே
வல்ல னேயே
நாடிசில நாளளவு தேடிவரும் வேளைதனி
லன்ன கரையே (132)

சுந்தர நகர்ப்பதியில் வந்தவ ரறைந்தமொழி
துங்க வரசன்
இந்தநக ராகுமென சந்திர பதன்தரு
குமிப்பதி யாதல்
மந்திரியு மப்படையு மன்னநகர் காதமென
வந்தி ழிவதாய்
இந்திர படங்குக ளடித்துகொலு மீதி
லிருந்த வரசன். (133)

(சுந்தரநகர மன்னருக்கு ஓலை அனுப்புதல்)

**வேறு**

தந்தியும் பரியும் வெற்றித்
தளங்க ளுண்டு திகார
மந்திரி மாரைக் கூவி
மன்னவ னெடுத்துச் சொல்வான்
சுந்திர நகரை யாளும்
தோன்றலுக் கறிவ தாக

தந்திர மாக ஓலை
எழுதெனச் சாற்ற லுற்றான். (134)

மன்னவன் சுலுத்தான் தீட்டும்
வாசக ஓலை என்றும்
பொன்னணிப் புரிசை சூழும்
புகழ்சுந்திர நகர்க்கு பூபன்
இந்நிலை முழுதுங் கீர்த்தி
இலங்கிய வரச னென்றும்
சொர்ணமா வளிக்குஞ் செங்கை
திரைரங்கு ராய னென்றும். (135)

(ஓலையின் செய்தி)

முங்கியோன் தவத்தி லீன்று
முருகுகொப் பளிக்கும் மாதை
எங்களுக் காகஞ் செய்து
எழிலுடன் தருவா யென்று
மங்கள மாக நல்ல
வழியும்நீ பெறுவா யென்றும்
தங்களுக் கதிக கீர்த்தி
தரைதனி லிருக்கு மென்றும். (136)

(ஓலைதாங்கி தூதுவன் செல்லுதல்)

இந்தநல் வசன மெல்லா
மியல்பொடு வழகுஞ் சேர்த்து
மந்திரி யொருத்தன் கையில்
வண்ணபத் திரத்தை யீந்து
அந்தநல் லரசு வார்த்தை

அறிந்துநீ வருவா யென்று
கந்துகம் படையி னோடே
காவல னனுப்பி னானே. (137)

(தூதுவன் சென்ற பாதை)

மன்னவ னனுப்பி யமைச்சன்
மதகரி மீதி லேறி
கன்னலங் கழனி தோறு
நடந்தனன் காளை யோடு
துன்னியே வாளை பாய்ந்து
துரத்திப்போர் தொடுக்கும் வாறு
செந்நெல்செங் குலைவ ணங்கு
சிறப்புங்கண் டேகி னானே. (138)

(தூதுவன் கண்ட காட்சிகள்)

கொண்டல்வந் துறையுங் காவில்
கொழுங்கனி யுதிர்வ தெங்கு
அண்டமீ துலவு மன்ன
மயிலினம் வந்து ஆடும்
வண்டுகள் மதுவை யுண்டு
மயக்குறக் கீதம் பாடும்
விண்டதி ராக மென்ன
குயிலினம் விளங்கு மாதோ. (139)

தாமரைத் தடாகந் தோறும்
தாமரை முகத்தா ராட
தாமரை விரிம லரும்
தையல ராரொளி முகமும்
தாமரை நிறத்தின் மாது
வடிவினைத் தளிர்வ தாலே

தாமரை எதுவோ வென்ன
தயங்கியே மருளுங் கீதம். (140)

சுந்திர மடவா ராடும்
தலங்களுஞ் சுலுத்தா னேவும்
மந்திரி தளமு மாக
வளையுறு மகிழ நீந்தி
கந்தர மடந்து சூழும்
புரிசைவாய் கடந்துள் புக்கி
இந்திர னிலங்கு மாடம்
வீதியி லேகி னாரால். (141)

மன்னவர் மனைக டோறு
வடிமுர சதிரு மோசை
கன்னமும் மதங்கள் சிந்து
கடகரிக் கவலு மோசை
சென்னியில் தகதுக டாக்கி
தீயெழப் பொருது மோசை
அன்னகர் முழங்கு மோசை
அலைகடல் நிகர்க்கு மன்றே. (142)

நாகவெண் மணியிற் செய்த
நள்ளிரு ளகற்று மாடம்
மேகமே வந்து லாவும்
வெண்ணிலாக் கதிரி லங்கும்
ஆகமும் மகிழ்ந்து அன்ன
மியிலின மாடு மாடம்
கோகுல மருகு ம...ர்
வீதியுங் குருகி னானே. (143)

பங்கய வதன வல்லி
பளிங்குமா மாட மீதில்
தங்கிய மலரின் காந்தள்
தளர்ந்தகில் மணங்க ளூட்ட
எங்குவிண் புகைகள் மேக
வெழிலுரு மயில்கள் நோக்கி
தங்கள்தன் கணவ னென்றே
மகிழ்ந்தினி தாடு மாதோ. (144)

முருக்கிதழ் செவ்வாய் முல்லை
முரல்வரி கடைக்கண் ணல்லார்
திருக்கிய முலையில் வைத்த
திருநிகர் குறியை நோக்கி
பெருக்கிய விரக வெய்யோன்
பெருங்கட லடைநீ ரென்ன
உருக்கிய நிலவெண் ணெண்ணி
ஒளிக்குமே கழிக்கு மாதர். (145)

மின்னுமா மணினு குத்த
வெண்மதிள் மனைக ட்டோறும்
சன்னலைத் திறந்து மாதர்
தனிமறு கதனை நோக்கி
கன்னியர் மகிழ்ந்து பாடும்
காதலுள் சுழன்று நெஞ்சம்
மன்னவன் ரங்கு ராசன்
கொலுவினில் வந்தா ரன்றே. (146)

(தூதுவன் அரசனைக் காணுதல்)

மன்னவன் சுலுத்தா னேவு
மமைச்சனை யரசன் கண்டு
மின்னிய முடியின் வேந்தன்
எழுந்திருந் திருத்திச் சொல்வான்
நன்னிட முணர்ந்து வந்த
வாறிணை நவிலீ ரென்ன
அன்னவை யமைச்சன் கேட்டு
பத்திர மவன்முன் வைத்தான். (147)

(அரசனின் மறுப்புரை)

வைத்தபத் திரத்தை வாங்கி
மன்னவன் பிரித்துப் பார்த்து
உத்தநல் வரலா றெல்லா
முணர்ந்தமந் திரியை நோக்கி
நித்திலத்தி லுள்ளஇன் மாது
கருமமே நீக்கி நீங்கள்
மத்தவை கேட்பீ ராகி
லளிக்கவு மனத்த னானே. (148)

**வேறு**

இருபனிந்த மொழியுரைக்க யமைச்சன் சொல்வா
லின்னகருக் கரசேநா னிகழ்த்தக் கேளு
வருகதிரை யளவுமகா புரியை யாளு
மன்னவருக் குன்தவத்தால் வருகு மாதை
பெருமையுடன் மணமுடித்துத் தருவா யாகில்
பிறபலமும் இருநிலத்தில் பெறுவா யென்ன
மறுமொழியைக் கேட்டுமனஞ் சினந்து மன்னன்
மதிக்குலத்தோ ருங்கள்குல மறையோ வென்றான் (149)

மறைக்குலத்தி லுதித்ததிருப் பூவை மாரை
மதிகுலத்தில் வழங்குவரோ மறுவில் லாத
பொறைகுலத்தி லுதித்திதருப் பூவை மாரை
புகழுமறைக் குலத்தினிலே பொருந்து வாரோ
இறைக்குங்கதிர் வையகத்தி லிவ்வா றுண்டோ
இம்மொழிகள் நடத்து வதில்லைஎனதுள் ளான
தரைப்பதியும் படைபொழிந் தழிந்திட் டாலும்
தருவதுண்டோ முடியசைத்துச் சாற்றி னானே. (150)

(தூதுவன் திரும்பி மன்னனை அடைதல்)

மன்னனிந்த மொழியுரைக்க வமைச்சன் கேட்டு
மறுமொழிக ளுரைப்பதற்கு வகையில் லாமல்
என்னமொழி யுரைத்தாலுங் கொடுப்ப தில்லை
எண்ணிமன முடிவாக எழுந்தி ருந்து
அன்னகிரி புரிசைவிட்டுப் படையுந் தானும்
அகிழ்க்கரையும் பொளிர்குளமு மகற்றி நீக்கி
தன்னரச னிருக்குவிடு தியினிற் சார்ந்து
சாற்றினா னரசனுரை தவறில் லாமல். (151)

(மன்னனின் கவலை)

மாத்தமது கேட்டுமகா புரியை யாளு
மன்னனகத் துயரமென்னு வாரி மூழ்கி
சோற்றுணவு மறுசுவையு மறந்தார் கண்ணில்
தூக்கமொடு நீக்கவுமே துறவான் கற்ற
சாத்திரமு மறைநூலு முணரான் பூவை
தன்படையுங் கொலுப்பதியுந் தருகர் நெஞ்சில்
காத்தமைச்சர் தனைவிழியான் கவிழ்ந்து நோக்கி
கலங்குமதி முகையார்தன் கவலை யுற்றான். (152)

(அமைச்சரின் ஆறுதல் மொழி)

வல்லமது வருந்துகின்ற மாந்த ரைப்போல்
மன்னவரச னிருப்பதை யமைச்சர் நோக்கி
தொல்லுலகில் பைத்தியத்தை யடரு கின்ற
துட்டருடன் வெறிபிடித்து தொடரு வாரோ
நல்லநல்ல வறிவிதுதா னரசர் கோவே
நவின்றுஒரு மொழியுரைத்தால் நாங்க ளேகி
வெல்லுகின்ற வீரர்களை விண்ணி லேற்றி
வெழில்மடவாள் தமைக்கொணர்ந்து விடுப்போ மென்றார். (153)

(சந்திரபதன் வெளியில் வருதல்)

**வேறு**

இன்னவை யமைச்சர் கூறி
இருக்கின்ற காலந் தன்னில்
மன்னவன் ரங்கு ராயன்
வரத்தினி லீன்ற பூவை
பெண்ணுரு தெய்வந் தன்னை
போற்றியே தொழுக வெண்ணி
மின்னயும் படையு மாக
வெளிதனில் புறப்பட் டாரே. (154)

**வேறு**

அடலுத்த வெம்பரி யற்றியும் அருகொத் தவர்சூழ்
கடலொத்துறு சேனைத் திரள்கரு கிப்பலர் வரவே
கொடைமுத்து கள்கவரிச் சிலைகொடிப் பத்திரன் மடமான்
வடிவுற்ற பலமன் னவர்வரு குற்ற ணியணியே. (155)

துடிரவர்... ...துடி துந்துமி திமிலை

புடைதோலி முரையாகிய முரசோசை யுமுதி....

பரியோசை படையோசை யும்பல மன்னவ ரோசை

கரியோசையும் வெடியோசை யும்கட லோசை யதாமால். (156)

தண்டைச் சிலம்புகள் மாதர் தாளில் கலகலென

தொண்டைக்கு முள்மலர் முல்லைகள் குழுவைக் குமுகுமென

பண்டொப் பணிமணி எங்கணும் பருதிப் பளபளென

மண்டலப் பதிமாளைப் புடைவரு வார்கிளி மொழியே. (157)

இருபக்க முகவரித் திரளெழில் மாதர் களார

வருவெம் பரியரசர் குறுமய லகற்றிய மாதும்

முருவெப் படைதனையு முகையார் கண்டெழுந் தோட

அருகுத் திருவரை விட்டன னறிவோ மெனவரசன். (158)

(சந்திரபதனின் சீற்றம்)

**வேறு**

புள்ளெனவே விசைஎடுத்து முகையாரும்

படைவிலக்கிப் புகுந்து போந்து

கள்ளுலவு குழல்மாதர் சூழவரும்

பொற்கொடியைக் கையால் காட்ட

தெள்ளுமதி முகவேறும் சந்திரபதன்

வெகுண்டுமனம் சீறிப் பார்த்து

தள்ளியின்ன மாண்டிலையோ வரசன்மக

ளிம்மொழியைச் சாற்றி னாளே. (159)

## வேறு

மன்ன னீன்றான் மயிலுரை கேட்டலு முகையார்
தன்னுரு வெல்லாம் பதைபதைத் துருகியே தரையில்
துன்னி வீழ்ந்தனன் புழுங்கின னழுந்தினன் துயரில்
எண்ணில் லாமலே சோர்ந்து வீழ்ந்(த)திருகர மெழிலே (160)

உருவ மாடிய தொண்ணுத்தார் கருவினி லுரையும்
அருவ ஞான விந்தயத்துடன் கணமலிந் துயந்தும்
கருணை நாலு மல்லாலுமொரு மூணுமே கருதும்
அரிவு ஒன்னு மாதாரமு மடங்கின தாரும். (161)

ஐம்பொறி களும்விஷ யங்களு மைந்துமே அடரு
ஐந்து கோசமும் அவத்தைக ளைந்துமே அறிவும்
ஐந்து பூதமும் ஐம்புலா திகளுமே அடங்கி
ஐந்து ஐந்துதன் னாடியு மொடுக்கமுத் தனனே. (162)

மூணு தோஷ ரோகங்களை மட்டுமே முடுகி
மூணு தோதக மரிசனங்கள் மூணுமே முடுகி
மூணு நன்மலர் குணம் ரெண்டுமே முடுகி
மூணு நாலொடு வாய்வு மொடுங்கின மாதோ. (163)

ஆதி நாயகனருள் பாடி காலன் வந்தடுத்து
நீதி சேர்முகை யாருயிர் வாங்கி விண்ணேக
தோத வாதொரு வாய்வு சடத்துள்ளே துவள
போது நான்முக மிலங்கிட மரித்தனர் புரிந்தே. (164)

கரமின்னு மாமுகை யாருயர் விண்ணுல கடைய
கன்னி மாமயில் நோக்கியுள் மனமெல்லாங் கருகி
என்ன பாவந் தடுத்துதென் றகத்திடை எண்ணி
நன்னு மாமதி வதனமும் வாடியே சொல்வாள். (165)

ஆகு மென்பவ ராவரோ அகில மீதரசாய்
போகு மென்பவர் போவரே புலியை விட்டிழந்து
சாகு மென்பவர் சாவரோ தலைவிதி முகிலோ
ஆகுமப் புலிவாழ்க்கை யுமிதுவே வென்ற றைவாள்.
(166)

ஆசை யாவுமுன் மீதினி லடர்ந்து நானிருக்க
மோசஞ் செய்தனை யோவென பலபல மொழிகள்
பாசை கூறா வெம்படையுடன் தானுமாய்த் திரும்பி
கூச லாகித் தன்பதி புகுந்தி ருந்தனள் கோதை. (167)

**வேறு**

வந்தவ ரோடிச் சென்று
மகாபுரி வரசை நோக்கி
இந்தொளி முகையார் விண்ணி
லெய்தினா ரென்னச் செ(ா)ல்ல
கந்தரழி பற்றின வேந்தன்
கலங்கியே ஓடிப் பார்த்து
சிந்தையில் துயர் விட்டு
தேம்பியே புலம்பிச் சொல்வான் (168)

ஏந்தலே உனக்கு வேண்டி
எண்ணி நான்வந்த வாறு
சேர்ந்துதே இவிடந் தன்னில்
துக்கமோ ஆசை யெல்லா
மாய்ந்ததே புலியின் வாழ்க்கை
மறைந்தயோ மன்னா வென்று
வேந்தனும் புலம்பி வாடி
வெருவினான் துயர முற்றே. (169)

கர்த்தனே கண்ணே எங்குங்
காணவல் லானே யாகு
சுத்தனே மறையே சோதி
துலங்கிய ஒளியே ஆதி
முத்தவ றாசை தன்னை
முடிப்பமென் றுறுதி யேயும்
இத்தல(ம்) வந்த வாறு
இதுவோவென முழங்கி னானே. (170)

(கபனிடுதல்)

மன்னனு மமைச்சரு மற்ற
வீரரு மனங்க ரைந்து
அன்னிலை தவித்து மாண்ட
சுத்தினை யருவி யாட்டி
துன்னிய கபனு மிட்டு
துலங்கிசந் தேக்கி லேற்றி
உன்னியே வீர ரேக
ஓரடி யகல்வ தில்லை. (171)

(சந்தக்கு நகராத நிலை)

இருநூறு பேர்கள் கூடி
எடுக்கிலு மேகில் லாதால்
நிருபனு மிதனை நோக்கி
நித்தனுன் புதுமை யென்ன
வருவழி யேகு நீங்கள்
மன்னனுரை கேட்டுச் செல்ல
திருமுடி ரங்கு ராயன்
நகரினில் சேர்ந்த தம்மா. (172)

(சந்திரபதனின் மாடத்தை அடைதல்)

சுந்திர நகரின் வீதியில்

சுத்தியே துரையோன் பெற்ற

சுந்திர பதனாள் மாடம்

கடைத்தலை வாயில் சார்ந்து

பிந்தியு முந்தித் தானும்

பேர்த்தடி .......

மலர்ந்தவா ரிருக்கக் கண்டு

யாவரும் புதுமை யானார். (173)

(செய்தி அரசனுக்குத் தெரிதல்)

அங்குள்ள வீர ரெல்லா

மவர்பெருங் கூட்ட மாகி

மங்கையா ளரசி யாசை

மாண்டுவிட் டிலையோ வென்ன

எங்குடிக் கூச்ச லாகி

நகர்முழு தெவருஞ் சொல்ல

ரங்குரா யரசன் கேட்டு

நாடியங் கோடி வந்தான். (174)

(அரசனை நோக்கி மகாபுரி மன்னன் கூறியது)

வந்தவன் திகைத்துப் பார்த்து

மகாபுரி மன்னனை நோக்கி

கந்தரம் பொழியு செந்தேக்

கருமமே துரையீ ரென்ன

உந்தநன் மகளிர் நோக்கி

ஒருமொழி யுரைத்தா ளாகில்

இந்தமஞ் சேகு மென்ன

எந்தனுக் குரைத்தான் வேந்தன். (175)

(அரசனின் பதிலுரை)

போகுமென் றுரைத்தா ளாகில்
போகுமோ உரையீர் மன்னா
சாகுமென் றுரைத்த போதே
சாவது வந்த தென்னா
ஏகுமென் றுரைத்தா லிப்போ
ஏகுமென் றரசன் சொல்ல
வாகொளி மகளீர் மாடம்
வந்தனன் ரங்கு ராயன். (176)

(அரசன் தன் மகளிடம் உரைத்தது)

கன்னிதன் னருகில் வந்து
காவல னோக்கிச் சொல்வான்
என்னிரு கண்ணே முத்தே
என்குல விளக்கே யுந்தன்
துன்னிய பவள வாயா
லொருமொழி சொல்லா யென்ன
மன்னவ னுரையைக் கேட்டு
மாமயி லுரைப்ப தானாள். (177)

(மகள் தவறை உணர்ந்து கலிமா கூறியது)

அய்யனே அடியேன் சொல்லி
அடிப்பவே மூன்று வார்த்தை
தய்யலா ளுரைத்த வார்த்தை
தாமிதுவென் றரசன் போனான்
மய்யனேர் கண்ணாள் தேர்ந்த
மறையுணர் பவரைக் கூவி
துய்யதோர் கலிமா வெல்லாந்
தோகையு முரைக்கின் றாளால். (178)

(இஸ்லாத்தை ஏற்றுக் கபனிடுதல்)

கலித்துறை யீமா னோற்று
மிசுலா மோரை பந்துமிது
வரிந்து தொமந்த தன்தூதறி
றசூலை யுள்மனங் கொண்டபின்பு
போமீர்வென் றோதி னாளே
போனதுவே .....
பொற்கொடியும் தாமாடம் புக்கிக்
கபாடமிட் டாளந்த தய்யலாரும். (179)

(சந்தக்கு நகர்ந்து பொளிர்காட்டினை அடைதல்)

**வேறு**

அந்த நன்மொழி யுரைக்கவே சந்தக்கு மழகாய்
சுந்த ரப்பதி வீதியி லேகியே சூழ்ந்த
மந்தர் பொளிர்கா வினில்மய் யத்தை யிறக்கி
வந்த மன்னவர் யாவரும் தொழுதனர் மகிழ்ந்தே. (180)

(இருவரும் ஒரு கபனிட்டு இருத்தல்)

வருந்தி நாயனை வாழ்த்தியே குழியொன்று வகுத்து
புரிந்த சந்தக்கை திறந்தனர்பூபனும் வீரர்
இருந்த மாமுகை யாருசந் திரபத னிருவர்
பொருந்தி ருந்தனை ரிருவுரு மொருகபன் புகுந்தே. (181)

கண்ட மன்னவர் திகைப்புறக் காரண மீதுதான்
நன்று மிவ்வுல கறிந்தது மிலைஎன வெண்ணி
அன்று நாயக னாஷக்கு மாஷக்கு மமைத்த
குன்று கண்ட மென்றுரைத்த தனரவ ரெவரும். (182)

(மகாபுரி சுலுத்தானின் புகழுரை)

ஆதி நாயக ரவரவர் மனத்துறு மறிவும்
நீதி யாகிய ஆசையும் பாசமும் நினைவும்
பேத மாக நீக்கவுங் கூட்டவும் பெரிதோ
சோதி னாயனே புகழ்ந்தான் மகாபுரி சுலுத்தான். (183)

(அரசன் மாடத்துக்கு வருதல்)

இந்தநல் வகையனைத் தையு மொருவன் கண்டெய்தி
அந்தரங்கு ராய ராசனுக் கியம்பிட அவனுள்
சிந்தை நொந்தவன் வீட்டினை நோக்கினன் திகைத்து
வந்த வெவ்வினை யேதென மலர்பொளிர் வந்தான். (184)

(அரசனின் புலம்பல்)

மண்டு நல்குழல் மகளினை நோக்கியே மன்னன்
பண்டு என்தவப் பாக்கிய நவமணிப் பணியே
விண்டு பொன்முடி தெறித்திடத் தரைதனில் விழுந்து
என்றுகாண்குவ னோவென வழுந்தி னெண்ணி. (185)

**வேறு**

மின்னே நகைத்த வடிவே சிவத்த
ஒளிவே மிகுந்த வழகே
முன்னா ளுனக்கு வெகுநாள் தவத்தில்
முறையா யிருந்தே னதுவால்
இன்னா ளெனக்கு சீவனு மளித்த
யெழிலே கிடந்த யுனது
அன்னே எனக்கும் பழியே சுமத்தி
அனியா ...யத்த மகவே. (186)

கண்ணே உனக்கு வெகு... வந்து
கலியாண மென்றது வெல்லாம்
பண்ணா தகற்றி சிறைவைத்த பாவம்
பழியா முடித்த னெனையோ
அண்ணே எனக்கு தெரியா திருந்த
அதிகோப முற்று மனதில்
மண்ணே என்வாயி லிட்டாய் மிகுந்த
வரமாக வந்த மகவே. (187)

வாடாத திங்கள் முகம்பார்க்க வந்த
வடிவே மிகுந்த வரசர்
கோடான கோடி மயல்மீ துழன்ற
கொடு தோஷமென் தலையிலே
பாடாக வந்ததறி யேனே யுந்தன்
பதியா யிருந்து உயிரை
வாடாமல் நெஞ்ச எமனாவி கொண்டு
வகல்வானோ எந்தன் மகவே. (188)

**வேறு**

கொலுவெங்கே தோழியவ ரெங்கே தாதி
குழுவெங்கே உந்த னருளும்
கலையெங்கே கொஞ்சு மொழியெங்கே சேனை
கடலெங்கே சந்திர பதனே
வலுவெங்கே ரத்தின பணியெங்கே முத்து
வடமெங்கே தூங்கு மணிபொன்
விலையெங்கே யிங்கே வெயில்தங்க மேனி
நிறையா யுறங்கு மகவே. (189)

மஞ்சைப் பழித்த குழலுமணி ...
அழகு பொதித்த யிதழும்
கஞ்சத் தணிந்து கயலைப் பழித்த
தலையொத்த தான விழியும்
செஞ்சொல் சிடி.... தமனமு மறைத்
திங்கள் கவித்த முகமும்
பஞ்சைப் பதித்த பகருமந்த நாளில்
பார்ப்பேனோ வெந்தன் மகவே. (190)

வாடினான் புரண்டான் மண்ணின்
வடிவினைக் காண்பே னோவென்
றோடினான் மனமே என்று
உருகினான் மகவே என்று
தேடினான் பெறுவே னெப்போ
தியங்கியே மூர்ச்சை விட்டு
கூடினா னுடல மெங்கு
உயிர்விடுங் கூட தானான். (191)

உன்னுட பெருமை யாலே
உலகெங்குங் கீர்த்தி பெற்றேன்
என்னுட பெருமை கீர்த்தி
யின்றுநா னிழந்தே னென்றே
மன்னவன் கலங்கி நிற்க
மந்திரி மார்கள் கூடி
நன்... ... ... .. லி
அரசனை நடத்திப் போந்தார். (192)

(இடையில் இரு ஏடுகள் (35, 36) 12 பாடல்கள் இல்லை.)

(சுலுத்தான் தாயகம் திரும்புதல்)

**வேறு**

*பாருலகில் விடிந்ததென பதுமமலர் விரிப்பெங்கும்*
*பரவை யோட*
*தாரணியும் வேந்தன் சுலுத்தானும் புகழ்ந்துபெருந்*
*தளத்தி னோடே*
*ஊரும்பதி வனப்புவிநாடு மலைகடந்து*
*மன்னனூரில் போந்து*
*வீரிய யிறைவனை யிறசூலை புகழ்ந்துகொலு*
*வீற்றி ருந்தார். (193)*

**வேறு**

(ஆதரித்தவருக்கு வாழ்த்து)

*வெற்றி வளராசை பெருங்கதை பாடப்*
*பொருளாடை மிகுதியாய் தந்தான்*
*அத்தி நகர்தனில் வாழும் பீருமுகமது*
*வரத்தா லருமைப் பாலன்*
*உத்த முகம்மது மீரா உலகில்*
*பெருங்கீர்த்தி யுடனுகந்து வாழ்ந்து*
*புத்தி ரருமிகுத் தோங்கி என்னாளும்*
*மகிழ்ச்சி பெறுவார் தாமே. (194)*

(கேட்டோருக்கு வாழ்த்து)

*மாதனுரு மறைய வருமன மகிழ்ந்த*
*கூடித்தொரு வகுத்த பேரும்*
*காதுதந்து கேட்டோரு மகத்தில் தானும்*
*பெருமையுடை யிறைவனைக் கூர்ந்து*
*... வாறாமல் எமது வருமுலக*
*மெல்லாமல் பிரிய மாகி*
*பூதலத்தில் வாழி யருள்மிகப் பெருகி*
*பொன்னுலகில் புகுவ ராமின். (195)*

(சந்திர பதன் கதை முற்றும்)

# பிழைகளும் திருத்தமும்

## பிழைகள் தோன்ற காரணம்

பதிப்பிக்கப் பெற்றுள்ள சந்திர பதன் கதை என்ற இச்சுவடி மிகவும் சிதைந்த நிலையில் உள்ளது. சுவடிகளைப் பல படி எடுத்துக் காத்து வந்தனர் எனத் தெரிகிறது. இவ்வாறு படி எடுக்கும் நிலை,

1) கல்வி கற்க

2) மனப்பாடம் செய்திட

3) மதிப்புடைய பொருளாகக் கருதி எனப்

பலவகையில் ஏற்பட்டது என்பர்.

ஒருவர் படித்துக் கூற, வேறொருவர் படி எடுப்பார். இந்நிலையில் படிப்பவரின் உச்சரிப்பு, வேகம் மற்றும் எழுதுபவரின் உணரும் நிலை, வேகம் இதனைப் பொறுத்துச் சுவடிச்செய்தியில் விடுகையும் மிகையும் தோன்றும். பிழைகளும் இவ்வழியிலேயே அறியாமை காரணமாகவும் தோன்றுகிறது.

## சந்திர பதன் கதையில் பிழைகள்

இச்சுவடியில் உள்ள பிழைகளை நோக்கினால் கல்வியில் புலமை வாய்ந்த ஒருவர் "மூலச்சுவடி" ஒன்று படைத்திட அஃது, தொடர்ந்து பல படிகளாய் மாற்றம் கண்டு, சற்றளவே புலமையுடையவரால் இச்சுவடி பிரதி எடுக்கப்பட்டுள்ளது என்பதற்கு இதனுள் அமைந்துள்ள பிழைகளே சான்றாக அமைந்துள்ளன. அவையாவன,

பகரம் றகரமாகுதல்,

காப்பு தாமே என்பது 'காற்பதாமே என உள்ளது.

## இரட்டை றகரம் தகரமாதல்,

ஒரு சொல்லில் அமைந்திருக்கும் றகர மெய் மற்றும் உயிர் மெய்

எழுத்துக்கள் பேச்சு வழக்கில் தகரமாக மாறிய நிலை இச்சுவடியில் மிகுந்து காணப்பட்டது. சான்றாக,

"வாடுதலுத் தானெ" = "வாடுதலுற்றானே'

என்பது அமையும். மேலும் சில சொற்களைக் காணலாம்.

| பிழை | | திருத்தம் |
|---|---|---|
| (சொல் – பாடல் எண்) | | |
| வேகமுத்து – 87 | – | வேகமுற்று |
| விருதுத்த ரங்குராயன் – 67 | – | விருதுற்ற ரங்குராயன் |
| திருவுத்தினங்கு–67 | – | திருவுற்றினங்கு |
| அருகுத்த–67 | – | அருகுற்ற |
| விரிகுத்த –67 | – | விரிகுற்ற |
| வெத்தி –59 | – | வெற்றி |
| கொத்தவன் –95 | – | கொற்றவன் |
| போகலுத்தான் –90 | – | போகலுற்றான் |
| வாடுதலுத்தான்–98 | – | வாடுதலுற்றான் |
| வீத்திருந்த –91 | – | வீற்றிருந்த |
| பலகலையுத்த –94 | – | பலகலையுற்ற |
| உத்தவரை –102 | – | உற்றவரை |
| சுத்தி –105 | – | சுற்றி |
| பெத்த மய்ந்தன் –107 | – | பெற்ற மைந்தன் |
| லெத்தி – 172 | – | லேற்றி |
| தகத்தி – 181 | – | தகற்றி |
| கோபமுத்து –184 | – | கோபமுற்று |

எனவும்,

| | | |
|---|---|---|
| சுழன்டு – 74 | – | சுழன்று |
| கீந்து – 95 | – | ஈந்து |
| பரந்தனடை–104 | – | பரந்தநடை |
| மென்ருருதியெ | – | மென்றுறுதியே |

என்பனவும் மேற்கண்டமைக்குச் சான்றுகளாகும்.

## சந்திர பதன் கதைச் சுருக்கம்

கத்திரி மாநாடு என்ற ஓர் நாடு இருந்தது. அந்நாடு மிகவும் வளமை வாய்ந்தது. இந்நாட்டில் மக்கள் செல்வச் செழிப்புடன் அமைதியாகவும், நிம்மதியாகவும் வாழ்ந்து வந்தனர்.

மக்கள் வளமையுடன் வாழ, வானம் மும்மாரி பொழிந்தது. மக்கள் வறுமை, வறட்சியின்றி சிறப்புடன், இன்பமுற்று வாழ்ந்து வந்தனர். பலவகையான இயற்கை வளமுடனும், சிறந்த மண்வளமுடனும் அமைந்திருந்தது கத்திரி மாநாடு.

இந்நாட்டை, ஆண்ட வேந்தன் "சவுதாபதி" ஆவார். இவர் ஓர் இஸ்லாமிய மன்னர். அவர் தவமிருந்து ஒரு மகனைப் பெற்றார். அவர் பெயர் "முகையார்" என்பதாகும். இவர் வளர்ந்து பெரியவனாகி அரசர் பொறுப்பை ஏற்று கத்திரி மாநாட்டை ஆண்டு வந்தார். இவருடைய ஆட்சிக் காலம் கத்திரி மாநாட்டின் பொற்காலமாக விளங்கியது.

முகையார் ஒரு சிறந்த வீரராகவும் இருந்தார். வலிமையான தோள்களையும், வாரி வழங்கும் கரத்தினையும் ஒருங்கே கொண்டு விளங்கினார். எளியோர்க்கும் இல்லையென இரப்பவர்களுக்கும் மிகுந்த அளவில் மனமகிழ்வுடன் அளித்திடும் ஈகை உள்ளம் கொண்டிருந்தார். சிறந்த வடிவழகினையும் கொண்டிருந்தார். இன்சொல் கூறுபவராக இருந்தார். இவருடைய வடிவழகில் மாதர்பலர் மயங்கினார்.

தனது நாட்டின் வளமை மற்றும், மக்களின் நலனில் அக்கறையுடைய அழகிய பெண் தனக்கு மனையாளாக வர வேண்டும்

என அவர் அனுதினமும் இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் இரவு அவருடைய கனவில், 'சுந்தர மாநகரை' தலை நகராகக் கொண்டு நன்முறையில் ஆண்டுவந்த ரங்குராயனின் மகளான சந்திர பதனின் வடிவினைக் கனவில் கண்டார். சந்திர பதன் மிகுந்த அழகினை உடையவளாக இருந்தாள். அவளுடைய முகம் குளிர் வெண்நிலவாக விளங்கியது.

அத்தகைய சிறந்த வடிவழகைக் கொண்ட சந்திர பதனாளின் உருவமும் தன்னுருவமும் ஒன்றாகி, அஃதாவது, இருஉருவு ஒருவடிவமாக மாறியதைப்போல வைகறைநேரத்தில் கனவில் கண்டார். கனவு கலைந்து மன்னர் கண்விழித்தார். அந்த அழகிய வடிவம் தன்னருகில் இல்லாதிருந்ததை அறிந்து அதிர்ந்தார். தான் கண்டது ஒரு கனவு என்பதை அறிந்து மனம் வாடினார். அந்தஅழகிய பாவையைத் தன் மணவாட்டியாக அடைந்திட உறுதி பூண்டார். அவளைத் தேடி, நாட்டினை நல்லமைச்சர் வசம் ஒப்புவித்துக் கானகம் சென்றார்.

அதே சமயத்தில் சுந்தர மாநகரைச் சார்ந்த ரங்குராயரின் மகளான சந்திர பதனாளும் தனது தோழியருடனும், தாதிமார்கள் கவரி வீச, படைகள் சூழ்ந்திட கானகத்தைச் சுற்றிப் பார்க்கவும், பொழுதினை இனிது கழிக்கவும் வந்தாள்.

அவளுடைய வடிவழகினையே தனது மனத்தில் பதித்து அவளை அடைய எண்ணி கானகம் வந்த முகையாரும், சந்திர பதனும் எதிர்ப்பட்டுச் சந்தித்துக் கொண்டனர். முகையாருக்கு அளவிலா ஆனந்தம்.

"உயிர் காக்கும் மருந்து தெருவில் கிடைத்தாற் போல"மனமகிழ்வு கொண்டார்.

சந்திர பதன் தன் பெண்மை நிலையை மீறாமல், அவருடைய அழகினை ரசித்தாலும் பெண்களுக்கே உரியதான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் குணங்கள் அணையிட ஒதுங்கியே நின்றாள்.

முகையார் தன் திருவாய் மலர்ந்து, கத்திரி மாநாட்டை ஆளும்

அவளையே மணமுடிக்க உறுதி பூண்டுள்ளதையும் அவளைத் தேடியே கானகம் வந்ததையும் தெளிவாகக் கூறினார்.

முதலில் இதை அறிந்த சந்திர பதனாளின் மனம் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தது. ஆயினும், உலகப் பார்வையில் தன்பெயருக்குக் களங்கம் உண்டாகக் கூடாது என்ற நோக்கில், மறுப்பு மொழியாக அவர் காதலை ஏற்றுக் கொள்ளாதது போலப் பேசினாள்.

“பூரண சந்திரனின் ஒளியின் முன்னே புகையினைக் கக்கும் சிறு தீபச் சுடர் எதிர்த்து நிற்க இயலுமா? இவை இணையாக இருக்க முடியுமா?” என மறுத்து உரைத்தாள்.

இம்மொழியினைக் கேட்ட முகையாரின் மனம் கண்ணாடிக் கோட்டை என நொறுங்கியது. அளவிலாத் துன்பமடைந்தார். தன் நிலை மறந்தார். இத்தரணியில் தஞ்சமின்றித் தவித்தார். துக்கம் நெஞ்சை அடைக்கக் கண்மூடி மயக்கமுற்றுத் தரைதனில் சாய்ந்தார். இதைக் கண்டு தன் உள்மனம் பதறினாலும் சந்திரபதன் தன் தோழியர் மற்றும் தாதிமார்களுடன் தனது மாடத்திற்குத் திரும்பிவிட்டாள்.

இந்நேரத்தில், காட்டில் வாழும் விலங்குகளை வேட்டையாட எண்ணி தன் வீரர் படை சூழ , ஆயுதங்களுடன், சிங்கம், புலி, கரடி போன்ற கொடிய விலங்குகள் வாழும் கானகத்திற்கு “மகாபுரி” எனும் நாட்டை ஆளும் “சுலுத்தான்” எனும் அரசன் வந்தான். வந்த இடத்தில் சிறப்பும் பெருமையும் வாய்ந்த தனது நண்பனான முகையார் சீர் குலைந்து வீழ்ந்திருந்ததைக் கண்டான். உள்ளம் பதைபதைத்தான். உடனே அவரருகினில் சென்று மயக்கம் தெளிவித்தான். நடந்தவை என்ன என்பதை முகையாரிடம் வினவ, நடந்ததையும், வஞ்சி ஒருத்தி வஞ்சித்து விட்டதையும் மனமுருகிக் கூறினார்.

நடந்தவை எல்லாம் வல்லவன் வகுத்த விதிப்பயன் அதை மாற்றிட இயலுமா? என ஆறுதல்மொழி கூறினான் மகாபுரி மன்னன். “இதனைப் பற்றி மேலும் ஆராய்ந்திடுவோம், தற்சமயம் எனது மாளிகைக்கு வாருங்கள்” என அவரை மனமகிழ்வுடன் மகாபுரி அரண்மனைக்கு அழைத்துச் சென்றான் சுலுத்தான்.

அரண்மனையில் மகாபுரி அரசன் தன் மனைவியருள் நால்வரை அணுகி, தம் நண்பனின் நிலையை விளக்கி, "அவருடைய நினைவு திருந்திடவும், அவர் கனவில் கண்ட பெண்ணின் சரியான அடையாளங்களைக் கூறிடவும் செய்திடுக" என்று கூறி, அவர்களை நல் அலங்காரம் செய்து, முகையாரின் பார்வையில் படும்படியாக அனுப்பி வைத்தான்.

எனினும், "சந்திரன் முன் விளக்கின் ஒளி வலிமையானதோ" என உரைத்திட்ட அந்த அரசனின் மகளைத்தவிர வேறு எவரையும் முகையார் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. வந்த நால்வரையும் பதுமையென எண்ணிப் பார்த்தார். இதனைக் கண்டு மனம் வாடிய சுலுத்தானும் குறை நீங்க வேண்டிக் கொண்டான்.

தனது அரசவையைக் கூட்டி தனது மந்திரிகளிடையே இதனைக் கூறி ஆலோசனையும் கேட்டார். மன்னனின் வேண்டுகோளுக்கிணங்க ஒரு மந்திரியும், "அரசே, நான் அறிந்த மட்டும் சுந்தர நகரம் தன்னிலுள்ள சந்திர பதனாளைத் தவிர வேறு எழில் மங்கையர் எங்கும் இல்லை.இவரும் அவளுடைய எழில்கண்டு மயங்கினரோ?" என ஐயம் எழுப்பினான்.

இதனைக் கேட்ட அரசன், "அப்படியானால் ஆன்றோரே சான்றோரே கேட்பீர், ஒருவருடைய ஆசையை மற்றவர் மீது திணிப்பது பாவம் எனத் திருநபி அவர்கள் அறிவித்திருப்பதாலும், மங்கையை மணம் செய்து கொள்ளக் கேட்டால் அளித்திடுதல் நன்மை என்பதாலும், மேற்கூறிய அந்தச் சந்திரபதனாளையே நான் என் நண்பரான முகையாருக்குத் திருமணம் செய்வேன்" என உறுதி பூண்டான்.

உறுதி பூண்ட அரசன் அந்த சுந்தர நகரை வென்றிடவெண்ணி, போரிட முடிவு செய்து கட்டளையிட்டான். இதனைக் கேட்ட அமைச்சர், வீரர்களுக்கு உத்தரவிட்டு மத யானை மீது பறையை ஏற்றி, அதனை அறைந்து போர்ச் செய்தியை அனைவரும் அறிய அறிவித்தனர்.

முரசொலி கேட்டவுடன் படை வீரர்கள் வீரம் கொண்டு சாரை சாரையாக அணிதிரண்டனர். யானை, குதிரை, தேர், சிவிகை எனப் பலவகையான படையினர் திரண்டு வந்து குவிந்தனர்.

படைவீரர்கள் கடுமையான ஆயுதங்களைத் தாங்கி இருந்தனர். பல்வேறு குறுநில மன்னர்களும் உயர்ந்த வீரர்களும் உடன் பவனி வந்தனர். கடல் போன்ற அளவில் வீரர்கள் மலைபோன்ற யானை மீதிலேறி, இடி என முழங்கிக் கொண்டு அணி வகுத்துச் சென்றனர்.

வல்லமை மிகுந்த இப்படையானது , முல்லையின் காட்டுப் பகுதியினையும், நெய்தல் பகுதியையும் நீங்கி, கல்லும் முள்ளும் நிறைந்திருந்த குறிஞ்சி நிலப்பகுதியையும் கடந்து நீண்டு சென்றது.

நாடுபல கடந்து வீறுநடை பயின்று சென்றது. சுந்தரநகர்ப் பகுதியினை அடைந்த படை அதன் வெளி எல்லையில் தனது பாசறைகளை அமைத்தது. படைவீரர்கள் அனைவரும் ஓய்வு எடுத்துக் கொண்டனர். படைத் தலைவர்கள் படையுக்திகளைப் பற்றி ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தனர்.

அரசனும் தனது மந்திரி மார்களை அழைத்து முற்றுகைத் திட்டம் பற்றி ஆலோசனை நடத்தினான். மந்திரி ஒருவன் தந்த ஆலோசனைப்படி மகாபுரி சுலுத்தான் ஓலை அனுப்பிட முடிவு செய்தான். இதன்படி 'சுலுத்தான் எழுதும் வாசக ஓலை' எனத் தொடங்கிடும் ஓலைச் செய்தியைச் சுந்தர நகரில் உள்ள ரங்குராயனுக்கு அனுப்பி வைத்தான்.

அவ்வோலைச் செய்தியில் ரங்குராயனுக்குக் கூறுவதாக, அவன் நற்தவத்தினால் ஈன்று எடுத்த அழகின் முழுவடிவமான அவருடைய மகளை வீரமும், ஈகையும் நிறைந்த முகையாருக்கு யாகமாக அமைதியாக அமைத்திடுக என வேண்டியிருந்தான். சுலுத்தான் ஓலையை மந்திரி ஒருவனிடம் அளித்து, இதற்கான மறுமொழியைக் கேட்டு வந்திடுக என் அனுப்பி வைத்தான்.

ஓலையைக் கொண்டு சென்ற மந்திரி வழியில் பலவிதமான காட்சிகளைக் கண்டான். முதலில் மருதநிலப் பகுதியான வயலும் வயலைச் சார்ந்த பகுதியினை அடைந்தான். அங்கு இருந்த பல்வேறு வகையான நெல் வகைகளையும், அதனைச் சுற்றியமைந்துள்ள பகுதியில் மேய்ந்து கொண்டிருந்த ஆடு, மாடுகளையும் அதனை மேய்த்திடும் ஆயர் மக்களையும் பார்த்துக் கொண்டு, தொடர்ந்தமைந்

திருந்த முல்லைப் பகுதியில் உயர்ந்த மரங்களையும், வண்ண மயில்களையும், வண்டுகளையும் தேன் சிந்தும் மலர்ச் சோலைகளையும், குளிர்ந்த நீரோடைகளையும் ரசித்துக் கொண்டே தாமரை மலர்கள் நிறைந்த தாமரைத் தடாகத்தில் தாமரை மலரணியும் மாதர்கள் குளித்துக் கொண்டும், நீரை எடுத்துக் கொண்டும் செல்வதையும் கண்டான்.

அழகு மிகுந்த மாடங்கள் பலவற்றினைக் கொண்ட புரிசை மாநகரில் வாயிலை அடைந்தான். மன்னனின் மாடங்கள், வீரர்கள் காவல் புரியும் அரண்மனை, மறவர்கள் தங்கியிருக்கும் குடில் என எல்லாம் அழகுறக் காட்சி தந்தன. பெண்கள் தங்களின் கூந்தலுக்கு மணமூட்ட எழுப்பிய அகிற்புகை விண்ணை முட்டியது. அழகுடைய மயில்களைப் போல மாதர்கள் தத்தம் கணவருடன் இன்புற்று இணைந்திருந்தனர். மக்கள் மகிழ்வுடன் வாழ்ந்திருக்க நல்லாட்சி புரிந்து வந்தான் ரங்குராயன்.

சுலுத்தான் அனுப்பிய அமைச்சன் அரண்மனையை அடைந்தான். அரசனுக்குச் சுலுத்தான் அனுப்பி இருந்த ஓலைச் செய்தியைப் பணிவுடன் தந்தான். இச்செய்தியினை நன்கு படித்து நல்லதொரு பதிலைத் தருக என்று பணிவுடன் வேண்டிக் கொண்டான். ஓலையைப் படித்த மன்னன் அதிர்ந்தான். எனினும், “இந்த உலகில் என் மகளைத் தவிரவேறு எதனைக் கேட்டாலும் நான் அளிக்கத் தயாராக உள்ளேன்” எனக் கூறினான்.

“மன்னவரே, பாவை ஒருத்திக்காக இவ்வழகிய நகரை அழிய விடாதே. புகழுடைய குலத்தில் தோன்றிய முகையாருக்கு உன் மகளை அளித்திடுக. இல்லையாயின் இப்புவி அதிரும் படையுடன் அவர் உன் மகளைக் கொண்டு செல்வார்” எனக் கூறினான்.

மன்னன் இதற்கும் மறுப்பு மொழி கூற, பெருமை உடைய அமைச்சன் சுலுத்தானிடம் விரைவில் திரும்பிவந்து நடந்தவற்றைக் கூறினான். படை நடத்தி வந்த சுலுத்தான் போரில் ஏற்படும் பெரும் அழிவுகளை எண்ணியும், மடியும் உயிர்களை எண்ணியும் கவலை கொண்டான்.

மன்னனின் வாட்டம் கண்ட அமைச்சன் ஒருவன், "மன்னவா, தாங்கள் சரி எனக் கட்டளையிட்டால் தாங்கள் சுட்டும் அப்பெண்ணை தங்களின் காலடியில் கொண்டுவந்து சேர்ப்போம் இது உறுதி" எனக் கூற படைவீரர்களும் அங்ஙனமே கூறினர்.

இவ்வாறு இங்கு உரை நிகழ்ந்து கொண்டிருக்கையில், சந்திரபதன் தன் குல தெய்வத்தை வணங்க எண்ணிப் படை சூழ மாடத்தைவிட்டு வெளியே வந்தாள்.

குதிரையில் ஏறிய வீரர்கள் கொடிய ஆயுதங்களுடன் சந்திரபதன் தன்னைக் காத்திட அவளைச் சூழ்ந்துவர, தாதிமார் பலர் கவரிவீசிட, தோழியருடன் பல்லக்கில் வந்தாள் சந்திரபதன். இங்ஙனம் வரும் சந்திர பதன் படை தங்கியுள்ள பகுதிக்கு வந்திட, சந்திரபதனைக் கண்டு அவளை நாடிச் சென்றார் முகையார்.

கதிரைக் கண்ட தாமரை போல மனமகிழ்வு கொண்ட சந்திரபதன் வெளிப்புறத்தில் சீற்றம் காட்டினாள். இரு முறை நேரில் கண்டும் சீற்றம் தவிர வேறேதும் கண்டதில்லை என்றெண்ணி ஐம்புலனின் செயல்களைக் கட்டுப்படுத்திக் கொண்டார் முகையார். நாடி ஒடுங்கச் செய்து, அழகின் முழு உருவம் முகையார் தன் உயிரை நீக்கினார்.

உயிர்விட்ட முகையாரைக் கண்டு ஆகும் என்றால் அச்செயல் ஆகிவிட்டதே, போகும் என்றால் உயிர் போய்விட்டதே இப்புவியை விட்டு சாகு என்றால் சாவினைத் தழுவிவிட்டாரே எனக் கூறினாள் மனத்தில் அவரை விரும்பிய சந்திரபதன். "நான் மட்டும் புவியில் இருக்க மோசம் செய்து விண்ணேகினாயோ" என வாய்விட்டுப் புலம்பிவிடாமல் படை சூழத் தன்மாடம் திரும்பினாள். நடந்த செயலைப் படைவீரர்களால் அறிந்து நகரமக்கள் குழப்பமடைந்தனர்.

முகையார் மரணமடைந்த செய்தி ஒரு வீரன் மூலமாக விரைவாகச் சுலுத்தானையும் அடைந்தது. இதனைக்கேட்ட சுலுத்தான் திடுக்குற்றுக் கலங்கினான். 'உன் ஆசையை நிறை வேற்றிட எண்ணிய என்னை மோசம் செய்தனையே' என மனம் கலங்கிப் புலம்பினான்.

பிறகு அமைச்சர்களால் தேறுதல் பெற்று, அனைவரும் கூடி

முகையாரின் உடலை நீராட்டி, புத்தம் புதிய வெள்ளாடை கொண்டு கபனுமிட்டனர். ஒளிரும் அழகுடைய சந்தக்கு எனும் பெட்டியில் வைத்திட்டனர். அப்பெட்டியினை எடுத்திட முனைய அது ஒரு அடி கூட அகலவில்லை. அனைவரும் திகைப்புற அப்பெட்டி தன்வழியில் ரங்குராயன் நகரினை அடைந்தது.

அந்நகரின் வீதிவழியே சென்று உயர்ந்தோங்கிய சந்திரபதனின் மாடம் முன் அடைந்தது. அவ்வாயிலை அடைத்துக் கொண்டு ஒரு அடி முன்னாலும், பின்னாலும் நகராமல் நின்றது. இப்புதுமையைக் கண்டவர்கள் பதுமைகள் போல் நின்றனர்.

இதனைக் கண்டு யாவரும் வியந்து பெருங் கூட்டமாகிக் கூடி இதனைப் பற்றிப் பேசினர். இந்தப் பேரொலி மன்னன் ரங்குராயன் காதுகளுக்கு எட்டியது. ரங்குராயன் ஓடோடி வந்தான்.

வந்த ரங்குராயனை நோக்கி மகாபுரிமன்னன் சுலுத்தான் மன்னா! உன் மகள் வந்து இப்பெட்டியினுள் உள்ள முகையாரை நோக்கி 'செல்க' என்று சொன்னால் ஒழிய இது நகராது. எனவே, இதற்கான செயலைச் செய்திடுக என வேண்டி நின்றான். 'போ' என்று உரைத்தால் போகுமாயின், அதற்கான செயலினைச் செய்திட உறுதி அளித்து ரங்குராயன் தன் மகளின் மாடத்தினை அடைந்தான்.

அவளிடம் 'மகளே; கண்ணின்மணியே, குலவிளக்கே உனது பவளவாய் திறந்து ஒரு மொழி உரைத்தால் துன்பம் தீருமே' என்று வேண்டினான். நடந்தவை அறிந்து சந்திரபதன் மிகவும் வாடினாள். தன் மனம் அறிந்து செய்த தவற்றை உணர்ந்து அரற்றினாள். தனது தவறினைத் திருத்திக் கொள்ள எண்ணி, நன்கு பொருளுணர்ந்து மறை கூறும் நல்லோரை அழைத்துவரச் சொல்லி, தூய்மை மிக்கதான உன்னத 'கலிமா'வை மனப்பூர்வமாகக் கூறினாள்.

கலிமாக் கூறி தனது மனதில் 'ஈமான்' ஏற்றுக்கொண்டாள். உன்னதமான தூய்மை மிகுந்த உயரிய மார்க்கமான இசுலாத்தைத் தன் மார்க்கமாக ஏற்றுக் கொண்டு மகிழ்ந்தாள். வல்லநாயனின் உண்மைத் தூதராகிய அவர் காட்டிய வழிமுறையையும் வாழ்க்கையில் பின்பற்ற உறுதி பூண்டாள்.

தன் நினைவால் இன்னுயிரையும் அளித்த முகையாரின் மேன்மையை எண்ணி எண்ணி வியந்தாள். அவருடைய தூய காதலை உணர்ந்து அவருடனேயே இணைந்திட எண்ணி, தூய கபனை அணிந்து, மனமகிழ்வுடன் தனது உயிரை உடலை விட்டு அகற்றி, மரணத்தைத் தழுவினாள்.

மரணத்துக்கு முன் அவள் உரைத்த மொழியினைக் கேட்டு, முகையார் மரணமடைந்திருந்த பெட்டியானது அழகுற நகர்ந்து சென்றது. வீரர்கள் அதனைச் சுமந்து சென்று பொளிர் காட்டினை அடைந்தனர். அங்கு அப்பெட்டியினைக் கீழே வைத்துவிட்டு சுலுத்தானும் மற்ற வேந்தர்களும் அமைச்சர்களும் படை வீரர்களுமாய்ச் சேர்ந்து இசுலாமியரின் முறைப்படி 'ஜானஸா' எனும் தொழுகையினை முறைப்படி தொழுதனர்.

பிறகு இறைவனை வாழ்த்தி குழி ஒன்றினை வகுத்தனர். முகையார் இறந்து இருந்த அந்தப் பெட்டியினைத் திறந்தனர். அதனுள் முகையார் மற்றும் சந்திரபதன் ஆகிய இருவர் உடலும் ஒரு கபனுள் புகுந்திருந்ததைக் கண்டு அனைவரும் வியந்தனர்.

"அந்த வல்லநாயகனே அனைவரின் மனதிலும் அமைந்திருக்கும் நன்மை, தீமை, ஆசை, வெறுப்பு, உடன்பாடு, மறுப்பு இதனை எல்லாம் வகுத்திட வல்லவன்" என்று மகாபுரி சுலுத்தான் வல்ல நாயனைப் புகழ்ந்துரைத்தான்.

நடந்த இவைகளை அறியாத ரங்குராயன் தனது மகளைப் பார்த்திட, அவளுடைய மாடத்தைச் சென்றடைந்தான். நடந்தவை அறிந்து மனம் கலங்கினான். என்னாளும் காணாத துயரை அடைந்து மனம் கலங்கிப் புலம்பினான். 'என் சீவனாகவும் கண்ணாகவும், கண்ணின் மணியாகவும் இருந்தாய், உனக்கு உன் விருப்பம்போலத் திருமணம் செய்திடாமல் செய்த என் தவறுக்குக் கிடைத்த பரிசு தான் இது எனத் தன் நிலைமறந்து புலம்பித் தீர்த்தான். இனி அவளுடைய நல்வடிவைத் தான் காணமுடியாது என்றறிந்த ரங்குராயன், உள்ளம் துடித்து, தன் உயிரை நீத்தான்.

மன்னனின் மறைவினை அறிந்து சுலுத்தான் மிகவும் கவலை

கொண்டார். அந்நாட்டின் நல் அமைச்சர்களை ஆட்சி முறையைக் கவனித்துக் கொள்ள ஏற்பாடுகளைச் செய்துவிட்டு தன் படைகளுடனும், மந்திரிமார்களுடனும் தாயகம் திரும்பி நல்லாட்சி புரிந்து வந்தான்.

## சுவடி தரும் சில சுவையான செய்திகள்

### 1) நூலின் பெயர்

இச்சுவடியின் தலைப்பு தொடர்பான செய்திகள் கீழ்க்கண்ட பாடலில் உள்ளன.

*"ஆதிதன் னருளைத் தாங்கி*
*அகிலமீ திருந்து வாழும்*
*தீதரு பாவை யேயத்*
*தீனவர் தன்னை வாழ்த்தி*
*முதுரை பெரியோர் சொல்லி*
*முறையுறை தன்னைத் தேர்ந்து*
*கோதரு மாது சந்திர*
*பதன்கதை கூற லுற்றேன்."*

(சந்திர பதன் கதை – பாடல் 11)

### இதன் பொருள்

யாவற்றினுக்கும் ஆதியாக விளங்குகின்ற வல்லநாயனின் அருளைத் தாங்கியே, இவ்வுலகம் முழுவதும் பரவி இருந்து வாழும் மக்களுள் மங்கையின் நிலையை விளக்கி தீனவர் எனும் உயரிய மார்க்கத்தினரை வாழ்த்தி, பல அரிய, உயரிய, முழுமையான நல்ல உரைகளைப் பெரியவர்கள் பலர் கூற, அவைகளுள் முதன்மை யானவற்றைத் தேர்ந்தெடுத்து அதில் வரும் 'சந்திரபதன்' என்ற பெண்ணின் கதையைக் கூறுகின்றேன் என்பதாகும்.

**விளக்கம்**

இறைவனின் அருளைக் கேட்பதால் இந்நூல் புனிதத் தன்மை மிகுந்து மாதர்களைப் பற்றிய செய்தியை தீனவர் எனப்படும் உயரிய மார்க்கத்தினர் (இஸ்லாமியர்) உணர, அவர்களை வாழ்த்தி புலமையும், முதுமையும் உடைய பெரியவர் சொல்லிய பல கதைகளை ஆராய்ந்து அதனுள் சந்திரபதன் கதையைக் கூறுவதாக அமைந்துள்ளமையால் இந்நூலுக்கு 'சந்திர பதன் கதை' என்பது பொருந்தும்.

**நூலாசிரியர் பற்றிய செய்தி**

இனி இந்நூலைப் படைத்திட்ட நூலாசிரியரைப் பற்றிய குறிப்பைப் பாடல் எண் 14–ல் காணலாம்.

**பாடற் பொருள்**

இவ்வுலகில் உள்ள யாவரும் மகிழ்ந்திருக்க, தீனவர் எனும் உயர் மார்க்கத்தினர் யாவரும் உயர்வுகாணவே, பொன் விளையும் பகுதியாகவும், பொலிவுநிறைந்த சுற்றத்தார் சூழ்ந்திருக்க 'அரசூர்' என்ற ஊரில் புகழ் பெற்று மன்னனின் பேராதரவுடன் வாழ்ந்து வந்த அப்துல் காதர் என்பவர் பெற்ற மைந்தனான மகம்மதுசைன் என்பவர் அழகிய தமிழால் கவிகளாக இந்தக் கதையை கூறுகின்றேன்' என்பதாகும்.

**விளக்கம்**

இப்பாடலின் மூலம் இக்கதைப்பாடலை இயற்றியவர் முகம்மத் உசைன் என்ற இஸ்லாமியத் தமிழ்ப் புலவர் என அறிகின்றோம். இவருடைய தந்தையாரின் பெயர் அப்துல் காதர் என்பதாகும். இவருடைய சொந்த ஊர் 'அரசூர்' என்பதையும் அறிகின்றோம். மன்னன் சம்பாயி இவருக்குப் பெரும் ஆதரவு அளித்ததும் இதன் மூலம் தெரியவரும் அரிய உண்மைகளாகும்.

## கேட்டு ஆதரித்தவர்

புலவர்களை ஆதரித்துத் தமிழை வளர்த்தனர் அக்காலத் தமிழ்ப் பெரு மக்கள். அவ்வகையில் சந்திர பதன் முகமது உசைன் அவர்களை ஆதரித்தவரைப் பற்றிய பாடலையும் எண் 12-ல் காணலாம்.

## பாடற் பொருள்

'இத்தகைய கதையைப் பாடச் சொல்லி, தமது இருதயத்தில் மகிழ்ச்சி கொண்டு மனமுவந்து செவி மடுத்து தேவையான பொருளும், ஆடை அணிகளும், முத்து மணிகளும் மன மகிழ்ச்சியுடன் வாரி இறைத்து, உலகின் எட்டுத் திசையிலும் புகழ் பெற்றுச் செழுமை வாய்ந்தவர் 'மகமது மீரான்' என்பவர் ஆவார். அவருடைய வம்சத்தினர் அழகான இவ்வுலகில் என்றென்றும் வளமுடன் நீண்டு வாழ்வாராக என்பதாகும்.

## விளக்கம்

இதன் மூலம் புலவர் முகமது உசைனாரை ஆதரித்த வள்ளலின் பெயர் 'முகம்மத் மீரான்' என்பது புலப்படும். புலவருக்குத் தேவையான பொருள், ஆடை, அணி, மணி இவைகளை அள்ளி வழங்கி ஆதரவு தந்த நிலையை உணர முடிகின்றது.

## அவையடக்கம்

அவையடக்கத்தை இலக்கிய மரபாகத் தமிழர் கைக் கொண்டிருந்தனர். இம் முறையைப் பின்பற்றி இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்களும் பாடல்களை அமைத்தனர். சந்திர பதன் கதையைப் பாடிய முகம்மத் உசைன் புலவரும் அவையடக்கப் பாடலாக பாடல் 13-ஐ அமைந்துள்ளார்.

## பாடற் பொருள்

தரையும் அதிரும் வண்ணம் பாய்ந்தோடும் வரிகளையுடைய புலியுடன் புள்ளிமான் துள்ளுதல் போலும், பெரும் ஓசையுடன் இடிக்கும் இடி முழக்கத்துடன் எதிர்த்து, மண்பாண்டம் செய்திடும் குயவன் இரைத்தல் போலும், படபடத்து உயரப் பறக்கும் கருடன் முன்னால் தும்பி பறந்து எதிர்த்தல் போலும், அருந்தமிழ்க் கவி வாணர்களின் முன்பாக தாம் இந்த நூலை படைத்ததாகக் கூறுகின்றார்.

## அவையடக்கப்பாடல் – புலவரின் வேண்டுதல்

நல்லிலக்கண நன்னூலும், சின்னூலும், காரிகையுடனும், தொன்மை சார்ந்த தொன்னூலுடன், பாட்டியல் நூலை அறிந்திருந்த கவிவாணர் முன்னால் பயந்து ஒதுங்கி நின்று கேட்டும், அப்பொருளை அறிய முடியாமல் இருந்தேன். இருந்தும் இந்நூலைப் படைத்திட முயன்றுள்ளேன். இதில் உள்ள குறை நிறைகளைக் கூட்டிக் கழித்துத் தீர்த்துக் கொள்வீர் என்ற பொருளில், பாடல் 15 அமைந்துள்ளது.

## அரங்கேற்ற நாள்

நூலின் அரங்கேற்றம் பற்றியும் படைப்பாளன் தனது நூலில் சுட்டுவது மரபு. அம்முறையில், பாடல் 16 அமைந்துள்ளது.

## பாடற் பொருள்

முஹம்மத் நபி (ஸல்) ‘ஹிஜிரத்’ தாகி ஆயிரத்திரு நூறு ஆண்டுகளுடன் இருபத்தாண்டுகளுடன் வருகின்ற ‘அஷேஷயா” வருஷத்தின் முன்னால் வருகின்ற குரோதனா வருஷத்தில் தை மாதத்தில் இந்நூல் அரங்கேற்றம் செய்யப்பட்டது என்பதாகும்.

## விளக்கம்

இப்பாடலின் மூலமாக இந்நூல் தமிழர் ஆண்டின்படி அஷேஷயா வருஷத்தின் முன்பாக வருகின்ற குரோ்தன வருஷத்தில், தமிழரின் பஞ்சாங்கக் கணக்குப்படி தமிழ் ஆண்டுகள் சூரிய கணக்கின்படி

அறுபது ஆண்டுகள் என்பது நம்பிக்கை. அவ்வகையில், மேற்கூறிய 'அஷேய' வருஷத்தின் முன்னால் வரிசைப்படி வருவது 'குரோதனா' என்ற தமிழ் ஆண்டாகும். இவ்வாண்டில் தமிழ் மாதங்கள் பன்னிரண்டில் ஒன்றான தை மாதத்தில் அரங்கேற்றம் செய்யப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

'ஹிஜிரி' என்பது இஸ்லாமியர்களின் ஆண்டுக் கணக்கீடாகும். இஸ்லாமியர்களின் ஆண்டு 'ஹிஜிரத்' என்ற நிகழ்ச்சியிலிருந்து தொடங்குகின்றது. முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் நன்மையை ஏற்றிவைக்க மக்காமாநகரை விட்டு மதினாவிற்குச் சென்றார். இது நடைபெற்றது கி.பி. ஆறாம் நூற்றாண்டில். எனவே, ஆங்கில ஆண்டுகளுக்கும் இஸ்லாமியரின் ஆண்டுகளுக்கும் 600 ஆண்டு வேறுபாடு அமையக் காணலாம்.

## நன்றி கூறிடும் புலவர் முகம்மத் உசைன்

இலக்கியம் படைத்திடும் புலவர்களை, தமிழ் வளர்க்கும் மறவர்களை ஆதரித்துக் காப்பதில் சிறந்து விளங்கியவர் பண்டைத் தமிழர்கள். தங்கள் செல்வ வளமை யாவற்றையும், புலவர்களின் புலமைக்கு அர்ப்பணித்தனர். அவ்வகையில், தம்மை ஆதரிக்கும் புலவர்களை, வள்ளல்களை வாழ்த்தி பாடல்களைப் புனைவதும் புலவர்கள் கையாண்ட இலக்கிய மரபாக இருந்து வந்தது. மேலும், அவர்களை வாழ்த்திட இலக்கியத்தில் இடை இடையே ஒப்பிட்டு, வாழ்த்தியும் பாடல்களை அமைப்பர். இம்மரபினை ஒட்டியே புலவர் உசைனும்,

*"இக்கதை பாடச் சொல்லி*
*இருதயம் மகிழ்ந்து கேட்டு*
*தக்கதோர் பொருளு மாடை*
*மணிகளு மகிழத்தன் தோன்றி*
*திக்கெலாங் கீர்த்தி யெங்குஞ்*
*செழுமக மதுமீ ராதன்*
*மிக்கதோர் கிளைய தெல்லாம்*
*எழிலுடன் வாழ்வர் தாமே." - (பாடல்.12)*

என்றும்,

"பெரும்புகழ் பீர்மு கம்மத்
பேணிய தவத்தி னாலே
வருமகம் மதுமீ ராபொன்
வாணருக் களிப்ப தேபோல்
பொருளெளி யோர்கட் கீந்து" - (பாடல்90)

என்றும்,

"தத்துபறி நடனமிடு மகம்மதுமீ
ராகுலங்கள் தழைத்த வாறாய்" - (பாடல்.124)

என்றும்,

"வெற்றி வளராசை பெருங்கதை பாடப்
பொருளாடை மிகுதியாய் தந்தான்
அத்தி நகர்தனில் வாழும் பீரு முகம்மது
வரத்தா லருமைப் பாலன்
உத்த மகம்மது மீரா உலகில்
பெருங்கீர்த்தி யுடனுகந்து வாழ்ந்து
புத்திர ரருமிகுத் தோங்கி என்னாளு
மகிழ்ச்சி பெறுவார் தாமே" - (பாடல்.194)

என்றும் பல இடங்களில் பீர்முகம்மது பெற்ற மைந்தன் முகம்மது மீரான் என்ற வள்ளலைப் புகழ்ந்து நன்றி கூறுவதைக் காணலாம்.

# சந்திர பதன்கதையில்
# தமிழ் இலக்கிய மரபு

## கடவுள் வாழ்த்து

நூலுக்குத் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்து அமைப்பது மரபு. இம்மரபு தண்டியலங்காரம் என்ற இலக்கணநூலில் சுட்டப்பட்டுள்ளது. எனவே, தண்டியலங்காரக் காலமான 12ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலகட்டத்தில் இவ்வழக்கம் வேரூன்றியிருந்தது புலப்படும். தமிழ் இலக்கியங்களில் இம் மரபினைக் காணலாம். ஆனால், சங்கம் மருவிய காலகட்டத்தில் தோன்றியது என்ற வரையறையுடைய சிலப்பதிகாரம் போன்ற சில இலக்கியங்கள் இறை வணக்கம் இன்றித் தொடங்கி இருப்பதையும் காணலாம்.

"நூலுக்கு வெளியே கடவுள் வாழ்த்து, அவையடக்கம் ஆகிய பிற்கால மரபுகள் சிலம்பில் காணப்படவில்லை" (59) என்ற கூற்று இதனை உறுதிபடுத்தும்.

## சில சான்றுகள்

இனி இறைவணக்கத்தை நூலுக்கு முதலாக அமைத்துக் கொண்ட சில இலக்கியங்களைக் காணலாம். கவிச் சக்கரவர்த்தி என்ற அடையுடன் அழைக்கப்படும் கம்பன் தனது காப்பியத்தில், மூன்று விருத்தங்களில் கடவுள் வணக்கத்தை அமைத்துள்ளார். (கம்பராமாயணம் பக். – 3).

வில்லிபுத்தூராழ்வார் அருளிச் செய்த வில்லிபாரத்திலும் 'தற்சிறப்புப் பாயிரம்' என்ற பகுதியில் வில்லிபுத்தூரார் கடவுள் வாழ்த்து, அறம் போற்றல், அவையடக்கம் ஆகிய பல செய்திகளைத் தந்துள்ளார். (வில்லிபாரதம் பக்.17, 18).

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான வளையாபதியிலும், குண்டலகேசியிலும் கடவுள் வாழ்த்து அமைந்துள்ளது. (வளையாபதி, குண்டலகேசி பக்.1, பக்–95) திருத்தக்கத் தேவர் இயற்றிய

சீவக சிந்தாமணி தொடக்கத்திலும், இறைவாழ்த்துப் பாக்கள் அமைந்துள்ளன. (சீவக சிந்தாமணி – நச்சினார்க்கினியருரை பக். 1–6)

## சந்திர பதன் கதையில் கடவுள் வாழ்த்து

பதிப்பிக்கப்பட்டுள்ள சந்திரபதன் கதையிலும் பழந்தமிழரின் மரபினைச் சார்ந்து கடவுள் வாழ்த்து அமைக்கப்பட்டுள்ளது. (பாடல் 1,2,3,)

## காப்புப் பாடல்

இறைவாழ்த்து அல்லது கடவுள் வணக்கம் என்று பாடல்களுக்கு முன்னால் நூலாசிரியர் இறைவனிடம் தாம் இவ்வகையான நூல் படைத்திட உள்ளேன். இப்படைப்பு சிறப்புற அருள் புரியுமாறு வேண்டியும், இச்செயல் நன்கு நடைபெற தீமையினின்று காத்தருள்க என்று வேண்டியும் காப்புப் பாடலை இயற்றுவது தமிழ் மரபு.

இதற்கான சிலசான்றுகளைக் காணலாம்.

## ஆயிர மசலா

ஆயிர மசலா எனும் இஸ்லாமிய இலக்கியத்தில்,

*சீர்கொண்டே மனுவை அமைத்து அதற்குரிய*
*படைப்பையெல்லாம் சிறப்போ(டு) உய்யக்*
*கார்கொண்டே பதம்விளைந்து நன்மைதின்மைக்*
*கவம்வகுத்துக் கருத்துஉண் டாக்கி*
*நேர்கொண் டோர்க்கு ஆடகப்பொற் பதியும்,*
*அல்லார்க்கு அழற்பதியும் நிறுத்தி மிக்க*
*பார்கொண்ட பசுபாசம் தனில்வணக்கம்*
*தெரிந்தோனைப் பணிகு வாமே" (8)*

என்ற பாடலைச் சான்று காட்டலாம். விறலி விடு தூது, (பாடல் எண் 9), இயேசு பிரான் பிள்ளைத் தமிழ் (பாடல் எண் 10) என்பனவற்றுள் உள்ள காப்புப் பாடல்களையும் காட்டலாம்.

## சந்திர பதன் கதையில் காப்புப் பாடல்

இவ்வழியில், தமிழ்மரபைப் பின்பற்றி சந்திரபதன் கதையிலும்,

*"பார்புக ழிரசூல் வேதம்*
*பகர்திரு முகையார் மன்னன்*
*கார்குழல் மடவாள் சந்திர*
*பதன்தனைக் கனவி லுற்று*
*பேர்பெற ஆஷாக் கான*
*பெருங்கதை தன்னைப் பாட*
*வாரிசூ ழுலகம் போற்ற*
*வல்லவன் காப்ப தாமே.*

(சந்திர பதன் கதை காப்பு பாடல்)

என்ற காப்பு பாடல் அமைந்துள்ளதைக் காணலாம்.

இந்நூலில் தமிழ் மரபினைப் பின்பற்றியே அவையடக்கப் பாடல்களும் (13, 15) அமைந்துள்ளன.

## நாட்டு வருணனை:-

காவிய மரபு காட்டும் தண்டி ஆசிரியர் நாடு, நகரம் போன்றவற்றை வருணித்துக் கூறுவது மரபு எனக் கூறுவார். அவ்வழியில் சந்திர பதன் கதையிலும் நாட்டு வருணனை அமைந்துள்ளது.

சந்திர பதன் கதையின் நிகழ்களங்களாக,

1) கத்திரி மாநாடு

2) மகாபுரி

3) புரிசை மாநாடு

என்ற பகுதிகள் வருகின்றன. இதன் ஆசிரியர் முதலில் அமைந்துள்ள கதைத் தலைவனின் நாடான கத்திரி மாநாட்டின் நாட்டு வளத்தைக் கூறுகின்றார். (பாடல் எண் 17–23)

### சந்திர பதன் கதையில் நகர வருணனை

நகரின் தன்மைகளை விளக்கி வருணித்துக் கூறும் தமிழ் இலக்கிய மரபினை ஒட்டியே சந்திர பதன் கதையிலும், (பாடல் 24–29) கத்திரி மாநகர வருணணை அமைந்துள்ளது.

## இஸ்லாமிய இலக்கிய மரபுகள்

### இஸ்லாமிய இலக்கியங்களில் காப்பு பாடல்

ஓர் நூலினைப் படைக்கும் படைப்பாளன் தான் செய்திட இருக்கும் செயலினைச் சுட்டியும், அதன் இயல்பு நிலையினை வருணித்தும், எவ்வித இடர்ப்பாடுமின்றி அச்செயல் முழுமையாக நிறைவேறிட, தன் மனதில் இறைவனை வேண்டிப்பாடல்களைப் படைப்பது மரபாகும். இம்மரபினைச் சார்ந்து இஸ்லாமியத் தமிழிலக்கியப் புலவர்களும் தாங்கள் படைத்திட்ட பெரும்பாலான படைப்புகளிலும் இறைவனிடம் தங்களின் செயலினை இடையூறு இன்றிக் காத்தருள வேண்டிக் காப்புப் பாக்களை படைத்துள்ளதைக் காணலாம். இஸ்லாமிய இலக்கிய மரபுகளில் இக்காப்புப் பாடலைப் படைப்பதும் ஒரு மரபாகப் பின்பற்றப் பட்டுள்ளது. இதற்கான சில சான்றுகளைக் காணலாம்.

வண்ணக்கணஞ்சியப் புலவர் இயற்றிய ‘குத்பு நாயகம்’ என்ற ‘முகியித்தீன் புராணம்’ என்னும் நூலில் இரண்டு நேரிசை வெண்பாக்களில் காப்புப் பாடல்கள் அமைந்துள்ளன.

ஆலிம்புலவரால் இயற்றப்பட்டது மிகுறாசு மாலை. இது நபிகள் நாயகம் ‘மெஹ்ராஜ்’ என்ற பயணம் மேற்கொண்டதை விளக்குவது.

இந்நூலில், விருத்தப் பாவில் அமைந்த காப்புப் பாடல்களையும்,

காயற்பட்டணம் பெரிய நூகு லெப்பை ஆலிம் சாகிபு அவர்கள் இயற்றிய வேதபுராணம் என்ற நூலில்,

*"ஆதியே யுன்சுருதி யாயத் தினிற்சிலதை*
*யோதலா லந்நாம முட்கொண்டே - வேத*
*புராணமெனப் பேர்கொடுத்துப் போற்றுங் கவிதைகளைத்*
*திராணியுற வேயருணீ செய்"* (60)

என்ற வெண்பாவில் அமைந்த காப்புப் பாடலையும்.

உமறுப்புலவர் இயற்றிய சீறாப்புராணத்தில்,

*"திருவுருவா யுணருருவா யறிவினொரு*
*தெளிவிடத்துஞ் சிந்தி யாத*
*அருவுருவா யுருவுருவா யகம்புறமுந்*
*தன்னியலா வடங்கா வின்பத்*
*தொருவுருவா யின்மையினி லுண்மையினைத்*
*தோற்றிவிக்கு மொளிவா வாயு*
*மருவுருவாய் வளர்க்காவன் முதலவனைப்*
*பணிந்துள்ளி வாழ்த்து வாமே"* (61)

என அறுசீர் கழிநெடிலடியாசிரிய விருத்தத்திலமைந்த காப்பு பாடலையும் சான்றாகக் காட்டலாம்.

## இறைவணக்கப் பாடல்கள்

உலகில் பல நதிகள் உள்ளன. அவை யாவையும் பலப்பல திசைகளில் திரிந்தோடி இறுதியாக மாபெரும் கடலிலேயே சங்கமமாகின்றன. இந்நதிகள் செல்லும் பகுதி யாவும் வளமைபெற்றிலங்கும் என்பது உண்மை. இந்நதிகளுக்குப் பல பெயர்கள் இருக்கலாம். இவை ஓடும் நாடுகள் வேறுவேறாக இருப்பினும் அனைத்து நதிகளும் நீரைக் கொண்டவை தான். அனைத்திலும்

அமைந்துள்ள 'தன்மை' ஒன்றுதான். இந்நிலையே இறைவனுக்கும் உள்ளதாகும்.

எந்த ஒரு இலக்கியத்தைப் படைத்திடும் படைப்பாளனும் தான் படைத்திட இருக்கும் படைப்பின் முதல்நிலையில் இறைவனைத் துதித்தும், வாழ்த்தியும் பாக்களை அமைத்திடுவர். இந்நிலையிலிருந்து இஸ்லாமியத் தமிழ்ப்புலவர்களும் விதிவிலக்காக அமையவில்லை. அவர்களும் இறைவணக்கப் பகுதிகளைத் தங்களின் படைப்புக்களின் முன்பு அமைத்துள்ளனர்.

இலக்கியத்தைப் படைத்திடும் படைப்பாளன் தான் ஏற்றுக் கொண்ட சமயக் கடவுளை வாழ்த்திப் பாடல்கள் புனைவது இயல்பு. இஸ்லாமியக் கொள்கையின்படி "வல்ல இறைவன் ஒருவனே" என்பது இன்றிமையாததாகக் கருதப்படுகின்றது.

இதனை இஸ்லாமியர்களின் புனித வேதமான அல்குர்ஆனில் "அல்லாஹ்வுடன் வேறு நாயனை நீர் (இணை) ஆக்கக் கூடாது. அவ்வாறாக்கினால் பழிக்கப்பட்டவராக, உதவியற்றவராக நீர் அமைந்து விடுவீர். (62) (சூறா 17, 22) என்ற ஆயத்தும்,

"... எவர் தனது நப்பின் சந்திரப்பை ஆதரவு வைத்துக் கொண்டிருக்கிறாரோ, அவர் (சன்மார்க்கத்துக்கு) இணக்கமான கிரியையைச் செய்ய வேண்டும். இன்றும் தனது நப்புக்கு ஒருவரையும் அவர் இணையாக்க வேண்டாம்." (63) (சூறா. 18,110) என்ற கூற்றும்,

"உங்களது தெய்வம் ஒரே ஒரு தெய்வம் தான் ... " 64 (சூறா – 16,22)

'லாயிலாஹ யில்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலில்லாஹி' என்ற 'கலிமா' எனும் மூலமந்திரம், வணக்கத்துக்குரிய இறைவன் வல்லநாயன் அல்லாவைத் தவிர வேறில்லை, முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இறைத்தூதுவராக இருக்கின்றார் என்ற இக் கருத்துக்களின்படி இஸ்லாமியத் தமிழ் புலவர்களின் மார்க்க இறைவன் ஒருவனாகவே அமைவதைக் காண்கிறோம்.

இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்களுக்கு தங்கள் படைப்புக்களின் இறை வணக்கத்தில் இறைவனை வாழ்த்துவது மற்றொரு சிக்கலாக அமைந்தது. இஸ்லாமிய மார்க்க சட்டம் (ஹரியத்) இறைவனை உருவகிப்பதை அனுமதிப்பதில்லை. இந்நிலையில் இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் இறைவாழ்த்துப் பாடல்களில் தங்களது கற்பனையில் வரும் செய்திகளை இறைவனின் வடிவங்களில் உருவகிக்க இயலாமல் இருக்கும் நிலை அமைந்தது. இச்சிக்கல்களில் இருந்து விடுபட இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் இறைவனின் தன்மைகளைக் கூறுவதாக அமைந்து, "அஸ்னாஷல்" "உஸ்னா" எனும் இறைப்பெயர்களையும் அதன் விளக்க நிலைகளையும் தங்களின் இறைவணக்கப் பகுதிகளில் அமைத்துப் பாடினர். இதற்கான சில சான்றுகளாக,

கீழக்கரையைச் சேர்ந்த செய்கு முதலி இஸ்ஹாக்கு என்ற வண்ணப் பரிமளப் புலவரின் ஆயிர மசலாவில்

*"வெல்லுசிந்தைகொடு நாவில்உந்துகலி*
*மாவைநாள்தொறும் விளங்கவே (று)*
*அல்லால்அன்றிஉன தேவல்செய்ய எனது*
*அளவுநீ கிருபை அருள்வாய்"*

என்றும்,

*கரிமு கற்கு நாயன்நீ,*
*கதிர வற்கு நாயன்நீ,*
*பிரம னுக்கு நாயன்நீ,*
*பிழைபொ றுக்கும் நாயன்நீ,*

என்றும் உள்ள பாடல்களையும்,

வண்ணக் களஞ்சியப் புலவர் இயற்றிய இராஜ நாயகத்தில்

*"புவிமுழு தமைந்துமுத் தொழில்பு ரிந்துவாழ்*
*கவினுறு மளவிலாக் கருணை வள்ளலைக்*
*குவியிரு வினையெனுங் கோதி லார்மனத்*
*தவிசில்வீற் றிருக்குஞ்சந் ததனைப் போற்றுவாம்"*

என்றமையும் பாடலையும் சீறாபுராணத்தில்,

*"வடிவுளத் தனது பேரொளி வதனால்*
*வகுத்துவெவ் வேறென வமைத்தே*
*உடலினுக் குயிரா யுயிரினுக் குடலா*
*யுனறந்தமெய்ப் பொருளினைப் புகல்வாம்." (65)*

என்றும் உள்ள வாழ்த்துப் பாக்களைச் சான்று காட்டலாம்.

## இறைத்தூதுவர் வாழ்த்து

இறைவனை, வல்லநாயனை, அல்லாஹ்வை, 'அஸ்னாஹுல் உஸ்னா' எனும் தன்மைச் சுட்டுகளால் விளித்துப் புகழ்ந்து பாக்களைப் புனைந்த பகுதியைத் தொடர்ந்து, இவ்வுலக மக்களின் வாழ்க்கை நெறிமுறையை நல் வழிப்படுத்த பல தூதுவர்களை அனுப்பியுள்ளார் இறைவன் என்ற மார்க்கக் கொள்கையின்படியும், அத்தூதுவர்களில் இறுதித் தூதுவராக "நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்)" அவர்கள் அனுப்பிவைக்கப்பட்டார் என்ற கொள்கையை வலியுறுத்தியும், எம்பெருமனார் நபிகள் நாயகம் முஹமத் (ஸல்) அவர்களைப் புகழ்ந்து பாக்களை அமைத்துள்ளனர் இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள்.

"முஹம்மத் என்ற அரபுச் சொல்லுக்கு உண்மையாளர் என்பது பொருள். இதனை நபிகள் நாயகத்திற்குச் சூட்டியபின், அவரே இவ்வுலக மக்கள் அனைவரும் ஈடேற்றம் காண வந்த உண்மை நபி என்ற பொருள் கொண்டு, அவருடைய சந்ததியினர் மீது சாந்தியும், அமைதியும் உண்டாகட்டும் என்ற பொருளில் "ஸல்லல்லாஹீ அலைஹி வஸல்லம்" என்ற அரபுத் தொடரைக் கூறுவது மரபு. இதன் குறியீட்டுச் சொல்லாக (ஸல்) என்று எழுதுவது மரபு)

"மேலும், அகிலத்தாருக்குக் கிருபையாக அல்லாமல், உம்மை நாம் அனுப்பவில்லை" (11) (சூறா – 21,107)

என்ற திருமறையின் வாக்கு முஹம்மத்(ஸல்) அவர்களின் தன்மையை விளக்க வல்லது. இதனைக் கருத்தில் கொண்டே இஸ்லாமியத் தமிழ்ப்புலவர்கள் தங்களின் படைப்புக்களில் வாழ்த்துக்களை அமைத்தனர்.

## நபிநாதர்களுக்கும், முறுசலீன்களுக்கும் வாழ்த்து

வல்ல நாயன் தனது திருமறையில், "இன்னும், நற்செய்தி சொல்பவர்களாகவும், (அச்சமூட்டி) எச்சரிக்கை செய்பவர்களாகவும் அல்லாமல் முர்ஸர்களை நாம் அனுப்பவில்லை." [66] (சூறா – 18, 56)

"மேலும், ஒவ்வொரு வர்க்கத்தாருக்கும் ஒரு றசூலுண்டு எனவே, அவர்களது றசூல் (அவர்களிடம்) வந்துவிட்டால், அவர்களுக்கிடையில் நீதத்தைக் கொண்டு தீர்ப்புச் செய்யப்படும். இன்னும் அவர்கள் அநியாயம் செய்யப்படமாட்டார்கள்." [67] (சூறா – 10,47)

". . . . நீர் (அச்சுறுத்தி) எச்சரிக்கை செய்பவர்தான். மேலும் ஒவ்வொரு சமூகத்தாருக்கும் ஒரு வழிகாட்டி இருக்கிறார்." [68] (சூறா – 13, 7) என்று கூறியுள்ள நபிமார்களையும், முறுசலீன்களையும் இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் தங்கள் படைப்புகளில் வரும் இறை வணக்கப் பகுதியில் வாழ்த்திப் பாடுவது மரபு. இராஜ நாயகம், முகியித்தீன் புராணம், சீறாப்புராணம் போன்றவற்றை இதற்குச் சான்று காட்டலாம்.

## கலீபாக்களுக்கு வாழ்த்து

'முஹம்மத் நபி" (ஸல்) அவர்கள் வழி நடத்திக் காட்டியமார்க்கம் இஸ்லாம். அவருடைய வாழ்க்கை நெறிமுறை 'சுன்னத்' எனப் படுகின்றது. இதனைத் தவறாது கடைப்பிடித்து வாழ்ந்திடும் வாழ்க்கை 'தீன்' வாழ்க்கை எனப்படும். இத்தகைய அடிப்படையை கொண்ட மைந்த இஸ்லாத்தின், இஸ்லாமியப் பேரரசின் முதல் நான்கு பேரரசர்களாக,

1) ஹசரத் அபுபக்கர் ஸித்திக் (ரஸி)

2) ஹசரத் உமர் (ரஸி)

3) ஹசரத் உதுமான் (ரஸி)

4) ஹசரத் அலி (ரஸி)

இருந்தனர். இவர்களைத் தொடர்ந்து பலர் இருப்பினும்,

முஹம்மத் நபி (ஸல்) அவர்களுடன் தொடர்ந்து நெருக்கமான முறையில் இருந்து இஸ்லாத்தின் வளர்ச்சிக்குப் படிகளாக இருந்து வந்த "ஸஹபா" க்களுள் இந்நால்வர் "கலீபா"கள் என அழைக்கப்படுவர். இவர்களை வாழ்த்தி அமைந்த இஸ்லாமிய இலக்கியப் பாடல்களை மிகுராசு மாலை பக்கம் 1, ஆயிரம் சாலா பக்கம் 21, 22 சீறாப்புராணம் பக்கம் 3,4 முகியித்தீன் புராணம் பக்–24,26 போன்றவற்றில் காணலாம்.

கடவுள் வாழ்த்தின் இறுதியில் அவையடக்கம், நூலைப் பாடுவதற்குத் துணை நின்றவர்கள், நூல் அரங்கேற்றம் பற்றிய குறிப்புக்களைத் தருவதும் இஸ்லாமியப் புலவர்களின் மரபாகத் தெரிகின்றது. அவ்வகையில் இஸ்லாமிய இலக்கிய மரபினைப் பற்றி,

"இறைவன் – முகம்மது நபி – முறுசலீன்கள் – நபிமார்கள் – நான்கு கலீபாக்கள் – நபிகள் நாயகத்தின் திருப்பெயர் – உலுல் அஸ்மிகள் நாலு இமாம்கள் – அவுலியா அப்துல்காதிர் ஜீலாணி – நூல் எழுத உதவிய சதக்கத்துல்லாஹ் அப்பா ஆகியோரை வாழ்த்தியபின் அவையடக்கம் பாடுகிறார். இஸ்லாமியக் காப்பியங்களில் இன்று கிடைத்துள்ள முதல் நூலான வண்ணப் பரிமளப் புலவர் எழுதியுள்ள 'ஆயிரம் மசாலா' தொடங்கி இஸ்லாமியப் புலவர்கள் அனைவருமே தங்கள் காப்பியங்களில் கடவுள் வாழ்த்துப் பகுதியை இதே முறையில் தான் அமைத்துள்ளனர் என்பது நோக்கத் தக்கதாகும்." (69) என்ற கூற்றும்,

"இறைவன் – வானவர் நால்வர் – 1,24,000 நபிமார்கள் – 313 முறுசலீன்கள் – உலுல் அசும்கள் – முகம்மது நபி – நான்கு கலீபாக்கள் – நாயகத்தின் திருப்பெயர்கள் – அன்பியாக்கள் – அவுலியாக்கள் – அஸ்ஹாபிகள் சுவனவாசிகள் பதின்மர் என்ற வரிசையில் வண்ணப் பரிமளம் வாழ்த்தினை அமைத்துள்ளார். கிடைத்துள்ள இந்த முதல் இஸ்லாமியக் காப்பியத்தில் உள்ள இதே முறையில் தான் பின்னர் வந்த இஸ்லாமியக் காப்பியங்களில் வாழ்த்து அமைந்திருக்க காண்கின்றோம். (70) என்ற கூற்றும் நோக்கத்தக்கது.

## சந்திர பதன் கதையில் இஸ்லாமிய இறைவாழ்த்து மரபு

இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் இறைவனின் உருவத்தை வருணிக்காமல் அவனின் தன்மைகளை விவரித்துக் கூறி வாழ்த்து அமைப்பர் என்ற முறைப்படியே இக்கதையிலும் வாழ்த்து அமைந்துள்ளது. (பாடல் 1, 2, 3).

இஸ்லாமிய இலக்கிய மரபுப்படி, இறைத் தூதுவர் வாழ்த்தும் 'மனித வளமையை எடுத்துக் கூறுகின்ற மறைகளுக்கு ஏற்றமுடைய சுடரும் மாமணியாய், கக்கள் எனப்படும் உண்மைத் தூதுவனாகி, அரசு எனும் பொற்பதியை உடையவர் மூதவர் எனும் உத்தமர் நபிகள் நாயகத்தின் பொற்கமலப் பாதங்களை மனதில் வாழ்த்திடுவோம் என்று பொருள் பட அமைந்துள்ளது. (பாடல் 4)

நான்கு கலிபாக்களுக்கு வாழ்த்தும் 5,6,7–ஆம் பாடல்களில் மரபுப்படி அமைந்துள்ளது.

உத்தமர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் நேசனாகவும், அவருடைய வழியில் இஸ்லாமியப் பேரரசின் அரசராகவும், தன் பகைவர்களுடன் போரிட்டு, எத்திசையும் போற்றக்கூடிய வீரத்தினையும், கட்டழகையுமுடைய சுபகீல் துணை கொண்டும், வெற்றிபல பெற்ற கன்னி மழவராகவும், அழகுடன் வட்டமிடும் 'துல்துல்' என்ற குதிரையில் ஏறி வரக்கூடிய வள்ளல் அலி (ரஸி) அவர்களை வாழ்த்திடுவோம் என அலி (ரஸி) அவர்களுக்கு வாழ்த்து அமைந்துள்ளது (பாடல் 5).

இவ்வுலக வாழ்க்கையின் பின் அமையவுள்ள மறுவாழ்க்கையின் வேந்தன் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் மகளாக, நறுமணம் பரப்பிடும் கூந்தலை உடையவர், உலக நங்கையர்கள் அனைவருக்கும் அரசியார், இவ்வுலகு மற்றும் மறுமை உலகு ஆகிய இருவுலகிலும் மனித இனத்தைக் காத்திடக் கூடிய தாயாகிய பாத்திமா (ரஸி) அவர்கள் ஈன்றெடுத்த அசன் (ரஸி), உசன் (ரஸி) அவர்களின் மேன்மை நிறைந்த புகழினை வாழ்த்திப் பாடுவோம் என நபி பேரருக்கும் (பாடல் 9).

உலகம் முழுவதும் கீர்த்தி பெற்று விளங்கிவரும், மக்கள் மனதில் நீங்கா இடம் கொண்டிருக்கும் ஒலிமார்க்கெல்லாம் உயரிய நிலையில்

'விலாயத்' எனும் தன்மையைக் கொண்டு எப்பொழுதும் சிறப்பை உடையவராகவும், கடல் நீரினில் மூழ்கி மரணித்த வாலிபன் ஒருவனை உயிர்ப்பித்தவருமான சீரும் சிறப்பும் நிறைந்து முகையத்தீனின் புகழினைப் பாடுவோம் என்று முகையித்தீன் அவர்களுக்கு வாழ்த்தும் அமைந்துள்ளது.

இம்முறையில் சந்திர பதன் கதையில் தொடக்கப் பகுதியிலே இஸ்லாமியத் தமிழிலக்கிய மரபினைக் கடைபிடித்து தன் நிலையில் வழுவாமல் பாடல்களைப் படைத்த நூலாசிரியரின் திறன் போற்றத் தக்கது.

## சந்திரபதன் கதையில் இலக்கிய நயங்கள்

புலவன் தான் படைத்திட முயலும் படைப்புக்களில் உயிரோட்டம் இருப்பதையே விரும்புவான். உயிரோட்டமுடைய இலக்கியங்களால் மட்டுமே மக்கள் மனதில் நிலையானதோர் இடம் பிடிக்க இயலும். இலக்கியத்தை உயிரோட்டம் உடையவனவாகச் செய்வன அதன் இலக்கிய நயங்கள் எனப்படும் இலக்கியத் திறனே.

"இலக்கியத்தை, இலக்கியம் ஆக்கும் அடிக் கூறுகளே அதன் திறன் [71] என்ற க.ப. அறவாணன் அவர்களின் கூற்று இவ்விலக்கியத் திறனின் தன்மையைச் சுட்டுவதாக அமைந்துள்ளதைக் காணலாம்.

இத்தகைய இலக்கிய நயங்கள் பல இன்று வழக்கிலுண்டு. இவைகளை,

1) சொல் நயம்

2) பொருள் நயம்

3) ஓசை நயம்

4) அணி நயம்

என்ற பாகுபாட்டில் காணலாம்.

## சொல் நயம்

ஒரு மொழியின் நடை வெற்றி அடைய மிகவும் பயனுடையது சொற்களே. எந்த ஒரு படைப்பாளனும் தான் படைத்திடும் இலக்கியத்தில் சிறந்த சொற்களையே கையாளுவான். "ஒரு படைப்பின் சிறப்புக்கு அதனுள் பயன்படுத்தப்படும் சொற்களும் இன்றியமையாத காரணங்களாகின்றன. "[72] என்ற ஜெ.நீதிவாணனின் கருத்து இதனை மேலும் வலியுறுத்தும். அவ்வகையில் சந்திர பதன் கதையைப் பாடிய புலவர் முகமது உசைன் அவர்கள் எத்தன்மையான சொற்களைக் கையாண்டுள்ளார் என்பதைக் காணலாம். இவ்வகையில்,

*"துடித்ததிரப் பாய்கின்ற வரிப்புலிமுன். " - (பாடல்.13)*

என்ற தொடரில் புலி என்ற விலங்கைக் கூற வந்த புலவர், வரிகளை உடைய புலி என்றும், பாயும் குணத்தை உடைய புலி என்றும், அதன் பாய்ச்சலுக்கு காரணம் எதையோ கண்டது என்றும், அவ்வாறு கண்டதும் துடித்து பாய்கின்றது என்றும் அதன் பாய்ச்சலின் விளைவு இப்புவியானது அதிருகின்றது என்ற பொருளைத் தரும் வண்ணம் 'துடித்ததிரப் பாய்கின்ற வரிப் புலி முன்' என்ற சொற்றொடரைக் கையாண்டுள்ளதைக் காணலாம்.

இவ்வகையில்,

*"சென்னிற வல்லியை நகைக்குஞ் சேவடி" (பாடல்.32)*

*"பூரண மதியின் முன்னே*

*புகைச் சுடர் எதிரியாமோ?" - (பாடல்,88)*

*"பரந்த நடை செறிந்த மேரும்*

*தனித்த சிம்மக் கரடி" - (பாடல்.104)*

*"கணை தொடுத்த விழி மடவார்" - (பாடல்.109)*

*"சந்திரன் முன் விளக்கொளி வலியோ" - (பாடல் 110)*

*"முருகுகொப்பளிக்கும் மாது" - (பாடல்.136)*

*"நாகவெண் மணியிற் செய்த*

*நள்ளிரு ளகற்று மாடம்" - (பாடல்.143)*

*"முருகிதழ் செவ்வாய் முல்லை*

*முரல்வரி கடைக்கண் ணல்லார்" - (பாடல்.145)*

*"திங்கள் கவித்த முகம்" - (பாடல் 190)*

போன்ற சிறந்த தொடர்கள் அமைந்திருப்பதைக் காணலாம்.

மேலும் பொருள்நயம் சிறந்த சொற்றொடர்களாக,

1) பெண்ணை – "குழலி" – (பாடல் – 36)

"கற்பகக் குயில்" – (பாடல் – 85)

"வண்டணி கூந்தலாள்" – (பாடல்.85)

"திருவஞ்சி" – (பாடல்.106)

"பூவையர்" – (பாடல்–154) – எனவும்,

2) பெண்களில் உயர்ந்தவள் என்பதை,

"மங்கை நாயகம்" – (பாடல்–50)

"அருவ நாயகம்" – (பாடல்.52) – எனவும்,

3) விளக்கின் தீப ஒளியை,

"புகைச் சுடர்" – (பாடல்–88)

"அனல் சுடர்" – (பாடல்–99) – எனவும்,

4) அரண்மனையை,

"சித்திர மனை" – (பாடல்–91) – எனவும்,

5) ஆசை எனும் பண்பை,

"பாச மாவலை" – (பாடல்–115) – எனவும்,

6) கடிதம் என்ற ஓலைச் சுவடியை,

"வாசக ஓலை" – (பாடல்–135)

"வண்ண பத்திரம்" (பாடல் –137)

"பத்திரம்' – (பாடல்–148) – எனவும்,

7) குதிரையை,

"வீரிய பரிகள்" – (பாடல்–121) – எனவும்,

8) பாயும் வெள்ளத்தை,

"வாரிடு வெள்ளம்" – (பாடல் –121) – எனவும்,

9) அழகை – "முருகு" – (பாடல் –136) – எனவும்,

10) வெள்ளைச் சவத்துணியை,

"துன்னிய கபன்" – (பாடல்–171) – எனவும்,

11) சவப்பெட்டியை,

"துலங்கு சந்தக்" – (பாடல்–171) – எனவும்,

12) நன்காட்டை,

"பொளிர் காடு" – (பாடல்–171) – எனவும்

அமைத்துள்ளதைக் குறிப்பிடலாம்.

புலவர் தான் கூறிடமுயலும் செய்தியில் உயிரோட்டமாக அமைந்திருக்கும் உணர்ச்சிகளை, கையாளும் சொற்கள் மூலம் காட்டிவிடுவர். உயிரோட்டம் இல்லாத இலக்கியங்கள் நிலை நிற்பதில்லை. ஒவ்வொரு இலக்கியத்திலும் பல வகையான உணர்ச்சிகள் இழைந்தோடி நிற்கவேண்டும். இலக்கியப் படைப்பாளன் தான் படைத்திடும் இலக்கியத்தில் படிப்பவர் உணரக்கூடிய வகையில் உணர்வை வெளிப்படுத்தும் சொற்களைக் கையாள வேண்டும். சான்றாக,

உமறுதரும் சீறாவில்,

"படிகிடு கிடெனநாக முடிநெறு நெறெனவாரி

படுதிரை யளற தாகவே

வடவரை யசையவான முகடுடை படவறாத

மழைமுகில் சிதறி யோடவே

யடையலர் கெடிகள்கோடி யிடிபடு படலதூளி

யலரினி னுடலில் மூழ்கவே

நடமிடு கடினவாசி மிசைவரு சமரசூர

நார்புலி யலியை யோதுவாம்." (72)

என்ற பாடலைச் சான்று காட்டலாம். இது நான்காம் 'கலீபா'வான ஹசரத் அலி(ரலி) அவர்களை வாழ்த்தி வந்த பாடலாகும். இப்பாடலில் கடின ஓசை மிகுந்து காணப்படுவதைக் காணலாம்.

அலியார் ஒரு சிறந்த வீரர். இஸ்லாமிய சாம்ராஜ்ஜியம் உலகில் பரவிட மிகவும் முக்கிய காரணமாக விளங்கியவருள் இவரும் ஒருவராவார். இவருடைய வாள் வலிமைக்கு இணையாக எவரும் இருக்கவில்லை. நீதியின் பக்கம் இருந்தமையால் இவரின் தோள் வலிமை மேலும் கூடியது. எனவே, இவரை இஸ்லாமியர்கள் "புலிநிகர் அலி" என்பர்.

இத்தகு வீரரை வாழ்த்தும்போது உமறுப்புலவர் தமிழ் மொழியில் வல்லின, இடையின எழுத்துக்களையே மிகுதியாகக் கையாண்டு கடினமான உச்சரிப்புகளை வெளிப்படுத்தி வீர உணர்வைத் தூண்டுவதைக் காணலாம். இவ்வகையில் சந்திர பதன் கதையில் புலவர் முகஹம்மத் உசைன் கையாண்டுள்ள உணர்ச்சிப் பிழம்புகளைக் காணலாம்.

*"மட்டலர் புயலத்திலணி முத்துநபி யுத்த*

*மருகேசனென்ன வந்த வரசர்*

*துட்டலரை வெட்டிமடி யப்பொருது யெத்திசையும்*

*சுத்த வீரத்தை யுடையார் (பாடல் 8)*

என்ற இப்பாடல் வீரர் அலியை வாழ்த்தி வந்த பாடலாகும்.

இதில் புலவர் முஹம்மத் உசைன், வீர உணர்வைத் தரக் கூடிய வகையில் வல்லினம் மற்றும் இடையின எழுத்துடைய சொற்களையே மிகுதியாகக் கையாண்டு வீரவுணர்வைப் படிப்பவர் நெஞ்சில் தூண்டும் வண்ணம் அமைத்துள்ளதைக் காணலாம்.

இஸ்லாமியப் பேர்ரசின் மற்றொரு மாவீரர் அசரத் உமர் (ரஸி) அவர்களாவார். இவரை வாழ்த்துமிடத்தும்,

*"பானு மேனி கலங்கி யோடவே*
*பார்வை (எவிருஞ்) விழியினார்*
*மானின மாது கவுழ்த்த எண்ணையை*
*வாங்கி யீந்தவர் மைந்தனை (பாடல்-6)*

என்று வீர உணர்ச்சி நிறைந்த பாடலைப் பாடியுள்ளதைக் காணலாம்.

### கோப உணர்ச்சியைக் காட்டும் புலவர்

ஒருவர் கோபம் கொள்ளும் போது ஏற்படும் அங்கமாற்றத்தையும் உணர்ச்சி வெடிப்பினையும் படம் பிடித்துக்காட்டுகிறார் புலவர் உசைன். இதனை,

*"சேலிரு விழியுங் கனற் பொறிகதுவ*
*செவ்விதழ் கருநிற மோடி*
*நூலிடை யிணைத்த இளவல்மன் னவனை*
*நுண்கொடி சினந்தவள் நோக்கி" (பாடல்-83)*

என்ற பாடலின் வரிகளிலிருந்து உணரமுடிகின்றது.

### அவலச் சுவை

தன் மகளைக் காணாமல், அவளைத் தேடி வருத்தமுடன் பார்க்கும் ரங்குராயனின் நிலையினை அவனது கூற்றாக வரும்,

*"கொலுவெங்கே தோழியவ ரெங்கே தாதி*
*குழுவெங்கே உந்த னருளும்*
*கலையெங்கே கொஞ்சு மொழியெங்கே சேனை*
*கடலெங்கே சந்திர பதனே" (பாடல் -189)*

என்ற பாடல் மூலம் அவலச் சுவையின் ஆழத்தில் நம்மையும் ஆழ்த்தி விடுவதைக் காணலாம்.

## படை நடந்து செல்லுதல்

யானை, குதிரை, காலாட்படை என்ற பல்வகைப் படைகள் ரங்குராயன் நாட்டை நோக்கிச் செல்கின்றன. இதனை விளக்கிடும் புலவர், படையுடன் நாமே நடந்து செல்லுதல் போன்ற உணர்வை, உண்டாக்கி விடுகின்றார். (பாடல்–129, 130)

## பொருள் நயம்

கருத்தாழமும், சுவையான நடையும், அடுக்குத் தொடரும், தொடர் நிலையில் பொருள்களை விளக்குதல் போன்ற பல்வேறு கூறுகளைத் தன்னகத்தே கொண்டது பொருள் நயம் ஆகும். பொருள் நயத்தை விளக்கிட அதன் வினையடியான பொருண்மையும் அதனைச் சார்ந்தவையும் மிகவும் துணை புரியும்.

இலக்கியப் படைப்பாளன் படைப்புத் திறனை எடை போடும் எடைகற்களில் இத்தகைய பொருள்நயம் என்ற எடைக்கல்லும் ஒன்றாக இன்றியமையாததாகக் கருதப்படுகின்றது.

படிப்பவருக்கும் படைப்பாளனுக்கும் இடையில் பாலமாக அமையும் மொழியினைத் தாங்கிடும் தூண்களில் பொருள் எனும் தூணுக்குத் தனியிடமுண்டு. இவ்வகையில் புலவர் முஹம்மத் உசைன் பாடிய சந்திர பதன் கதையிலுள்ள சில பொருள் நயமுடைய பாடல்களைக் காணலாம்.

*"முகிலினம் படர்ந்து சென்று*
*முக்கடல் நீரை யுண்டு*

*ககனிடைப் பரந்து மின்னி*
*கதித்திடி முழக்கங் கொண்டு*
*புகரிடம் பறவை யோடு*
*விலங்கினம் பயந்திங் கேக*
*செகவுயி ரனைத்தும் வாழ்க*
*திங்கள் மும்மாரி பெய்யும்." (பாடல்-18)*

என்ற பாடலைச் சான்று காட்டலாம்.

*"கோழுறைக் கதலி யீண்ட*
*கொழுங்கனி யிழிந்த தேனும்*
*காழுடை மாழை யீண்ட*
*கனியினின் றிழிந்த தேனும்*
*வீழ்சுனை வேற்பலாவின்*
*வியனரியுறு தேனும்*
*சூழ்வயல் வளரப் பாய்ந்து*
*துலங்குகத் திரி மாநாடே* (பாடல் 20)

என்ற பாடல்கள் மூலம் சிறந்த கதலி எனும் மா வகையினைச் சார்ந்து மரத்தினிலிருந்து பழங்கள் சிந்திடும் தேனும்; நீண்ட அகன்ற இலைகளையுடைய வாழையிலிருந்து சிதறிடும் தேனும்; பலபெரிய உயர்ந்த சுனைகளின் அருகினில் வானுயர உள்ள பலா மரங்களினின்று வடிந்திடும் தேனும் வயல் வெளியில் சூழ்ந்திட நின்றிட்ட கத்திரி மாநாடு என விளக்கியுள்ளார்.

முக்கனியின் இனிமையை உணராத தமிழர் மனம் இல்லை எனலாம். அதன் இனிமையின் உயர்நிலையாக அதனின்று தேன் வடிவது போலவும் அவை மிகைப்பட்டு வயல் புறங்களில் ஓடும் நீரில் கலந்து பரந்திட்டது எனவும் கத்திரி மாநாட்டின் வளமையை அடுக்கி உள்ளதைக் காணலாம்.

## ஓசை நயம்

இலக்கியப் படைப்பின் வெற்றியில் ஓசை நயம் சிறப்பிடம் வகிப்பதாகும். இன்றைய நிலையில், நாட்டுப்புற இலக்கியங்களின் செல்வாக்கை உலக மக்கள் யாவருமே வியந்து போற்றிடக் காரணமாய் அமைவது அதனுள் அமைந்துள்ள ஓசை நயமெனும் இசையேயாகும்.

தாலாட்டு முதல் ஒப்பாரி வரை தனி மனித வாழ்க்கையில் ஒவ்வொரு பகுதியிலும் இசை கலந்து இழைந்தோடியுள்ளதைக் காணலாம். எனவே, மனிதன் மனதில் எளிதில் இடம் பிடிக்கும் சக்தி இசைக்கு உண்டு.

இலக்கியங்களில் இத்தகைய இசை எனும் ஓசை நயம் வருவதற்கு எதுகை, மோனை, இயைபு என்ற யாப்பிலக்கணங்கள் மிகவும் பயன்பட்டு வருகின்றன. எதுகையும், மோனையும் இலக்கிய ஆற்றின் இரு கரைகளாகும். இக்கதையில் அமைந்துள்ள ஓசை நயங்களைக் காணலாம்.

1) *“அம்பொற் பலவா ...*

*அம்பொற் கிளியே ...” (பாடல் 68)*

2) *“மதியொளி மாமுகத்து ...*

*மதியொளி வாள் பிடித்து ....” (பாடல் 71)*

3) *“தாமரை தடாகஞ் ...*

*தாமரை விரிம ....*

*தாமரை நிறத்தின் ...*

*தாமரை ஏதுவே ....” (பாடல் 140)*

4) *“தள்ளுமதி முகவேறுவிம் ...*

*தள்ளியின்ன மாண்டிலையே ...” (பாடல்.159)*

5) *“உருவ மாடிய ...*

*அருவ ஏன ...” (பாடல் 161)*

6) *“ஐம்பொறி களும்விஷ ...*

ஐந்து சோகமும்....

ஐந்து பூதமும் ...

ஐந்து அய்ந்து ...." - (பாடல் 162)

7) "மூணு தோஷங்கள் ...

மூணு தோதக ...

மூணு நன்மலர் ...

மூணு நாலொரு ... (பாடல் 163)

8) " கரமின்னு மாமுகை ...

கன்னி மாமயில் ..." - (பாடல் 165)

9) "சுந்திர நகரின் ...

சந்திர வதனாள் ..." -(பாடல் 173)

10) "உந்தன் நன்மகளீர் ...

இந்தமஞ் சேகு ..." - (பாடல் 175)

என்ற மோனைத் தொடைகள் இக் கதையில் பயின்று வந்து ஓசைநயம் அளித்திருப்பதைக் காண்கிறோம்.

எதுகைத் தொடை அமைந்த பாடல் வரிகளுக்குச் சான்றாக,

1) "பார்புக ழிரசூல் ...

கார்குழல் மடவாள் ... - (காப்பு பாடல்)

2) "பொன்னுலகு மறுசுறு ...

மன்னயிரும் பறவையினம் ... - (பாடல்.1)

3) இல்லாண்மை நீக்கியருஞ் ...

அல்லாகு வென்றமொழி ..." - (பாடல் 2)

என்பனவற்றைச் சான்று காட்டலாம்.

"சொர்க்க ரம்பையோ மாயையோ தோகையோ குயிலோ

மேவிய வர்கக் வண்ணமோ சொர்ணமோ மானோ

*நற்க லன்பெரும் சித்திரமோ ரத்தினமோ நளின*

*பொற்கு முதமோ பாவையோ பூவையோ வறியேன்"*

*-(பாடல்.57)*

*"வண்டணி கூந்த லாளே*

*மாமதி வதன மின்னே*

*கண்டெனு மொழியி னாளே*

*கற்பகக் குயிலோ கண்ணே - (பாடல் .85)*

என்ற பாடல்களையம் ஓசை நயத்துக்குச் சான்று காட்டலாம்.

## அணி நயம்

தான் படைத்திடும் இலக்கியத்துக்கு அழகு செய்யும் அணிகலன்களாகப் புலவர் அணிவிப்பதே 'அணி' என்ற செய்யுள் உறுப்பாகும். அணிகள் பல உண்டு. அவற்றுள் மிகுதியாகப் பயின்று வருவன உவமை அணியாகும். இக்கதையில் பயின்று வந்துள்ள உவமை அணிகளை இனிக் காணலாம்.

1) "சென்னிற வல்லியை நகைக்குஞ் சேவடி" – (பாடல்.31)

2) *"அருகினில் மறையவர் படைகளு*
*மதிருடன் வரவு மென்ன*
*பருவம் நடமிடும் மடமயில் குழுவினர்*
*பரிவிலும் வரவினவும்" - (பாடல்.64)*

3) *"அம்பெனும் விழியும் பவளமென் வாயி*
*லஞ்சுகம் கெஞ்சிய மொழியும்" - (பாடல்.79)*

4) *"தன்னுயிர் தவித்து மழைகண்ட பயிர்போல" - (பாடல்.80)*

5) *"திங்களையொத்த மங்கை" - (பாடல்.96)*

6) *"கருமுகி லிடிக ளென்ன*
*பாரிடை கரங்கிற றன்றே" - (பாடல்.124)*

7) *" ... பெரும்படையுடன்*

*கடலதுபோற் கூடிச் சென்றார்"*

8) *"பெருங்கட லடைநீ ரன்ன*

*உருக்கிய நிலவென் றெண்ணி*

*ஒளிக்குமே கழிக்கு மாதர்" - (பாடல்.145)*

9) *"போர்வளைச் சிலை என்னப் புருவமும்" - (பாடல்40)*

10) *"கருமலை நிகரொப் பன்ன*

*கடகரிக் கவலு மோசை" - (பாடல்.124)*

என்ற பல உவமைத் தொடர்களை புலவர் உசைன் கையாண்டுள்ளதைக் காணலாம்.

## உம்மைத் தொடர்

1) *"கண்ணு வாயுமில்லாதவன்" - (பாடல்.3)*

2) *"துடியும் வல்லிக் கொடியும்" - (பாடல் .46)*

3) *"தந்தியும் பரியுந் தேரும்*

*சேனையுந் தாதி மாரும்" - (பாடல்.73)*

4) *"ஏக்கமும் மயக்க மாகி" - (பாடல்75)*

5) *"தேக்கமும் திகைப்புமாகி" - (பாடல் 75)*

6) *"கூரிய வாளும் வில்லும்" - (பாடல் 121)*

7) *"மந்திரியு மப்படையு மன்ன" - (பாடல் 133)*

8) *"தந்தியும் பரியும் - (பாடல்.133)*

9) *"மகிழ்கரையும் பொளிர்குளமும்" - (பாடல் 151)*

என்பனவற்றை உம்மைத் தொடர் அமைந்துள்ளமைக்குச் சான்றாகக் காட்டலாம்.

## தமிழ் மொழியாக்கம்

இஸ்லாமியக் கொள்கைகளை விளக்கும் வண்ணம் வடநாட்டில் வெகுவாகப் புழக்கத்தில் இருந்து வந்து உருதுக்கதையை, தமிழகத்திலும் பரவியிருந்த அவ்வுருதுக் கதையைச் சுந்தரத் தமிழில்

வடித்தவர் முகம்மது உசைன் அவர்கள். இவர் தமிழில் இக்கதையைப் படைத்த பொழுது பல உருது, அரபுச் சொற்களுக்குத் தமிழாக்கம் செய்து அளித்துள்ளார். அவ்வாறு இயலாத நிலையில் அதன் உச்சரிப்பு வடிவினைத் தமிழுக்கு ஏற்றவாறு மாற்றியுள்ளார். இனி இதனைச் சான்றுகளுடன் விரிவாகக் காணலாம்.

'சாந்த்', 'பதன்', 'கிஸ்ஸா', என்ற உருதுமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்து தமிழ் ஒலிகளுக்கு ஏற்ப 'சந்திர பதன் கதை' என அழைத்துள்ளார்.

முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் பேரர்களான ஹசன், ஹூசைன் என்ற அரபுப் பெயர்களைத் தமிழ் உச்சரிப்புக்கு ஏற்றவாறு அசனுசனார் என்றாக்கியுள்ளார்.

### 3) அர்ஷ்

இஸ்லாமியர்களின் நம்பிக்கையின்படி அவர்கள் மறுமையில் சந்திக்க உள்ளவைகளுள் 'அர்ஷ்' என்ற வானலோகமும் ஒன்று. அதனைத் தமிழ் ஒலிக்கேற்ப 'அரசு' என்றாக்கியுள்ளார்.

வணங்குதற்குரியவன் என்று அல்லாஹ் என்ற சொல்லுக்கு 'அல்லாகு' என்று தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வகையில் அமைந்த மேலும் சில சொற்களைக் காணலாம்.

1) அப்துல் காதர் – அவுதல் காதர் (பாடல் 14)

2) இஸ்லாம் – இசுலாம் (பாடல் 179)

3) உஸ்மான் – உதுமான் (பாடல் 7)

4) ஹிஜ்ரத் – கிசரத் (பாடல் 5)

5) மெக்கஹ் – மக்கா (பாடல் 4)

6) முஹம்மத் – மகம்மது (பாடல் 7)

முகம்மது மீரா (பாடல் 12)

எனவும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. இவை புலவர் முகம்மத் உசைன் அவர்களின் தமிழ் மொழியாக்கத் திறனைக் காட்டக் கூடியதாக அமைந்துள்ளன.

## இக்கதையில் இறைவனைச் சுட்டும் சில சொற்கள்

புலவர் முகம்மத் உசைன் மற்ற இஸ்லாமியப் புலவர்கள் சந்தித்த அதே சிக்கலைச் சந்தித்துள்ளார். இறைவனை உருவகிப்பது இஸ்லாமிய மார்க்கக் கொள்கைகளுக்கு முரணானதாகும். எனவே 'அஸ்னாவுல் வுஸ்னா' என்ற வல்லநாயனின் தன்மைகளைச் சுட்டவல்லதான பண்புப் பெயரால் வருணிப்பர். அம்முறையிலேயே புலவர் முகம்மத் உசைன் அவர்களும் வருணித்துள்ளார்.

### 1) வல்லவன்

உலக படைப்பு முதற்கொண்டு விண்மண் முதலான அண்ட சூசங்களையும் படைத்திட்டவன், 'ஆகுக' என்ற வார்த்தையால் அனைத்தையும் படைத்திடும் வலிமையானவன் என்ற முழுப் பொருளையும் விளக்கும் வண்ணம், "வல்லவன்" எனச் சுட்டியுள்ளார். (காப்புப் பாடல்) (பாடல்–54,107)

### 2) ஆதி

ஆறு நாட்களில் இவ்வண்டங்கள் யாவற்றையும் படைத்தவன் வல்ல நாயன் அல்லாஹ் என்பது இஸ்லாமியரின் உயர்ந்த கொள்கையாகும். இதுவே இசுலாமிய வேதமான குர்–ஆனிலும் விளக்கப்பட்டுள்ளது. இத்தகைய அனைத்துச் செயலுக்கும் முதலாக இருக்கின்ற வல்ல நாயனை 'ஆதி' என்ற சொல்லால் சுட்டுகின்றார். (பாடல் 1,183)

### 3) சோதி – ஒளி

அல்லாஹ்வை, அவனுடைய தன்மைகளை வைத்து 'நூருல்லா' என்பர். இதன் பொருள் ஒளியான இறைவன் என்பதாகும். இதனைச் சார்ந்தே இஸ்லாமியத் தமிழ் புலவர்கள் இறைவனை, ஒளியானவன்,

சோதியானவன் என்று கூறிடுவர். இவ்வகையில் மேன்மேலும் இறைவனின் தன்மைகளை விளக்கும் வண்ணம் புலவர் முகம்மத் உசைன் அமைத்த பகுதிகளைப் பார்க்கலாம்.

*".... தத்துவரி சுற்று மிப்புவி*
*நிறைந்த சோதியை வணங்குவாம்" - (பாடல்.3)*
*"சுத்தனே மறையே சோதி*
*துலங்கிய ஒளியே ஆதியே" - (பாடல் 170)*

என்கிறார்.

## சந்திர பதன் கதையில் இஸ்லாமிய மரபுகள்

இஸ்லாமியர்கள் தங்களின் 'ஈமான்' என்ற மார்க்கக் கொள்கையின்படி வணக்கத்திற்குரியவன் வல்ல நாயன் அல்லா ஒருவனே என்பதை உயிர் மூச்சாகக் கொண்டிருப்பர். இதனுடன் வல்லநாயன் அல்லா தன் 'உம்மத்' மீது அளவற்ற அருளைப் பொழிபவனாகவும், உலக மக்களின் நேர்வழிக்காக பல நபிமார்களை இவ்வுலகிற்கு அனுப்பி வைத்துள்ளார். அவர்களில் இறுதியாக வந்தவர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் ஆவார்.

இவருக்கு 'ஜீபிரியல்' (அலை) அவர்கள் மூலமாக அருளப்பட்டது புனித வேதமான 'அல்குர்ஆன்' ஆகும். இப்புனித வேதமே இஸ்லாமியர்களின் வாழ்க்கையில் உண்மை வழியாக இருந்து வருகின்றது. இவ்வேதத்தில், இறைவனை வாழ்த்தியும், போற்றியும் பல வாசகங்கள் (ஆயத்) இருக்கின்றன.

இவைகளில் தலையானதாகக் கருதப்படுவது "பிஸ்மில்லா ஹிர்ரஹ்மான்" என்ற வாசகமேயாகும். இதன் பொருள் "அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்பாளனுமாகிய அல்லாவின் உயரிய பெயரினால் தொடங்குகின்றேன்." என்பதாகும். இத்தகு வாசகங்கள் 144 முறை இவ்வேதத்தில் வந்துள்ளது. 30 அத்தியாயங்கள் கொண்ட இவ்வேதம் கூறும் அனைத்துச் செய்திகளும் சுருக்கமாக 'சூரே – ஏ– பாத்தியா' எனும் அத்தியாயத்தில் அமைந்துள்ளது எனவும்; சூரே – ஏ– பாத்தியா என்ற இவ்வத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள செய்தி யாவும்

மேற்கண்ட ஒரு வாசகத்தில் சுருக்கமாக உள்ளது என்றும் கூறும் போது இவ்வாக்கியத்தின் தனித்தன்மையையும், மகிமையையும் நன்கு உணரலாம்.

சந்திர பதன் கதை தனது முதல் வாசகமாக "விசுமில்லா கிற்றகீமா கிற்றகீம்" என்ற வாசகத்தை கொண்டுள்ளதைக் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

"நல்ல செயல் எதனையும் தொடங்கும் முன்பாக அருளாளனும், அன்புடையோனுமான அல்லாஹ்வின் திருப்பெயரால் என்னும் பொருளுடைய "பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்" என்று உரைத்தல் இஸ்லாமிய மரபு" [73] என்ற முஹம்மது உசைன் அவர்களின் கூற்றும்,

பிஸ்மில்லாஹ்வின் அற்புதச் சக்தியினை விளக்கிட வந்த மக்தூம் ஷாஹ் அவர்களின் கூற்றுக்களான,

1) "எவர் தமது ஒவ்வொரு செய்கையின் ஆரம்பத்தில் "பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம்" என்று கூறி ஆரம்பிக்காத ஒவ்வொரு காரியமும் அல்லாஹ்வின் அருளைவிட்டுத் தூரமானதாகும்.

3) பிஸ்மில்லாஹ் முதன்முதலில் இறங்கியருளப்பட்ட சமயம் அதன் பயங்கரத்தால் மலைகளெல்லாம் நடுநடுங்கி ஆட்டங் கொடுத்துவிட்டன.

4) எவர் தனது வாழ்க்கையில் அதிகமாக பிஸ்மில்லாஹ்வை கடைப்பிடிக்கிறாரோ அவர் நரகில் பிரவேசிக்கமாட்டார்.

5) எவர் அதிகமாக பிஸ்மில்லாஹ்வை ஓதுகிறாரோ அவர் வானவர்களிடமும், ஜனங்களிடமும் கண்ணியமானவராகவும், கம்பீ. மானவராகவும் ஆகிவிடுகிறார்.

6) பிஸ்மில்லாஹ் சொன்ன காரணத்தாலேயே இறைவன் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களின் தல்பாவை ஏற்றுக்கொண்டான்.

7) பிஸ்மில்லாஹ்வை சொன்ன காரணத்தினாலேயே ஹஜ்ரத் நூஹ் (அலை) அவர்களின் கப்பல் ஜீதி என்னும் மலையை அடைந்து ஈடேற்ற மடைந்தது.

8) பிஸ்மில்லாஹ்வை சொன்ன காரணத்தினாலேயே ஹஜ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் நெருப்பு குளிர்ச்சி அடைந்தது.

9) பிஸ்மில்லாஹ்வை சொன்ன காரணத்தினாலேயே ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்கள் பிர்ஔனை விட்டும் அவனின் சேனையை விட்டும் ஈடேற்ற மடைந்தார்கள்.

10) பிஸ்மில்லாஹ்வை சொன்ன காரணத்தினாலேயே தான் ஹஜ்ரத் சுலைமான் (அலை) அவர்களின் அரசாங்கத்தை இறைவன் பலப்படுத்தி மனுஜின்னுகளையும் பறவை இனங்களையும் அவர்களுக்கு வழிபடச் செய்தான்.

11) பிஸ்மில்லாஹ்வை சொன்ன காரணத்தால் தான் ஹஜ்ரத், ஈஸா (அலை) மரணித்தோரை உயிர் பெற்று எழச் செய்தார்கள்.

12) பிஸ்மில்லாஹ்வின் காரணத்தால் தான் நமது நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் மாபெரும் வெற்றி பெற்றார்கள்.

13) ஒருவர் எந்த நோக்கத்திற்காக பிஸ்மில்லாஹ் ஓதுகிறாரோ அவர் அந்த நோக்கத்தை அடைவார்." [74]

இவை இவ்வாசகத்தின் அற்புதத் தன்மையை விளக்கவல்லன.

எனவே, புலவர் முஹம்மத் உசைனும் தனது சுவடியை பிஸ்மில்லா ஓதியே தொடங்குகின்றார். இதனைத் தொடர்ந்து காப்புப் பாடல் உள்ளது. மீண்டும் இலக்கியச் செய்தி கூறும் முன்பு, மீண்டும் பிஸ்மில்லாஹ்வை ஓதுகின்றார் புலவர் முஹம்மத் உசைன்.

## 'குர்ஆன்' எனும் வேதம்

*"பார்புக ழிரசூல் வேதம்*
*பகர்திரு முகையார் மன்னன்*
*கார்குழல் மடவாள் சந்திர பதனைக் கனவிலுற்று*
*பேர்பெற ஆஷிக் கான்*
*பெருங்கதை தன்னைப் பாட*
*வாரிசூ முலகம் போற்ற வல்லவன் காப்ப தாமே."*

(காப்பு பாடல்)

ரசூல் (ஸல்) அவர்கள் பகர்ந்திட்ட வேத நெறிப்படி நடந்திடும் முகையார் என்பதனைக் கொண்டு, முகையார் மன்னன் ஒரு இஸ்லாமியர் என்பதையும், அவர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு செயலிலும் இஸ்லாமியர்களின் வாழ்க்கையில் இணைந்து இழைந்தோடிக் கிடப்பதைக் காணலாம். இவ்வகையில் குர்ஆன் எனும் வேதம் இஸ்லாமியர்களின் முக்கிய அங்கமாக விளங்குகின்றது. இதனையே, புலவர் உசைனும் காப்புப்பாடலின் முதலடியிலேயே சுட்டியுள்ளார்.

## திக்ர் எனும் வாழ்த்து (அல்லது) தியானம்

*" .... மல ரணைமேல்*
*வல்ல வன்றனைப் புகழுற வணங்கியே சாய்ந்து".*

"ஏதாவது ஒரு வேதனைக்கு மூன்று நாள் தொடர்பாக பிஸ்மில்லாஹ்வை நூறு நூறு தடவை ஓதி வந்தால் அவ்வேதனை நீங்கும்."[75] என்ற கூற்றும், "திக்ர் மேமினுக்கும் அல்லாஹுக்கும் இடையில் உள்ள பாலமாகும்." அழுது கேட்டால் அளிப்பவன் அவன் ஒருவனே என்ற கூற்றுக்கள் இஸ்லாமியர் தூவாவிலும் திக்ரிலும் (தியானத்திலும்) எத்துணை பற்றுடையவர் என்பதை விளக்கும்.

ஹதீஸ்களின் கூற்றாக 'மோமீன்' எனும் இஸ்லாமியன் தான் தூங்கும் போதாவது இறைவனையும், வல்ல நாயனின் தூதுவனையும், மரணத்தையும், மறுமை நாளையும், அந்நாளின் செயல்களை

எண்ணியும், தவறுக்கு மன்னிப்புக் கோரியும் இறைவனை வேண்டி வணங்கி உறங்குதல் வேண்டும் என்பதாகும்.

இந்த ஹதீஸின் கருத்தினை விளக்கும் வண்ணமே புலவர் முஹம்மத் உசைன் இச்செய்யுளின் அடிகளைப் பாடியுள்ளார்.

## 'தக்தீர்' எனும் தலைவிதி

*"முன்னைஎன் தலையி லாகு*
*எழுத்தினை . . .. " - (பாடல் 86)*
*"பாதகமீ தெந்தலையி லன்றெழுதி*
*வைத்திடுமுன் பாவ வினையே" - (பாடல் 98)*
*"வல்லவன்தன் விதிப்பயனைப் பேசலாமோ" - பாடல்.107)*

என்ற இவ்வடிகள் இஸ்லாமியர்கள் ஈமானில் கொண்ட பற்றினை விளக்கும் வண்ணம் அமைந்துள்ளன. இஸ்லாமியர்கள் ஈமான் கொள்ள வேண்டிய விஷயங்களாக இருப்பவை,

இறைவன், இறைத் தூதுவர், இறுதி நபி, நான்கு இறை வேதம், மலக்குகள் என்னும் வானவர்கள்,

தீர்ப்பு நாள், சொர்க்கம், நரகம், தலைவிதி என்ற பத்துமாகும்.

இவைகளின் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும் என்பதாகும். இதனுள் ஒன்றாக அமைந்துள்ள தலைவிதி பற்றிய செய்தியினையே மேற்பாடற் கூற்றுக்கள் விளக்குகின்றன.

தலைவிதி என்பது, இறைவனால் நிர்ணயிக்கப்படுவது; இது மாறுதலுக்குட்பட்டதல்ல; இதனை மாற்றவும், திருத்தியமைக்கவும் அந்த இறைவனால் மட்டுமே முடியும்; அவனின் விருப்பமின்றி இவை நடக்காது என்பதே இதன் மூலப் பொருளாகும். இந்நம்பிக்கையை விளக்கும் வண்ணமாகவே இக்கூற்றுக்கள் அமைந்துள்ளன.

## அல் – ஹதீஸ் – என்னும் மார்க்கக் கொள்கை விளக்கம்

இஸ்லாமியர்களின் வாழ்க்கையில் இறையருள் நிறைந்த வேதமே முழுப் பங்கு வகிக்கும். இதற்கு அடுத்தபடியாக விளங்குவது முஹம்மத் நபி(ஸல்) அவர்களின் நெறிமுறை என்ற ஹதீஸ் என்ற மார்க்கக் கொள்கைகளாகும். இவைகளும் முஹம்மத் நபி(ஸல்) அவர்களாலேயே சொல்லியும், செய்தும் காட்டப்பட்டவை 'சுன்னத்' என்ற உயரிய வழிமுறையாகும். இதனை விளக்கும் வண்ணமே,

*"ஒருவர்தன் னாசை மற்று*
*மொருவர்கள் கொடுப்ப தெல்லா*
*பெரும்பாவ மடைவ ரென்று*
*பேசின ரிரசூல் முன்னாள்"* - (பாடல் 118)

*"நன்று மிவ்வுலக றிந்தது மிலைஎன வெண்ணி*
*அன்று நாயக னாஷிக்கு மாஷிக்கு மமைத்து"* - (பாடல் 182)

### கபனிடுதல்

இறைவனால் படைத்த மனிதனின் உயிர் மீண்டும் அவ்வல்லவனிடமே சென்றடையும் என்பது இஸ்லாமியக் கொள்கை. அவ்வுயிரினைக் கொண்டு மீண்டும் உயிர்ப்பிக்கப்படுவான் என்பதும் நம்பிக்கை.

இறந்த இஸ்லாமியர்களைத் தூய நன்னீராட்டிடுவர். பிறகு அவ்வுடலை வெண்மையான ஒரு முழு அங்கி எனும் வெள்ளாடையால் பாதம் முதல் தலைவரை அனைத்து உறுப்புக்களும் மறையும் வண்ணம் போர்த்தி அளிப்பது மரபு. இம்முறை ஆண், பெண், குழந்தை என்ற நிலையில் சில சிறிய மாறுதலுக்கு உட்படும்.

இதனை விளக்கிடும் வண்ணம், புலவர் முஹம்மத் உசைன் அவர்கள்,

*"மன்னனு மமைச்சரு மற்ற*
*வீரரு மனங்க ரைந்து*

*அன்னிலை தவித்து மாண்ட*

*சுத்தினை யருவி யாட்டி*

*துன்னிய கபனு மிட்டு" - (பாடல் 171)*

எனப் பாடியுள்ளார்.

## பெட்டியில் வைத்தல்

கபனிடுதல் என்ற, துணியைக் கொண்டு போர்த்தப்பட்ட உடலானது நன்காட்டிற்குக் கொண்டு செல்ல ஏற்ற வகையில் ஓர் பெட்டியில் வைத்துக் கொண்டு செல்வர். அதனை உருது மொழியில் "ஜனாஸா" என்பர். குவிந்த அமைப்புடைய அப்பெட்டியின் மூடி திறந்து மூடும் வசதியுடையது. இப்பெட்டியானது பொதுவானதாக அமைந்து அனைவருக்கும் பயன்படும்.

இதனை விளக்கும் வண்ணம்,

" .... *அருவி யாட்டி*

*துன்னிய கபனுமிட்டு*

*துலங்கு சந்தேக்கி லேற்றி*

*உன்னியே வீர ரேக." - (பாடல் 171)*

*"அந்த நன்மொழி யுரைக்கவே சந்தக்கு மழகாய்*

*சுந்த ரப்பதி வீதியி லேகியே சூழ்ந்த*

*மந்தம் பொளிர் காவினில் மய்யத்தை யிறக்கி" - (பாடல் 180)*

என்ற பாடல்கள் அமைந்துள்ளன.

இறந்த உடலை உருது மொழியில் "மைய்யத்" என்பர்.

## ஜனாச தொழுகையும் – நல்லடக்கமும்

இஸ்லாமியர்களின் முக்கிய கட்டாயக் கடமைகளுள் ஒன்று தொழுகை. எனவே, இஸ்லாத்தைத் தாங்கிடும் தூண்களில் ஒன்று தொழுகை என்பர். இத்தொழுகையானது மனிதன் இறந்த போதும்

செய்யப்படுவதொன்று.

இறந்த மனிதன் சொர்க்கம் அடைய அனைவரும் ஒன்று கூடித் தொழுவர்.

தொழுது, இறந்த உடலை மூன்றடி அகலமும் ஆறு அடி நீளமும் ஐந்தடி ஆழமும் உடைய ஓர் குழியில் வைத்துப் புதைப்பது மரபு.

இதனை விளக்கும் வண்ணம்,

*“மந்தம்பொளிர் காவினில் மய்யத்தை யிறக்கி*

*வந்த மன்னவர் யாவரும் தொழுதனர் ....” - (பாடல் 180)*

*“வருந்தி நாயனை வாழ்த்தியே குழியொன்று வகுத்து*

*புரிந்த சந்தக்கைத் திறந்தனர் ....” - (பாடல் 181)*

என்ற பாடல்களை புலவர் முஹம்மத் உசைன் பாடியுள்ளார்.

## இஸ்லாத்தைத் தழுவும் முறை

இஸ்லாத்தின் மூலமந்திரம் “லாயிலாஹ இல்லல்லாஹ முஹம்மதுர் ரிசூலில்லாஹி” என்பதாகும். இதற்கு கலிமா என்று பெயர். வல்ல நாயன் அல்லாவைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறில்லை; முஹம்மத் (ஸல்) அவர்கள் இறைவனின் உண்மைத் தூதுவராவார் என்பதே இதன் பொருள்.

இஸ்லாத்தை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்பவர்கள் இம்மூல மந்திரத்தை முதலில் மனப்பூர்வமாக மதித்து ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். இதனைக் கற்றுணர்ந்த ‘ஆலிம்’ என்ற பெரியார்கள் முன்னால் கூறி, தனது மனம், செயலால் இஸ்லாமிய வழியில் நடப்பதாக உறுதி கொண்டு ‘ஈமான்’ என்ற இஸ்லாத்தின் உயிர்நாடியில் நம்பிக்கை கொள்ளுதல் வேண்டும். இதனை விளக்கியே புலவரும்,

“.. தேர்ந்த

*மறையுணர் பவரைக் கூவி*

*துய்யதோர் கலிமா வெல்லாந்*

தோகையு முரைக்கின் றாளால்"

"கலித் துறை யீமா னோற்று
மிசலா மோரை பந்துமிது
வரிந்து தொமந்த தன்தூதறி
றகுலை யுள்மனங் கொண்டபின்பு"

(பாடல் - 178, 179)

என விளக்கியுள்ளார்.

# சொல்லடைவு

(சொல், எண்; = காப்புப் பாடல்)


அகம் — 2, 7, 196

அகிற்புகை — 27

அகிலம் — 11

அங்கமுத்து — 5

அஞ்சுகம் — 79

அடர் — 83

அடியேன் — 178

அண்டம் — 139

அணி — 120

அத்தி — 61, 91, 130

அத்தை — 59

அத்திநகர் — 195

அதிகோபம் — 187

அம்பு — 79

அம்புவி — 96

அமிர்தம் — 9

அமைச்சர் — 113, 120, 122, 131, 138, 152, 153

அமைச்சர்கள் — 115

அமைச்சன் — 50, 116, 147, 149, 151, 171

அய்யன் — 178

அயர்வு — 84

அரங்கம் — 16

அரசர் — 8, 14, 30, 61 91, 158

அரசர்கள் — 128

அரசன் — 79, 80, 106, 110, 111, 132, 135, 147, 178

அரசன் மகள் — 110, 160

அரசி — 9, 78, 80

அரசு — 72, 77, 81

அரண் — 49, 92, 117

அரிவை — 63, 89

அரிவையர் — 34, 78, 81, 82, 110, 118

அருகில் — 64

அருவ நாயகம் — 51

அருவி — 171

அருள் — 2, 17, 63, 189

அலைகடல் — 142

அழகு — 37, 51, 69, 115, 137, 190

அன்னகிரி — 151

அன்னம் — 1,80, 86, 143

அன்னர் — 142

அன்னை — 58, 77, 81

அனங்கை — 78

அனல் — 99

அனியாயம் — 186

அனுதினம் — 1

ஆசை — 106, 111, 115, 117, 167, 174, 183

ஆடை — 12

ஆண்டு — 16

ஆதி — 11, 35, 112, 170

ஆதிநாயகர் — 183

ஆதிநாயகன் — 164

ஆதியோன் — 1

ஆபரணம் — 65, 88

ஆயிரத்திருநூறு — 16

ஆரதி — 48

ஆரிழை — 76

ஆல் — 83

ஆவி — 77, 87, 93, 123, 168

இதழ் — 43

இந்திர சாபம் — 42

இந்திரன் — 49, 141

இந்து — 62

இராசகுமாரி — 81

இரவலர் — 64

இரவு — 94

இருதயம் — 1, 12, 87

இருநிதிகுணம் — 64

இருபது — 16

இருவர் — 87

இருவிழி — 75

இருனூரு — 172

இரைச்சல் — 129

இல்லாண்மை — 2

இளம்பிறை — 14

இளவல் — 83

இளவிறால் — 48

இறை — 112
இறைவன் — 35, 194, 197
ஈதுறு கதைகள் — 116
ஈந்தவர் — 6
ஈனம் — 72
உடல் — 191
உண்மை — 116
உத்தமன் — 91
உத்திரம் — 107
உபதேசம் — 102
உயரம் — 13
உயிர் — 188, 191
உருப்பற்றவன் — 3
உருவம் — 160, 161
உலகம் — 8, 79, 196
உலகு — 101, 192
உலகோர் — 116
உற்றவர் — 108
உறுதி — 170
ஊர் — 102, 194
எண்ணை — 6
எத்திசை — 8
எதிரி — 88
ஏமன் — 58, 188
எழில் — 14, 72, 136
ஏக்கம் — 33
ஐந்து — 162
ஐந்துபூதம் — 16
ஐம்புலன் — 61
ஐம்பொறி — 162
ஒளி — 62, 79, 145
ஓங்கி — 10
ஓசை — 22
ஓடைகள் — 101
ஓலை — 114
ஓரடி — 153
கக்கன் — 4
ககன் — 18
கசை — 121
கஞ்சம் — 190
கஞ்சமலர் — 100
கடகரி — 142
கடல் — 106, 125, 15
கடுக்கை — 40

கடைக்கண் — 145

கடைத்தலைவாயில் — 173

கண் — 3, 7, 96, 103, 116, 170, 171

கண்ணல்லார் — 114

கண்ணுவாயும் — 3

கணவன் — 127

கணை — 75, 82

கத்திரி மாநகர் — 29

கதலி — 20

கதித்திடி — 18

கதிர் — 67, 69, 149

கதிரவன் — 103

கதை — 11, 12, 14, 15, 71

கந்தரம் — 44

கப்பம் — 61

கபாடம் — 50

கமலம் — 4

கயல் — 189

கயிறு — 104

கர்த்தன் — 3, 170

கரடி — 104

கரம் — 45, 86, 165

கரிக்குடவன் — 13

கரிய நாகம் — 46

கரு — 51, 161

கருங்குயில் — 47

கருடன் — 13

கருமம் — 148, 175

கருமலை — 123

கருமுகிலிடி — 123

கலன் — 157

கலாநிதி — 64

கலியாணம் — 181

கலை — 94,189

கலைகரடி — 105

கவரி — 69, 154

கவலை — 152

கவிவாணர் — 13, 71, 125

கழனி — 21, 138

களிப்பு — 53

கற்பகம் — 85

கற்பனை — 66

கற்பினாள் — 34

கற்பு — 17
கன்னல் — 21, 138, 146
கன்னி — 8, 73, 77, 81, 165, 177
கன்னியர் — 80, 98, 146
கனவு — க, 56, 81, 144
கனி — 19, 21, 60, 85
கனிமடவாள் — 106
காப்பு — க
காட்டு தீ — 42
காதல் — 98, 146
காது — 92, 116, 195
காந்தல் — 44, 106, 127, 144
காமம் — 58
காமன் — 93
கார்குழல் — க
காரிகை — 15, 58
காலன் — 164
காலை — 54, 60
காவல் — 73, 77
காவலன் — 137
காற்று — 71
கானம் — 58
கிளி — 157
கிள்ளை — 38
கீதம் — 71, 139, 140
கீர்த்தி — 10, 12, 136, 192
குங்குமம் — 68
குஞ்சரம் — 104
குணம் — 52
கும்பம் — 45, 68
குயில் — 57, 85
குயிலினம் — 139
குரவை — 23
குலங்கள் — 125
குலவிளக்கு — 177
குவடு — 21
குழல் மாதர் — 159
குழுத் தலைவர் — 122
குழுவினர் — 64
கூசல் — 167, 174
கூந்தல் — 9, 23, 74, 78, 85
கூடம் — 23

கூர்விழி — 32

கூரியவாள் — 121

கூலம் — 19

கேசன் — 8

கேடு — 188

கை — 88, 122, 137, 159

கையினான் — 34

கைவசம் — 55

கொங்கை — 26, 27

கொடி — 80

கொடுமை — 91

கொண்டல் — 139

கொம்பு — 76

கொலு — 189

கொழுங்கனி — 20, 139

கொழுந்து — 50

கொழுனர் — 26

கொற்றவர் — 25

கொற்றவன் — 61, 95, 92, 114, 126

கோசம் — 162

கோட்டை — 73

கோடான கோடி — 188

கோடு — 21

கோதை — 43

கோலம் — 43

சக்கரம் — 45

சங்கீதம் — 22

சங்கு — 45

சங்கை — 5, 96, 112

சடம் — 58

சடலம் — 3

சந்திர பதன் — க, 11, 26 38, 39, 49, 51, 55, 62, 72, 103, 114, 133, 159, 181, 189

சந்திர மாமுகம் — 49

சந்திர வதனம் — 28

சந்திரன் — 109

சமையம் — 55

சயனம் — 54

சர்த்தன் — 3

சனங்கள் — 162

சிகரம் — 80

சிகாமணி — 43, 63

சித்தம் — 96

சித்திரம் — 27, 45, 57, 61, 66

சித்திரமனை — 91

சிம்மம் — 104

சிரசு — 3, 10, 110

சிலம்பு — 23

சிலை — 51, 34, 82, 105

சிவிகை — 80, 125

சிறப்பதானோர் — 10

சின்னூல் — 15

சீவன் — 186

சீவிகை — 121

சுகம் — 30

சுடர் — 4

சுந்தர நகர் — 114, 133, 134, 135, 173

சுந்தரம் — 46, 62, 73

சுந்தர வதனம் — 173

சூரர் — 122, 129

செங்குலை — 135

செங்கை — 135

செப்பு — 79

செப்புமொழி — 99

செம்பொன் — 79

செம்மல் — 60, 83

செல்வி — 91

செவ்வியான் — 34

செவி — 3

செழுவானம் — 2

சென்னல் — 21, 101

சேனை — 13, 90, 91, 154, 189

சோலை — 60

சொர்ணம் — 57, 135

சொல் — 53

சொல்லாண்மை — 2

சொற்கம் — 4

சோற்றுணவு — 152

தங்கம் — 52, 67

தங்க மேனி — 103

தஞ்சம் — 29, 100

தண்டாயுதம் — 122

தண்டை — 155

தத்தர் — 25

தந்தி — 73, 134

தந்திரம் — 49, 134

தந்தை — 59, 77, 81

தய்யல் — 100, 178, 179

தரும்பூ — 43

தரை — 135

தரைப்பதி — 150

தலம் — 9

தலங்கள் — 141

தலை — 86, 96, 106, 188, 190

தலைவி — 166

தவம் — 59, 62, 90, 101, 114, 136, 149, 185, 186

தவளம் — 4

தவிப்பு — 75

தவில் — 124

தளம் — 72

தன்னுயிர் — 81

தாதிமார் — 73, 91

தாமரை — 60, 137

தாரகை — 56

தாள் — 9

தாளம் — 141

திக்கு — 12

திகைப்பு — 75

திங்கள் — 16, 17, 67, 69, 96, 99, 188

திசை — 93, 105

திருநபி — 16

திலகம் — 74

தீ — 142

தீமை — 5

தீனவர் — 11, 14

தீனோர் — 16

துட்டலர் — 8

துடி — 46, 129

துடை — 47

துதி — 71

தும்பி — 13

துய்யல் — 33

துயர் — 33

துயரம் — 81, 152, 169

தூக்கம் — 152, 169

தூதர் — 179

தூதன் — 4, 117

தெய்வம் — 89

தெரிவை — 53

தெரிவையர் — 64

தெரிவையர்கள் — 129

தேக்கய் — 75

தேர் — 73, 82

தேவலோகம் — 39

தேவன் — 63

தேவி — 72, 77

தேவிமார் — 118

தேவியர்கள் — 109

தேன் — 19, 20, 22

தொண்டர் — 134

தொன்னூல் — 15

தோகை — 57, 178

தோகையர் — 127

தோழி — 189

தோள் — 52

தோஷங்கள் — 163

தோஷம் — 188

நகர் — 14, 77, 133, 174

நகை — 28, 78, 84, 95, 111, 186

நங்கையர் — 9

நங்கையார் — 27

நடம் — 64

நடை — 80

நண்பதி — 103

நத்து — 3

நதி — 14, 77

நதிகள் — 60

நல்லமுதம் — 42

நயகுணம் — 52

நல்குழல் — 185

நல்லுடல் — 53

நவமணி — 185

நவுரி — 125

நற்கலன் — 57

நற்குணம் — 52

நற்றவம் — 38

நன்காடு — 103

நன்மகளிர் — 175

நன்மொழி — 180

நன்மை — 119
நாக்கு — 75
நாகரிகம் — 65
நாகவெண்மணி — 143
நாசி — 41
நாட்டம் — 87
நாடி — 162
நாடு — 17, 22, 60, 132, 194
நாதன் — 112
நாயகம் — 182
நாயன் — 181
நால்வர் — 109, 110, 118
நாலுசிதை — 132
நாவு — 2
நாள் — 16
நித்தம் — 192
நில் — 192
நிலம் — 14
நிலவு — 145
நிறம் — 140
நிறவர் — 65
நிருபன் — 172
நின்ங்குணம் — 52
நினைவு — 94
நீதி — 1, 35, 164, 183
நீர் — 18, 63, 14
நீளுவரி — 114
நூல் — 46
நூண்ட — 83
நெஞ்சம் — 72, 188
நெஞ்சு — 28, 29
நெற்றி — 74
நேரம் — 80
பகை — 31
பசும்பொன் — 21
பஞ்சம் — 61
பஞ்சவர்ணம் — 127
படை — 64, 80, 104, 122 131, 132, 133 137, 151, 153
படைத்தலைவர் — 121
பணி — 157
பத்திரம் — 147, 148
பதி — 62, 133

பதுமை — 110, 173
பம்பரம் — 45
பயிர் — 81
பரி — 25, 64, 73, 91, 105, 134
பருதி — 62, 124, 157
பருபதம் — 31, 45, 105
பருவம் — 64, 159
பவளம் — 79
பவளவாய் — 177
பழி — 98, 186, 187
பளிங்கு — 144
பறண்ட — 48
பறவை — 18, 194
பறவையினம் — 51
பன்னுதமிழ் — 14
பாக்கியம் — 185
பாசம் — 115, 183
பாட்டியல் — 15
பாதகம் — 98
பார் — க, 10, 12, 124
பார்வை — 6
பிசாசு — 58
பித்தம் — 59, 93
பித்து — 102
புகரிடம் — 18
புகழ் — 10, 11
புகை — 144
புகைச் சுடர் — 88
புடை — 14, 12, 3
புத்தி — 124
புயம் — 8, 9
புயன் — 54
புரவி — 8
புரிசை — 23, 62, 97, 135, 141, 151
புரிசை நன்நகர் — 100
புரிசை மாநகர் — 99
புருவம் — 40, 74
புலம்பு — 113
புவனத்தோர் — 32
புவனம் — 118
புவி — 1, 3, 4, 19, 62, 98, 112, 114, 166, 194
புவி நிறைந்த சோதி — 3
புனுகு — 63

பூ—22
பூட்டு—5
பூடு—21
பூமகள்—17
பூமி—124
பூரிகை—124
பூவை—57, 153
பூவைமார்—150
பூவையாள்—80
பெண்—102, 117
பெயர்—106
பெரியன்—1, 117
பெரியோர்—11, 15
பெருங்கடல்—145
பெருங்கூட்டம்—174
பெரும்படை—125
பெரும்புகழ்—90
பெருமுரசு—124
பெருமை—192
பொய்—2
பொருள்—12, 15, 89
பொருளாடை—194
பொளிர்காவு—180
பொற் குமுதம்—57
பொற் கொடி—179, 159
பொறைகுலம்—149
பொன்—84, 128
பொன்மழை—89
பொன்னுலகு—1
பேதம்—61
பேர்—172
பேரிகை—124
மக்கள்—122
மகரக் கொடி—127
மகள்—91, 185
மகளிர்—73
மகன்—69, 100
மகாபுரி—108
மகாபுரி அரசன்—104
மகிழ்நபி—9
மகுடம்—61
மங்களம்—136
மங்கை—26, 69, 96, 97, 119

மங்கை நாயகம் — 46
மங்கையர் — 52, 66, 81, 111
மஞ்சு — 100
மஞ்சை — 127, 190
மட்டயினர் — 52
மட்டலர் — 8
மடமயில் — 38, 64, 82
மடமான் — 50, 62
மடவாள் — க
மடி — 3
மண் — 7, 19, 23, 88, 103, 191
மண்ணுலோகம் — 7
மணவாளர் — 8
மணம் — 78, 119
மணி — 7, 12, 21, 124
மத்தகம் — 25
மதம் — 142
மரம் — 103
மருமலர் — 89
மலர் — 21, 43, 174
மலர்மொழில் — 185
மலை — 102, 105
மறை — 81
மறைநூல் — 152
மறைபொருள் — 17
மன்மதன் — 64, 75, 84, 89, 102
மன்னர் — 38, 32, 75, 122
மன்னவன் மகள் — 101
மன்னன் — 38, 77, 78, 81, 131, 149
மன்னன் மகள் — 111, 175, 185
மன்னுயிர் — 1, 50
மனு — 101
மனைவியர் — 109
மாதர் — 22, 27, 39, 55, 68, 111, 146, 155
மாதா — 1
மாது — 6, 11, 60, 89, 98, 115, 120, 140
மாதுளம் — 83
மாந்தளிர் — 48
மாநிலங்கள் — 114

மாமன் — 5

மாயை — 57

மான் — 57, 72, 136

மிருகம் — 105

மின்னல் — 24, 56, 128

முக்கடல் — 18

முடிவினாள் — 30

முத்துநபி — 8

முதலாதி — 100

முரசு — 25, 61, 120, 142

முருகு — 136

முல்லை — 28, 74, 131, 145, 157

முழக்கம் — 13, 18, 25, 129

முன்னாள் — 186

முத்து — 28, 69, 85, 95, 128

முத்துமணி — 125

மும்மாரி — 18

முகந்தனன் — 56

முகம் — 188

முகவரி — 158

முகில் — 130

முகிலினம் — 18

முகையர் — 823

முகையார் — 33, 35, 81, 106, 108, 109, 115, 152, 158, 159, 160, 164, 168

மூதவர் — 4

மூதுரை — 100

மூர்ச்சை — 191

மெய் — 3

மேதினம் — 38

மேனி — 127

மேடை — 26

மேரு — 104

மொழி — 3, 95, 135, 130

மோசம் — 166

மைந்தன் — 6, 14

யாகம் — 119, 136

ரம்பை — 57

ராகங்கள் — 163

ரத்தினம் — 14, 61

ரம்பையர் — 38

வசனம் — 137

வஞ்சனை — 100

வஞ்சி — 33, 38, 48, 106

வடிவம் — 51, 81

வடிவு — 77, 128, 186, 188, 191

வண்டு — 22, 85, 139

வண்ணப் பத்திரம் — 137

வண்ணம் — 57

வதனம் — 44, 78, 85

வதை — 11

வம்பு — 45

வயல் — 33

வர்க்கம் — 57

வரம் — 153, 187

வரம் — 153, 187

வரலாறு — 108

வரிப்புலி — 104

வருஷம் — 16

வல்லிக்கொடி — 97

வலி — 110

வலை — 86, 105, 115

வலைகடல் — 123

வளநாடு — 101

வளம் — 97, 109

வள்ளை — 41

வாகை — 168

வாசக ஓலை — 135

வாசகம் — 50

வாணர் — 15

வாய் — 3, 187

வாயில் — 73, 79

வார்த்தை — 137, 178

வாரி — க, 10, 25, 63

வாரி சூழுலகம் — க

வாலிபன் — 10, 53, 83

வாலி — 22, 23, 69, 90, 132

விசனம் — 117

விண் — 96, 103, 139

வில் — 28, 74, 120

விலங்கினம் — 1, 18

விலாசம் — 63

விழி — 28, 79, 95, 190

விழியாள் — 72

விழியான் — 152

விழியினர் — 6

விளக்கொளி — 107

விளைமுத்து — 21

விளையாட்டு — 87

விஷயங்கள் — 162

வீதி — 60, 73, 141, 143, 173, 180

வீதிமலர் — 132

வீரம் — 8, 88

வீரர் — 71, 121, 123, 171

வீழ்சுனை — 20

வெழிப்பலகை — 7

வெள்ளம் — 121

வெற்றி — 61, 95, 134, 194

வேட்டை — 104

வேடர் — 105

வேந்தன் — 107

வேயம் — 44

வேல் — 28, 74

வேலை — 128

வேழம் — 129

# பிறமொழிச் சொற்கள்

## அரபுச் சொற்கள்


அசனுசனார் — 9

அபுபக்கர் — 5

அர்சு — 1, 4

அல்லாகு — 2

அவுதல் காதர் — 14

அஷேஷய — 15

ஆஷாக்கு — க, 86, 117, 182

இஸ்லாம் — 179

இறசூல் — க, 178, 180, 193

ஈமான் — 179

உதுமான் — 7

உமர் — 6

ஒலிமார் — 10

கலிமா — 178

கபன் — 171

கிசறத் — 5

குரோதனா — 15

சந்தக்கு — 171, 188, 180

சவுதபதி — 30

சீவன் — 1

சுபகீல் — 7

சுலுத்தான் — 135, 141, 147, 183, 193

தீன் — 6

துல்துல் — 7

மக்கா — 4

மகம்மது — 7

மகம்மதுசன் 14

மய்யத் — 180

முகம்மது மீறா — 12, 90, 126, 194

விலாயத் — 10

ரங்குராயன் — 37, 77, 135, 154, 171, 176, 184

# துணை நூல் பட்டியல்

1. இராஜ நாயகம்—வண்ணக் களஞ்சியப் புலவர், பதிப்பாசிரியர்—கவிஞர் நாச்சிகுளத்தார் சென்னை.

2. இலக்கியக் கொள்கை—தொகுதி 7, 8, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்—சென்னை—1986.

3. இஸ்லாமிய இலக்கிய வரலாறு—தொகுதி-1, 2, எம்.எம். உவைஸ் அஸ்முல்கான்—மதுரை காமராசர் பல்கலைக்கழக வெளியீடு—1988.

4. இஸ்லாமும் இன்பத் தமிழும்—அல்ஹாஜ் கலாநிதி முகம்மது உவைஸ்—யுனிவர்ஸல் பப்ளிகேசன், சென்னை—1976.

5. இஸ்லாமியக் கலைக் களஞ்சியம்—தொகுதி-1, 2, 3 அப்துற்றகீம்—யுனிவர்ஸல் வெளியீடு, சென்னை—1976.

6. இஸ்லாமிய சிற்றிலக்கியம்—மு. சாயபு மரைக்காயர்—ஸ்டார் பிரசுரம்—1986.

7. இஸ்லாமியத் தமிழ் சிற்றிலக்கியம்—அஸ்முல்கான்—முல்லை பதிப்பகம், மதுரை—1985.

8. உணர்வூட்டும் உபதேசங்கள்—என்.எ.எம். மக்தூம்ஷாஹ் (பாக்கவி) கம்பம்—டில்லிகுதுப்கானா வெளியீடு—புதுதில்லி—1986.

9. கம்பராமாயணம்—கம்பன் கழக வெளியீடு, சென்னை—1976.

10. கலைக் களஞ்சியம் தொகுதி—3, 5, தமிழ் வளர்ச்சிக் கழக வெளியீடு, சென்னை—1954.

11. குறுந்தொகை—இரண்டாம் பதிப்பு—நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்—1981.

12. சிந்தைக்கினிய சீறா—மீராஃபௌண்டேஷன் வெளியீடு, சென்னை—1978.

13. சிலப்பதிகாரம்—உ.வே.சா.பதிப்பு—தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு, தஞ்சாவூர்—1985.

14. சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள்—(முதலாவது மாநாடு) கழக வெளியீடு, சென்னை—1971.

15. சிற்றிலக்கிய வளர்ச்சி—மு. சண்முகம் பிள்ளை, மாணிக்க வாசகர் நூலகம், சிதம்பரம்—1981.

16. சீவக சிந்தாமணி மூலமும், நச்சினார்க்கினியாருரை யும்—உ. வே. சா. பதிப்பு—தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு, தஞ்சாவூர்—1986.

17. சீறாப்புராணம்—உமறுப்புலவர்—பதிப்பாசிரியர் முஹம்மத் ஹுசைன் மரைக்காயர் பதிப்பக வெளியீடு, சென்னை—1987.

18. சீறா ஆய்வுத் திரட்டு—ஜாகிர் உசைன் கல்லூரி வெளியீடு, இளையான்குடி—1983.

19. தப்ஸீரில் ஹமீத் பீ தப்ஸீரில் குர் ஆனில் மஜீத்—பாகம்—3, 4, எஸ்.எஸ். முஹம்மத் அப்துல் காதர் ஸாஹிபு—ஷாஹுல் ஹமீதிய்யா பதிப்பகம், சென்னை—1983.

20. தமிழ் இலக்கிய வரலாறு—பூவண்ணன்—வர்த்த மானன் பதிப்பகம்—1981.

21. தமிழ் இலக்கிய வரலாறு—ஆறாம் பதிப்பு—மு. வரத ராசன்—சாகித்திய அக்காதெமி வெளியீடு, புதுதில்லி—1986.

22. தண்டியலங்காரம்—கழக வெளியீடு, சென்னை—1973.

23. தமிழ் நாட்டுப்பாடல்கள்—மு. வை. அரவிந்தன்—லஷ்மி பதிப்பகம், சென்னை—1977.

24. தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், சோமலெ—நேஷனல் புக்டிரஸ்ட், புதுதில்லி—1981.

25. தமிழ்ப் பேரகராதி—தொகுதி—2, 5, சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு, சென்னை—1982.

26. தமிழிலக்கிய அரபுச் சொல் அகராதி—டாக்டர் எம். எம். எம். உவைஸ் பதிப்புதுறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை—1983.

27. திரமணக் காட்சி—சேகாதி நெயினாப் புலவர்—ஸ்டார் பதிப்பகம், சென்னை—1985.

28. தொல்காப்பியம் மூன்றாம் பதிப்பு—கழக வெளியீடு, சென்னை—1967.

29. தொல்காப்பியம்—பொருளதிகாரம்—இளம்பூரணர் உரை, மூன்றாம் பதிப்பு—கழக வெளியீடு, சென்னை—1969.

30. தொல்காப்பியம்—பொருளதிகாரம்—பேராசிரியர்—ஐந்தாம் பதிப்பு—கழக வெளியீடு—1975.

31. நடையியல்—ஜெ. நீதிவாணன், முல்லை வெளியீடு, மதுரை—1976.

32. நற்றிணை—இரண்டாம் பதிப்பு—நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை—1981.

33. நாட்டுப்புற இயல் ஆய்வு—சு. சக்திவேல், மாணிக்க வாசகர் பதிப்பகம், சென்னை—1983.

34. நாட்டுப்புற இயல்—ஓர் அறிமுகம்—சு. சண்முக சுந்தரம், இலக்கிய மாணவர் வெளியீடு, சென்னை—1975.

35. நாட்டுப்புறவியல் சிந்தனைகள்—டாக்டர் அ. நா. பெருமாள், தேன்மழை வெளியீடு, சென்னை—1987.

36. நீலகேசி விளக்கவுரை—கழக வெளியீடு, சென்னை—1973.

37. நெஞ்சையள்ளும் சீறா—சீறாச்செல்வர், சிலம்பொலி சு. செல்லப்பனார், மீரா பப்ளிகேசன், சென்னை—1985.

38. பண்பாட்டுக் கலப்பும் இலக்கிய ஒருமையும்—டாக்டர் ஜி. ஜான் சாமுவேல், ஐந்திணை பதிப்பகம்—1986.

39. பாரதியார் கவிதைகள் இரண்டாம் பதிப்பு—பூம்புகார் பிரசுரம், சென்னை—1976.

40. மிகுறாசு மாலை—ஆலிம்புலவர்—மீரா பப்ளிகேசன், சென்னை—1987.

41. வண்ணக் களஞ்சியம் புலவரின் குத்பு நாயகம் என்னும் முகியித்தீன் புராணம்—டாக்டர் மு. அப்துல் கறீம்—நூர்ஜஹான் டிரஸ்ட், சென்னை—1986.

42. வண்ணப்பரிமளப் புலவரின் ஆயிரமசலா—பதிப்பாசிரியர். எம். சையிது முஹம்மது உசைன்—எம். இதீரீஸ் மரைக்காயர் வெளியீடு, சென்னை—1984.

43. வளையாபதி, குண்டல கேசி—கழக வெளியீடு, சென்னை—1982.

44. விறலிவிடு தூது—கழக வெளியீடு, சென்னை—1981.

45. வேதபுராணம்—காயற்பட்டினம் பெரிய நூகு லெப்பை ஆலிம் சாகிபு—பிஸ்மி பப்ளிகேசன், சென்னை—1984.

## கட்டுரை

1. கருத்தரங்கக் கட்டுரை—பூ. சுப்பிரமணியம் (கட்)

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை—1988.

## ஆய்வேடு

1. ''சுவடி இயல்''—டாக்டர் பூ. சுப்பிரமணியம்

முனைவர் பட்ட ஆய்வேடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113.

2. தோட்டுக்காரியம்மன் கதை—அலமேலு—சுவடிஇயல் பட்டய சுவடி பதிப்பாய்வேடு—உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113.

**ENGLISH BOOKS:**

1. A DESCRIPTIVE CATALOGUE OF HINDUSTHAN MANUSCRIPTS — GOVT., Oriental manuscripts library, Madras — 1979.

2. GLIMPSES INDIAN HISTORY — BABANI BATTACHARIYA — THE NATIONAL BOOK HOUSE, BOMBAY — 1984.

INDIA — இந்தியா




★ இலக்கியத்தில் ஊர்பெயர்கள் — கு. பகவதி, உ.த.நி. வெளியீடு.

ஆதாரம்: சமூக அறிவியல், தமிழ்நாடு பாடநூல் நிறுவனம்.
ஆறாம் வகுப்பு பக்-45 (1991)

சிதைந்த சுவடி



# புதிய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| Mysticism of Love in Saiva Tirumurais — Dr. V. C. Sasivalli | ... | 50.00 |
| எண்பத்து மூன்றில் தமிழ் பகுதி-2 — முனைவர் அன்னி தாமசு | ... | 30.00 |
| தொல்காப்பியம்-பொருள்-களவியல் — பேரா. சிவலிங்கனார் | ... | 85.00 |
| **The Contributions of the Tamils to Indian Culture** | | |
| Vol. I Language and Literature — Dr. K. Subbiah Pillai | ... | 18.00 |
| Vol. II Art and Architecture — Dr. K. Bhagavathi | ... | 30.00 |
| Vol. III Socio Cultural Aspects — Dr. M. Valarmathi | ... | 90.00 |
| Vol. IV Religion and Philosophy — Dr. V. C. Sasivalli | ... | 80.00 |
| எண்பத்து மூன்றில் தமிழ் பகுதி-I — முனைவர் அன்னி தாமசு | ... | 47.00 |
| சிவகிரி குமர சதகம் — திரு. மெய். சந்திரசேகரன் | ... | 39.00 |
| புதுவூர்ச் சக்கரவர்த்தி அம்மானை — திரு. மொ. மருதமுத்து | ... | 27.00 |
| தேரையர் அந்தாதி — மருத்துவர் மா. புனிதா | ... | 33.00 |
| குசலவர் சுவாமி கதை — செல்வி இரா. வசுமதி | ... | 36.00 |
| குணவாகடம் — முனைவர் வே. நெடுஞ்செழியன் | ... | 40.00 |
| தோட்டுக்காரி கதை — முனைவர் வ. அலமேலு | ... | 28.00 |
| சங்கத்தமிழரின் மனிதநேய மணிநெறிகள் முனைவர் சாலினி இளந்திரையன் | ... | 24.00 |
| உலகத்தமிழ் மாநாட்டுக் கட்டுரைகள் அடைவு முனைவர் தி. மகாலட்சுமி | ... | 35.00 |
| **Selected Poems of Bharathidasan — Translation:** | | |
| Tamil to English — Dr. V. Murugan | ... | 60.00 |
| Tamil to Malayalam — Dr. P. P. Thambi & D. Ramakrishnan | ... | 60.00 |
| Tamil to Kannada — Mr. V. Pasumalai Arasu | ... | 60.00 |
| Tamil to Telugu — Dr. C. R. Sarma | ... | 60.00 |
| Chieftains of the Sangam Age — Dr. K. D. Thirunavukkarasu | ... | 20.00 |
| பாரெலாம் பரந்த தமிழர் — உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் | ... | 25.00 |
| காண்டேகரும் கா. ஸ்ரீ. ஸ்ரீ. யும் — முனைவர் மு. வளர்மதி | ... | 18.00 |
| A Comparative Study of Tamil and Japanese Dr. Pon. Kothandaraman | ... | 15.00 |
| தமிழும் பிற துறைகளும் — முனைவர் ந. கடிகாசலம் | ... | 35.00 |
| பெண்ணியம் — முனைவர் இரா. பிரேமா | ... | 25.00 |
| விலங்கியலும் தமிழியலும் — முனைவர் ஏ. த. சோதிநாயகம் | ... | 10.00 |
| தமிழும் தெலுங்கும் — முனைவர் தா. சா. மாணிக்கம் | ... | 15.00 |
| தமிழ் ஆய்வுக் களங்கள் — முனைவர் ந. கடிகாசலம் | ... | 70.00 |
| வ.உ.சியும் தமிழும் — முனைவர் அ. சங்கரவள்ளிநாயகம் | ... | 18.00 |
| தொல்காப்பியத்தில் இசைக்குறிப்புக்கள் முனைவர் வீ. ப. கா. சுந்தரம் | ... | 14.00 |
| புதுமைப்பித்தன் கதைகளில் சமுதாய விமரிசனம் முனைவர் நா. ஆறுமுகம் | ... | 20.00 |
| கனகாபிஷேக மாலை — திறனாய்வு — முனைவர் பீ. டாக்டர் நசீம்தீன் | ... | 16.00 |
| இருபதின் கவிதைகளில் சமூகநீதிக் கோட்பாடு முனைவர் து. சீனிச்சாமி | ... | 20.00 |
| பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் முனைவர் ச. சிவகாமி | ... | 60.00 |
| தொல்காப்பியம் — பொருள் — பொருளியல் பேரா. ஆ. சிவலிங்கனார் | ... | 32.00 |